
# 2001 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 7</u>

**18.01.2001** யதார்த்த ஸ்மிருதி மூலமாக (உண்மையை உள்ளவாறு அறிந்து செய்யும் நினைவு) சமர்த் சொரூபமாகி (சக்திசாலியான சொரூபம்) சக்திகள் மூலமாக, அனைவரையும் பரிபாலனை செய்யுங்கள்!

**04.02.2001** நேரத்திற்கு ஏற்றவாறு சுய ராஜ்ய அதிகாரி ஆகி எல்லா ஆன்மீக சாதனைங்களையும் தீவிர வேகத்தில் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்!

**20.02.2001** சிவஜெயந்தி விரதம் எடுத்துக் கொள்வது மற்றும் சர்வ சமர்ப்பணம் ஆவதின் ஞாபகார்த்தமாகும்!

**04.11.2001** சத்யவாதி ஆகுங்கள், இன்றைய சமய பிரமாணம் பேகத் விருத்தி, திருஷ்டி மற்றும் கிருத்தி (செயல்) உண்டாக்குவதற்கான திட சங்கல்பம் எனும் தீபம் ஏற்றுங்கள்!

**25.11.2001** ஆசீர்வாதம் வழங்குங்கள், ஆசிர்வாதம் பெறுங்கள். காரணத்திற்கான நிவாரணம் கண்டு, பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள்!

**15.12.2001** ஒரே ஒருவர் என்ற விரதம் பூண்டு, பவித்திரத்தாவின் தாரணை மூலம்

**ஆன்மீகத்தன்மையுடன் மனதினால் சேவை செய்யுங்கள்!**

**31.12.2001** இந்த புத்தாண்டில் வெற்றியடைவீராக என்ற வரதானத்தின் மூலம் தந்தை மற்றும் தன்னுடைய பிரத்யக்ஷதாவை சமீபத்தில் கொண்டு வாருங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# யதார்த்த ஸ்மிருதி மூலமாக (உண்மையை உள்ளவாறு அறிந்து செய்யும் நினைவு) சமர்த் சொரூபமாகி (சக்திசாலியான சொரூபம்) சக்திகள் மூலமாக, அனைவரையும் பரிபாலனை செய்யுங்கள்!

இன்று எல்லோருடைய உள்ளத்திலும் நினைவுகள் வருகின்றன. அமிர்தவேளை முதல் நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் விதவிதமான நினைவுகள் பாப்தாதாவின் கழுத்தில் மாலைகளாக விழுந்து கொண்டிருந்தன. அத்தோடு, உள்ளத்திலிருந்து எழுந்த அன்பு நிறைந்த பாடலையும் கேட்டுக் கொண்டிருந்தார். பாப்தாதா இரண்டு குழந்தைகளுக்கும் பிரதி உபகாரமாக விதவிதமான சக்திகளையும், விதவிதமான வரதானங்களையும் மாலைகளாக அணிவித்துக் கொண்டிருந்தார். இந்த நினைவு நாள் சாகார உலக அரங்கில், சமர்த்த சொரூபம் எனும் வரதானத்தின் மூலம் மகன் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய விசேஷ நாளாகும். ஏனென்றால் சாகார ரூபத்தில் சேவையில் நிமித்தமாக்குவதற்காக, குழந்தைகளை சேவைக்கான ஆசனம் எனும் அரியாசனத்தில் அமர்த்தவும், பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அடையாளமாக விளங்கும் கிரீடத்தையும் அணிவிக்கின்ற நாளாகும். சாகார ரூபத்தில் சேவையில் நிமித்தம் ஆவதற்காக, கிரீடம் மற்றும் திலகம் அணிந்து கொள்ளும் நாளாகும். எல்லாக் குழந்தைகளும், தந்தைக்கு சகயோகியாக நிமித்தமாயிருக்கிறார்கள் மேலும் அவ்வாறே இருப்பார்கள். பாப்தாதா, சேவையில் ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் முன்னேறிக் கொண்டேயிருக்கும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்.

ஒவ்வொரு குழந்தையும் நம்பர்வாராக தைரியம் மற்றும் உற்சாகத்தோடும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றார்கள். மெஜாரிட்டி குழந்தைகள் நினைவு மற்றும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். இன்றைய தினம் குழந்தைகள் விசேஷமாக, நாலா பக்கங்களிலும் பிரம்மாபாபாவின் நினைவில், அன்பில் மூழ்கியிருக்கின்றார்கள். இதுபோலவே விசேஷமாக பிரம்மாபாபாவும் குழந்தைகளின் அன்பில் மூழ்கியிருக்கின்றார்.

இன்று பிரம்மாபாபா குழந்தைகளிடமுள்ள விசேஷங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வாறு ஒவ்வொரு குழந்தையினுடைய விசேஷம் எதிரில் வந்து கொண்டிருந்தபோது, பிரம்மாபாபாவின் வாயிலிருந்து ஆஹா குழந்தைகளே ஆஹா (வாஹ் பச்சே வாஹ்), சபாஷ் குழந்தைகளே சபாஷ் (சபாஷ் பச்சே சபாஷ்) என்ற வார்த்தை வெளி வந்து கொண்டிருந்தது. பிறகு என்ன நடந்தது? எப்போது பிரம்மாபாபாவின் வாயிலிருந்து ஆஹா குழந்தைகளே ஆஹா, சபாஷ் குழந்தைகளே சபாஷ் என்ற வார்த்தை வெளிவந்து கொண்டிருந்ததோ, அதே சமயத்தில் குழந்தைகளின் கண்களிலிருந்து அன்புக் கண்ணீரானது கங்கையாக, யமுனையாக வெளி வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு குழந்தையும் அன்பு வெள்ளத்தில் மூழ்கியிருந்தளர். வதனத்தின் காட்சி இப்படித் தானிருந்தது. சாகார உலகிலும் கூட ஒவ்வொரு கேந்திர ஸ்தானத்திலிருந்தும் அவரவர்களுடைய நினைவு மற்றும் அன்பு எனும் காட்சியை பாப்தாதா பார்த்தார். இப்போது இனி என்ன செய்ய வேண்டும்? நினைவு என்னமோ இருக்கிறது ஆனால் உண்மையான நினைவின் அடையாளமாக, நினைவு மூலமாக (சமர்த்) சக்தி சொரூபம் ஆக வேண்டும். நினைவு மிகவும் சிரேஷ்டமானது. எப்போது பிராமணர் ஆகி விட்டீர்களோ, அப்போது முதலே பாப்தாதாவிடமிருந்து உங்களுடைய ஜென்ம ஸித்த அதிகாரம் எதுவோ, அதனை அடைந்து விட்டீர்கள். அந்த ஒரு வினாடி நினைவு மூலமாக அடைந்து விட்டீர்கள். உள்ளம் அறிந்து கொண்டது. உள்ளத்தில், மனதில், புத்தியில், நான் பாபாவினுடையவன், மற்றும் பாபா என்னுடையவர் என்ற நினைவு வந்து விட்டது. இந்த நினைவு மூலமாகவே தான் ஜென்ம ஸித்த அதிகாரத்திற்கு அதிகாரியானீர்கள். (பிறப்புரிமையை அடைந்தீர்கள்). இந்த நினைவு சர்வ சக்திகளின் சாவியாகி விட்டது. இந்த நினைவு தான் கோல்டன் கீ (தங்க சாவி) நான்

பாபாவினுடையவன் என்பதன் பொருள், நான் ஆத்மாவாக இருக்கின்றேன் என்பதாகும். எப்போது நான் பாபாவின் குழந்தை என்பது நிச்சயமாகி விட்டதோ, இந்த நிச்சயத்திற்கு எவ்வளவு நேரம் ஆனது? கோர்ஸ் (ஏழு நாள் பாடம்) எடுத்துக் கொள்வதற்கு நேரம் ஆனது ஆனால் எப்போது, ஆத்மா பாபாவின் குழந்தை என்பது நிச்சயமாகி விட்டதோ அப்போது இதற்குத் தேவைப்பட்ட நேரம் எவ்வளவு? ஒரு விநாடியின் வியாபாரம் ஆனது அல்லவா! ஆகவே, ஒரே வினாடி நேரத்தில் ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டீர்கள். எல்லோரும் அதிகாரியாகி விட்டீர்கள். ஆகி விட்டீர்கள் தானே! எல்லோரும் அதிகாரிகளாக ஆகி விட்டீர்களா? அல்லது ஆகிக் கொண்டிருக்கின்றீர்களா? அதிகாரி ஆகி விட்டீர்களா? இது நிச்சயம் என்று எடுத்துக் கொள்ளலாமா? அச்சா!

இரட்டை அயல்நாட்டவர்கள் ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டீர்களா? பாண்டவர்கள் அதிகாரி ஆகி விட்டீர்களா? உறுதியாக? உறுதியாக? உறுதியாக? மிக நல்லது. அதிகாரிகளுக்கு வாழ்த்துக்கள்! அதிகாரமாக, தந்தையிடமிருந்து, விசேஷமாக எல்லா சக்திகளையும் அடைந்து விட்டீர்களா? கிடைத்து விட்டது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள்! சர்வ சக்திகளும் கிடைத்து விட்டதல்லவா? அல்லது யாருக்காவது எட்டு சக்திகள், வேறு யாருக்காவது ஆறு சக்திகள் மட்டுமே கிடைத்திருக்கிறதா? உங்களை நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவாள் என்று தானே கூறுகின்றீர்கள்! சக்திவான் என்று கூறுவதில்லை. சர்வ சக்திவாள் என்று கூறுகின்றீர்கள். இங்கே முன்னால் அமர்ந்திருப்பவர்கள், சர்வ சக்திவான்களா? பாப்தாதா சர்வ (எல்லா) என்ற வார்த்தையைப் பற்றி கேட்கின்றார். எல்லோருமே சர்வ சக்திவான்களா? அல்லது சக்திவான் யாராவது இருக்கின்றார்களா? யாராவது இருக்கின்றார்களா? சர்வ சக்திவான் என்று சொன்னாலும் நான் அப்படியில்லை. சக்திவானாக மட்டுமே இருக்கின்றேன் என்று சொல்லக் கூடியவர்கள் யாராவது இருக்கின்றார்களா? இல்லை. யாருமே கை உயர்த்தவில்லை. எல்லோருமே மாஸ்டர் சர்வ சக்திவான்கள்தானே, அச்சா. சரி. இப்போது பாப்தாதா கேட்கின்றார். ஹே மாஸ்டர் சர்வ சக்திவான்களே! ஒவ்வொரு தத்துவத்தையும், மாயாவையும், சுபாவ சம்ஸ்காரத்தையும், வாயுமண்டலத்தில் ஏற்படும் எல்லா பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் சக்தியுடைய சர்வ

சக்திவான்கள் தானே! இந்த தத்துவம், மாயை, சம்ஸ்காரம், வாயுமண்டலம் மற்றும் சங்கதோஷம் என்ற இந்த ஐந்தின் மீதும் தன்னுடைய சக்தியின் ஆதாரத்தில் அடிமையாக்கி விட்டீர்களா? ஆக்கி விட்டீர்களா? இது ஐந்து தலை நாகம். இந்த ஐந்து தலை நாகத்தின் அதிகாரியாக, அதன் மீது நடனம் (டான்ஸ்) ஆடுகிறீர்களா? அல்லது அதில் ஏதாவது ஒரு தலை வெளியே நீட்டி உங்கள் மீது டான்ஸ் ஆடுகிறதா? பாம்பு கூட மிக நன்றாக டான்ஸ் ஆடுகிறதல்லவா? ஆதலால், இப்படி ஏதாவது ஒரு தலை உங்களுக்கு டான்ஸ் ஆடி காட்டுவதற்காக வருவதில்லை தானே! ஒருபோதும் அதனுடைய நாட்டியத்தைப் பார்ப்பதற்கு விரும்புவதில்லை. இந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டேயிருக்கப் போகிறீர்களா? அல்லது ஐந்து தலை நாகத்தைத் தன் கழுத்து மாலையாக்கிக் கொள்ளப் போகிறீர்களா? பாம்பை படுக்கையாக்கி, அதன் மீது நாட்டியமாடும் மேடையாக ஆக்கி விட்டீர்களா? உங்களுடைய கடைசி நிலையான மகாதேவ், தபஸ்வி தேவ், அசரீரி ஸ்திதியுடைய தேவாத்மா, ஃபரிஷ்தா ஆத்மா என்ற இந்த ஞாபகார்த்தம் தான் பாம்பை கழுத்தில் அணிந்திருக்கும் மாலையாகக் காட்டியிருக்கின்றார்கள். எப்போது இந்த மாலை அணிந்து கொள்கிறீர்களோ, அப்போது பாபாவின் மாலையில் நல்ல நம்பரில் அருகாமையிலிருக்கும் மணியாக ஆனீர்கள்.

பாப்தாதா இதற்கு முன்னரே கூறியிருப்பதுபோல, தற்சமயம், காலத்தின் அவசியத்திற்கேற்ப விசேஷமாக பொறுமை சக்தி மற்றும் பிரச்சினைகள் அல்லது குழப்பங்களை எதிர்கொள்ளும் சக்தி கர்மத்தில் அவசியமாக இருக்கிறது. (சகன் சக்தி, சாம்னா கர்னே சக்தி) எண்ணத்தில், பேச்சில் மட்டும் இருந்தால் போதாது, செயலிலும் இருக்க வேண்டும். பாப்தாதா பார்த்ததில், குழந்தைகளிடம் சக்திகள் இருக்கின்றன. சக்திகள் இல்லை என்று சொல்லவில்லை ஆனால் பிறகு என்ன குறை? சமயம் வரும்போது, காரியத்தில், அந்த சமயத்தில் எந்த சக்தியை, எந்த விதிப்படி உபயோகிக்க வேண்டும் என்பதில் வித்தியாசம் இருக்கின்றது. ஸ்மிருதி (நினைவு) இருக்கிறது ஆனால் அதை சமர்த் (சக்திசாலி) சொரூபத்தில் கொண்டு வருவதில்லை. நினைவு (ஸ்மிருதி) அதிகமாக இருக்கிறது ஆனால் சமர்த் சொரூபம் சில சமயம் குறைவாகவும், சில சமயம் சரியாகவும் இருக்கிறது. ஸ்மிருதி, ஆஸ்திக்கு அதிகாரியாக்கி விட்டது ஆனால் ஒவ்வொரு

ஸ்மிருதியையும்,. சமர்த் சொரூபமாக, வெற்றியளிக்கக்கூடியதாக ஆக்க வேண்டும். இது தான் விஜய மாலையில் சமீபத்தில் வரக்கூடிய மணியாக ஆக்குகிறது. ஆதலால் சக்திசாலி நிலையை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். மனதில், புத்தியில் இருக்கிறது ஆனால் உங்களுடைய சொரூபத்தில் ஒவ்வொரு காரியத்தில் ஒவ்வொரு சக்திசாலி நிலையும் பிரத்யக்ஷ ரூபத்தில் (நடைமுறையில்) வர வேண்டும். நினைவு நாள் (ஸ்மிருதி திவஸ்) மிக நன்றாக கொண்டாடினீர்கள். இப்போது சக்திசாலி நிலையை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். (சக்தியின் சொரூபமாக மாறுங்கள்) நீங்கள் யாரையாவது பார்க்கும்போது அவர்களுக்கு உங்களுடைய கண்கள் மூலமாக சமர்த் சொரூபம் அனுபவம் ஆகட்டும். உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களை சக்திசாலிகளாக்கட்டும். சக்தியின் அனுபவத்தை அளிக்கட்டும். சாதாரண வார்த்தைகள் அல்ல. உங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும், நீங்கள் அடைந்த சமர்த் சொரூபத்தின் வரதானம் மூலம் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்வியுங்கள். மனம், புத்தி மூலமாக சிரேஷ்ட சங்கல்பம் மற்றும் சரியான நிர்ணயம், சக்தி நிறைந்த வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். சாதாரண நடத்தையிலும் கூட, ஃபரிஷ்தா என்பதன் சமர்த் சொருபம் தெரியட்டும். டபுள் லைட் (ஆத்மாவும் லைட், உடலும் லைட்) சொரூபம் தனக்கும், மற்றவருக்கும் கூட அனுபவம் ஆகட்டும். இப்படியிருக்கிறதா? ஆகவே இங்குமங்கும், எங்கு சென்றாலும் சமர்த் சொரூபமாகுங்கள். மற்றவரையும் சக்திசாலி (சமர்த்தி) ஆக்குங்கள். பாப்தாதா பிரம்மாபாபாவுடன் (பாப்தாதா இருவரும் இணைந்தே இருக்கின்றனர்) சுற்றி வந்தார். எதற்காக சுற்றி வந்தார்? பிரம்மாபாபா அவ்யக்தம் ஆன பிறகு (உள்நாடு, வெளிநாடு இரண்டிலும்) அவ்யக்த ஜென்மம் எடுத்த எல்லா பிராமணர்களையும் காட்டினார். இவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்? சாகாரத்தில் இருந்ததைவிட அவ்யக்த ரூபத்தில் படைக்கப்பட்டவர்கள் மிக அதிகமாக இருந்தனர். ஒவ்வொரு கேந்திரத்திலும், பாபா அவ்யக்தமான பிறகு பிறந்த புதிய பிராமண குழந்தைகளை (ஆத்மாக்கள்) வதனத்தில் (சூட்சும வதனம்) எமர்ஜ் செய்தார். (தோன்றச் செய்வது) கேட்டீர்களா? (சாந்திவனில் பாபாவின் எதிரில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து) நீங்களும்கூட அதில் இருந்தீர்கள் அல்லவா? பாப்தாதா ஒவ்வொருவருக்கும் மிக அன்புடன், சமீபமாக திருஷ்டி கொடுத்தார் மேலும் இந்த குழந்தைகளுக்கு

(அவ்யக்த படைப்பு) விசேஷமாக ஒரு பரிசும் அளித்தார். இப்போது இங்கே அமர்ந்திருப்பவர்களில், சாகார் பிரம்மாவுக்குப் பிறகு படைக்கப்பட்ட பிராமண ஆத்மாக்கள் இருந்தால், அவர்கள் மட்டும் கை உயர்த்துங்கள். மெஜாரிட்டியாக இருக்கின்றார்கள். (சரி, கை கீழே போடுங்கள்) நன்று. இப்போது சாகார ரூபத்தில் படைக்கப்பட்டவர்கள் கை உயர்த்துங்கள். மிகக் குறைவு. இன்றைய சபாவில் இருப்பவர்கள் மிகக் குறைவு ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் எமர்ஜ் செய்தார். ஏனென்றால் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இங்கு உட்காரக் கூட இடம் போதவில்லை. வதனத்தில் நீங்கள் எல்லோரும் வரமுடியும். அங்கு எவ்வளவு பெரிய இடம் வேண்டுமோ அவ்வளவு இடம் இருக்கிறது ஆதலால் தான் எல்லோரையும் வதனத்தில் எமர்ஜ் செய்தார். அதாவது அழைப்பிதழ் கொடுத்து அழைத்தார். எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷம், பாப்தாதாவுக்கு இதைவிட மிகுந்த சந்தோஷம். வந்ததா அந்தரத்தில் உங்களுக்கு பரிசுகள் வழங்கினார். அந்தப் பரிசு மிக அழகான கீறல் விழாத (கறைபடியாத) வைரத்தாமரை மலர் வடிவமைப்பில் இருந்தது. மிகவும் பிரகாசமாக பளிச்சிட்டது. அதில் ஒவ்வொரு தாமரை இலையிலும் விதவிதமான சக்திகள் இருந்தன. அவை விதவிதமான நிறத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. அதை உங்கள் கண் முன்னால் கொண்டு வந்து எவ்வளவு அழகாக காட்சியளிக்கிறதென்று பாருங்கள். எமர்ஜ் ஆனதா? எமர்ஜ் செய்து விட்டீர்களா? டபுள் ஃபாரினர்ஸ் எமர்ஜ் செய்தீர்களா? டீச்சர்ஸ் எமர்ஜ் செய்தீர்களா? பாண்டவர்கள் எமர்ஜ் செய்தீர்களா? மேலும் இனிமையிலும், இனிமையான மாதாக்கள் எமர்ஜ் செய்தீர்களா? இந்த விஷ்வ வித்யாலயத்தின் விசேஷமே இந்த மாதாக்கள் தான். எல்லோருக்கும் எந்த ஒரு விஷயம் ஆச்சரியமாயிருக்கிறது? இவ்வளவு மாதாக்கள் சக்திகளாகி விட்டனர். இவ்வளவு மாதாக்கள் பவித்ரதா விரதம் பூண்டு தேவிகளின் ரூபத்தில் பரிவர்த்தனையாகி விட்டனர். மெஜாரிட்டி மாதாக்கள் தான் இங்கிருக்கின்றனர். ஆதலால் பாப்தாதா இன்று அவ்யக்த ரச்சனாவுக்கு (அவ்யக்த பிறவி எடுத்த பிராமண குழந்தைகளுக்கு) மிகுந்த அன்பை வழங்கினார். மேலும் வதனத்தில் ஒரு பூங்காவனத்தையும் எமர்ஜ் செய்தார். ஒரு மலையையும் எமர்ஜ் செய்தார். இதனோடு கூட ஒரு கடலையும் எமர்ஜ் செய்தார். பிறகு எல்லோரையும் இதைச் சுற்றி வரச் செய்தார். சுற்றி வருவதற்கு சுதந்திரம் இருந்தது. விளையாட்டு இல்லை. பந்து மற்றும்

பேட் பால் விளையாட்டும் செய்விக்கவில்லை. சிலர் கடல் அலையில், நீந்திக் கொண்டிருந்தனர். சிலர் மலை மீது அமர்ந்து கொண்டனர். சிலர் பூங்காவைச் சுற்றி வந்தனர். இவ்வாறு இன்று வதனத்தில் அவ்யக்த படைப்பின் சபை கூட்டப்பட்டிருந்தது. பாப்தாதா எல்லோருக்கும் இந்த வரதானம் கொடுத்தார் -சதா சர்வ சக்திகளுடன் வாழ்ந்திருங்கள், பறந்து கொண்டே இருங்கள் என!

ஆதலால் இன்றைய நினைவு நாளின் விசேஷ மகாமந்திரம், ஸ்மிருதி (நினைவு) சொரூபமாகி, சக்திசாலி சொரூபமாக மாறுங்கள். பொக்கிஷத்தை மறைத்து வைக்காதீர்கள். ஒவ்வொரு கர்மத்தின் மூலமாக வெளியில் கொண்டு வாருங்கள். எந்த ஒரு ஆத்மாவாக இருந்தாலும், திருஷ்டி வேண்டும் என்றால், ஆசீர்வாத வார்த்தைகள் வேண்டும் என்றால், கர்மத்தில் உதவி வேண்டுமானால், உடனிருப்பவர்கள், தொடர்பில் இருப்பவர்கள் அனைவருக்கும் அவர்கள் சமர்த் சொரூபமாவதற்காக சகயோகம் கொடுங்கள். (உதவி செய்தல்) உங்கள் சமர்த் சொரூபத்தினுடைய அன்பைக் கொடுங்கள். பாப்தாதா இன்னொரு விஷயத்தைப் பற்றியும் பார்த்தார். அதாவது புதிதாக வந்து கொண்டிருக்கும் குழந்தைகளில் சில ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சகயோகத்தோடு கூட, பிராமண ஆத்மாக்களாகிய உங்களிடமிருந்தும், அவர்களுக்கு துணிவு, ஆர்வம், உற்சாகம், சமாதானம் ஆகியன கிடைக்க வேண்டிய அவசியம் உடையவர்களாக இருக்கின்றார்கள். சிறு சிறு குழந்தைகள் தானே! சிறு குழந்தைகளாகயிருந்தும் கூட துணிவுடன் பிராமணர் ஆகியிருக்கின்றார்கள் அல்லவா? ஆதலால் சிறு குழந்தைகளுக்கு சக்திகள் மூலமாக பாலனை அவசியமாக இருக்கின்றது, சக்தி கொடுப்பதற்கு, வெறும் பாலனை அல்ல, சக்தி கொடுக்கின்ற பாலனையின் அவசியம். இதன் மூலம் வெகு சீக்கிரமாகவே ஸ்தாபனை காரியத்தில் பிராமண ஆத்மாக்கள் தயாராகி விடுவார்கள். ஏனென்றால் குறைந்தபட்சம் ஒன்பது லக்ஷம் வேண்டுமல்லவா? சக்திகளை உதவியாகக் கொடுங்கள். சக்திகளாலான பாலனையாக இருக்க வேண்டும். சக்திகளை அதிகரியுங்கள். அதிகமாக கலந்துரையாடல் செய்வது போன்ற பாடங்கள் கொடுக்காதீர்கள் சக்தியைக் கொடுங்கள். அவர்களுடைய பலவீனத்தைப் பார்க்காதீர்கள். அவர்களிடமுள்ள விசேஷத்தைப் பாருங்கள். எந்த ஒரு சக்தி குறைவாக உள்ளதோ, அதைக் கொடுத்து சக்தியை நிறைவு செய்து

கொண்டேயிருங்கள். இப்போது யாரெல்லாம் நிமித்தமாக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு இந்த விதமான பாலனைக்கு நிமித்தமாக வேண்டிய அவசியமிருக்கிறது. மாணவர்கள் அதிகமாக வேண்டும், சேவா நிலையங்கள் அதிகமாக வேண்டும் இவையெல்லாம் பொதுவான விஷயங்கள் ஆனால் ஒவ்வொரு ஆத்மாவும், பாபாவின் உதவி மூலமாக சக்திசாலியாக வேண்டும். இப்போது இந்த அவசியம் இருக்கின்றது. சேவை எல்லோரும் செய்து கொண்டுதானிருக்கிறீர்கள் மேலும் சேவை செய்யாமல் இருக்கவும் முடியாது ஆனால் சேவை மூலம் சக்தி சொரூபத்தின் அதிர்வலைகள் ஆத்மாக்களுக்கு அனுபவம் ஆக வேண்டும். சக்தி நிரப்பக்கூடிய சேவையாக இருக்க வேண்டும். சாதாரண சேவை இந்தக் காலத்தில் நிறைய பேர் செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய விசேஷம் சக்திசாலி சேவை, பிராமண ஆத்மாக்களுக்கும் கூட சக்தியளிக்கக்கூடிய பாலனை அவசியம். அச்சா.

பாப்தாதாவின் எதிரில், உலக முழுவதிலிருந்தும் குழந்தைகள் வெகு தூரமாக இருந்தாலும் கூட எதிரில் இருக்கின்றார்கள். எல்லோரும் ஒரு வார்த்தை கூறுகின்றார்கள். “என்னுடைய நினைவையும் கொடுங்கள், என்னுடைய நினைவையும் கொடுங்கள்" என்பது தான் அந்த வார்த்தை. இதை பாப்தாதா அறிவார். எல்லோருடைய நினைவும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. கடிதம் மூலம் அனுப்பினாலும், வாய் மூலமாக சொல்லி அனுப்பினாலும், கார்டு அனுப்பினாலும், இமெயில் மூலம் அனுப்பியிருந்தாலும் வந்து சேர்ந்து விடுகிறது. அறிவியல் சாதனங்கள் அதிகமாகி விட்டன. பாப்தாதாவிடம் சாதனங்கள் மூலமாகவும் நினைவு வந்து சேர்கிறது. உள்ளத்தில் எழும் உணர்வலைகளின் மூலமாகவும், நினைவு வந்து சேர்ந்து விடுகிறது. எல்லாவற்றையும் விட வெகு சீக்கிரமாக வந்து சேர்வது உள்ளம் அனுப்புகின்ற அன்பு நினைவு தான். ஆதலால் இன்றைய தினம், உள்ளத்தால் இன்ன பிற சாதனங்களால் அன்பு நினைவுகளை அனுப்பியிருக்கின்ற அனைவருக்கும் பாப்தாதா அன்பு நினைவுகளை அளிக்கின்றார். குழந்தைகள் ஒருமுறை நினைவு செய்தார்கள். தந்தை பல மடங்கு, இதற்குப் பதிலாக அன்பு நினைவுகளை அளிக்கின்றார். அச்சா.

நாலா பக்கங்களிலுமுள்ள, உள்ளத்தில் ஒன்றியிருக்கின்ற, சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கும், சதா அவசியமாகும் அந்த சமயத்தில் ஒவ்வொரு சக்தியையும் சொரூபத்தின் மூலமாக பிரத்யக்ஷம் (நடைமுறையில் கொண்டு வருதல்) செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும், சதா சக்திகள் மூலமாக ஆத்மாக்களை பாலனம் செய்வதற்கு நிமித்தமாக இருக்கக்கூடிய தந்தையின் சகயோகி ஆத்மாக்களுக்கும், சதா ஒவ்வொருவரிடமும் துணிவு, ஆர்வம் மற்றும் உற்சாகம் அளிக்கக்கூடிய பறக்கும் கலையிலுள்ள ஆத்மாக்களுக்கும், சதா பிரச்சனைகளை சமாதானமாக பரிவர்த்தனை செய்யக்கூடிய விஷ்வ பரிவத்தக் ஆத்மாக்களுக்கும், ஸ்மிருதி சொரூபம் ஸோ சமர்த்த சொரூப ஆத்மாக்களுக்கும் பாப்தாதாவின் பதம் குணா (கோடான கோடி மடங்கு) அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!!

<u>சேவையின் டர்ன் சத்தீஸ்கர் -இந்தோர் ஜோனினுடையது:</u> அனைவரும் உள்ளத்தால் சேவை செய்தீர்கள், அனைவரையும் திருப்தி படுத்தினீர்கள் மற்றும் தானும் திருப்தியாக இருந்தீர்கள். அதற்கு வாழ்த்துக்களை. புதிய மாநிலம் உருவாகி இருக்கிறது. அதனால் புது மாநிலத்தை சேர்ந்தவர்களுக்கு பாப்தாதா சதா நினைவு மற்றும் சேவையில் முன்னால் பறப்பதற்கான வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். நன்றாக செய்தீர்கள்.

<u>குமாரிகளுடன்</u>: முன்னால் குமாரிகள் அமர்ந்துள்ளீர்கள், பின்னால் தாய்மார்கள் அமர்ந்துள்ளீர்கள். மிகவும் நல்லது. எவ்வாறு இப்பொழுது நின்று கொண்டு இருக்கிறீர்களோ அதைப் போல நினைவு மற்றும் சேவையில் சதா நிற்க வேண்டும். ஹாஸ்டல் குமாரிகள் நல்ல பாலனையில் வளர்ந்து வருகிறீர்கள். அப்படிப்பட்ட பாலனை நீங்கள் வாயுமண்டலத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்கள். அதனால் சதா முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் மேலும் முன்னேறிக் கொண்டு இருப்பீர்கள். வாழ்த்துக்கள்! நல்லது.

புதிய மாநிலமாக உருவாகியுள்ள சத்தீஸ்கர், அதனுடைய தலை நகரத்திற்கு வாழ்த்துக்கள். நல்லது, சேவைக்கான பலனும் கிடைத்தது. பலமும் கிடைத்தது. சேவையின் பலன் குஷி மற்றும் பலம், சதா இவ்வாறு தடைகளற்று இருப்பது. அதனால் இதை சதா கூடவே

வைத்துக் கொள்ளுங்கள். நல்லது. டீச்சர்களுக்கு மிகுந்த வாழ்த்துக்கள். இப்போது பாப்தாதா கூறியுள்ளார் சக்தி கொடுப்பதற்கான பாலனையை அதிகப்படுத்திக் கொண்டே இருங்கள். மதுபன் நிவாசிகளும் வந்திருக்கிறார்கள்.

நல்லது. இன்று குறிப்பாக சங்கம் பவன் உள்ளது அல்லவா? அந்த சங்கத்தை சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சேவையும் குறைவானது அல்ல. இன்று குறிப்பாக அவர்களுடைய நினைவு பாப்தாதாவிற்கு வந்தது. அனைவரையும் வரவேற்கும் சேவையும் கூட குறைந்தது அல்ல. எவ்வாறு சாந்திவனை சேர்ந்த சேவாதாரிகள் இருக்கின்றார்களோ அவர்கள் ஒருவர் மற்றவரை விட முன்னே இருக்கின்றார்கள். நல்லது. எழுந்திருக்க வேண்டியதாக உள்ளது, நடக்க வேண்டியதாக உள்ளது, ஓட வேண்டியதாக உள்ளது, திருப்திபடுத்த வேண்டியதாக உள்ளது. வாழ்த்துக்கள். பாண்டவ பவனை சேர்ந்தவர்கள், மதுபனின் நான்கு கரங்கள் உடையவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

நம்மை பாப்தாதா எதுவும் சொல்லவில்லை என்று இரட்டை அயல்நாட்டவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இரட்டை அயல்நாட்டவர்களிடம், பாப்தாதா சகிதம் அனைத்து தாதிகள், பிராமணர்களின் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அன்பு இருக்கிறது. ஏன்? பாப்தாதா சதா விசேஷத்தன்மையை கூறுகிறார் -அனைத்து விதமான கலாச்சாரம் என்ற சுவற்றை விட்டுவிட்டு பிராமண வாழ்க்கைக்கு வந்து அடைந்து விட்டனர். பிராமண கலாச்சாரத்தை சேர்ந்தவர்களாகி விட்டனர் மேலும் அவர்களுக்கு இது வேறு தேசமாக கூட தோன்றவில்லை. தன்னுடைய பாரதமாக இருக்கிறது மற்றும் இருக்கும். அதனால் அயல்நாட்டவர்களுக்கும் பல மடங்கு வாழ்த்துக்கள். மிக நல்லது. பாருங்கள். தைரியம் வைத்து வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா! டிக்கெட் கிடைத்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எப்படியோ எடுத்துக் கொண்டு வந்து விட்டீர்கள்! தைரியம் நன்றாக உள்ளது. நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

தாதிஜிகளுடன்: சாதனங்களை தன்னுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வளர்ச்சியும் மிகவும் வேகமாக ஆகிக்

கொண்டிருக்கிறதல்லவா! நல்லது. வளர்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது மேலும் அனைவருக்கும் திருப்தியும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நன்றாக பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். (பாபா செய்வித்துக் கொண்டிருக்கிறார்) இருந்தாலும் நிமித்தமானவர்கள் தானே! பாப்தாதா தினமும் அமிர்தவேளை வரதானத்துடன் கூடவே (மசாஜ் உம்) காலை தடவி கொடுக்கவும் செய்கிறார். நிமித்தமாகக் கூடியவர்களுக்கு உழைப்பும் செய்ய வேண்டியிருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். (பாபா, எந்த ஒரு உழைப்பும் இல்லை) விளையாட்டு என்று சொல்லுங்கள், விளையாடுகிறீர்கள், உழைப்பு செய்வதில்லை. இந்த சமயம் மகள் ஜானகியையும் (ஜனக் பேட்டி) நினைவு செய்து கொண்டு இருக்கிறார். தான் மேடையில் இருப்பதாக அவர் நினைக்கிறார். பாப்தாதாவும் வாழ்த்துக்களை அளித்துக் கொண்டிருக்கிறார். யாருக்கு என்ன பங்கு கிடைத்துக் கொண்டிருக்கிறதோ, அதை விதிபூர்வமாக செய்து கொண்டிருக்கிறார். நல்லது. ஒவ்வொரு பாண்டவரும் கூட அவரவர் பங்கை நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாராயண் தாதா மற்றும் அவருடைய மகனுடன்: நன்றாக இருக்கிறீர்கள் தானே? இருவரும் நன்றாக இருக்கிறீர்களா? இவரை பாப்தாதா (ஃப்ரீயாக) சுதந்திரமாக வைத்திருக்கிறார். எப்பொழுது மனதில் எதைச் செய்தாலும் மனம் போல் செய்யுங்கள், மரியாதைக்கேற்றவாறு செய்யுங்கள். பிராமண வாழ்க்கை, லௌகீக பரிவாரம் இரண்டின் மரியாதைகளை அறிந்திருக்கிறீர்களா? இரண்டையும் தெரிந்திருக்கிறீர்களா? அல்லது ஒன்றை மட்டும் தெரிந்திருக்கிறீர்களா? இரண்டையும் தெரிந்திருக்கிறீர்கள், ஆகவே இரண்டையும் நிறைவேற்ற வேண்டும். நல்லது. இப்பொழுது சிறிதளவு மதுபனுடன் தொடர்பை அதிகப்படுத்துங்கள். கொடுக்கல், வாங்கல் செய்யுங்கள். மனதால் பேசாதீர்கள், வாயினாலும் பேசுங்கள். இந்த விதை விநாசம் அடையக் கூடியதல்ல. நல்லது. இருந்தும் வெற்றியடைகிறீர்கள். நல்லது. செல்லமானவர்கள் தானே! மிகவும் நல்லது. இருவரும் நன்றாக இருக்கிறீர்கள். உங்களுடைய வீடு, எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது வாருங்கள். சரிதானே.

ஜகதீஷ் சகோதரருடன்: ஜகதம்பா தாயின் சுலோகன் நினைவிருக்கிறதா? நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார். எனவே

உங்களுக்கும் கூட இப்பொழுது இந்த அனுபவம் இருக்கிறதல்லவா? செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார்; நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார். மற்றபடி நல்லது, இந்த அனைத்து ஆதி ரத்தினங்களும் சேவையின் ஆதி ரத்தினங்கள். இந்த தாதிகள் ஸ்தாபனையின் ஆதி ரத்தினங்கள். பாண்டவர்கள் சேவையின் ஆதி ரத்தினங்கள். இன்று பாபாவின் அறைக்குள் சென்றால் அந்த நினைவுகள் வந்து விட்டன. இங்கு இருந்தபோதும் இல்லாமல் இருந்தது. கண்ணீர் நிரம்பி விட்டது. இந்த நினைவினால் மேலும் வெளிப்படையான ரூபத்தில், ஒன்று அன்பு அதிகரிக்கிறது உள்ளத்தின் அன்பு வெளியே வருகிறது மேலும் மற்றொன்று நினைவினால் பாபாவிற்கு சமமாக ஆவதில் தைரியமும் வருகிறது. நல்லதாகி விட்டது; ஆனால் யாரெல்லாம் சேவையின் ஆதி ரத்தினங்களோ ஸ்தாபனையின் ஆதி ரத்தினங்களோ இருவரும் சேவையை மிக நன்றாக செய்து இருக்கிறீர்கள். நிமித்தம் ஆகி விட்டீர்கள் என்று பாப்தாதா சொல்லிக் கொண்டு இருந்தார். பொறுத்துக் கொண்டீர்கள் மேலும் அன்பும் கூட கிடைத்தது. நன்றாக செய்தீர்கள், ஏனெனில் அந்த சமயம் தைரியம் வைக்கக் கூடியவர்கள் கொஞ்சம் பேர் இருந்தீர்கள் ஆனால் தைரியம் வைத்து சகயோகி ஆனீர்கள். அந்த சக யோகத்திற்கு கிடைத்த மதிப்பெண்கள் சேமிப்பு ஆகிறது. சேமிப்பு கணக்கு நன்றாக இருக்கிறது. ஒன்றுக்கு கோடி மடங்கு சேமிப்பு ஆகிறது. யார் எதை உள்ள பூர்வமாகவும் சக்திசாலி ஆகி செய்தீர்களோ அவர்களுக்கு ஒன்றுக்கு லட்சம் மடங்கு அல்ல, கோடி மடங்கு சேமிப்பாகிறது. உங்கள் அனைவருக்கும் கூட சேமிப்பு இவர்களுக்கும் கூட சேமிப்பு ஆகிறது.

ரத்தன் மோகினி தாதியுடன்: நல்லது, சகயோகியாக இருக்கிறீர்கள். மேலே கீழே ஆக வேண்டி இருக்கிறது தான் ஆனால் சகயோகியாக ஆகத்தான் வேண்டும். பாப்தாதாவின் கரங்கள் அல்லவா? அப்பொழுது கரங்களின் வேலை என்ன? சகயோகம் கொடுப்பதாகும். நன்றாக கொடுக்கிறீர்கள். நல்ல சகயோகிகள் அல்லவா! நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 04.02.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நேரத்திற்கு ஏற்றவாறு சுய ராஜ்ய அதிகாரி ஆகி எல்லா ஆன்மீக சாதனைங்களையும் தீவிர வேகத்தில் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்!

இன்று பாப்தாதா உலகத்தின் எல்லா பக்கங்களிலுமுள்ள தனது சுய ராஜ்ய அதிகாரி குழந்தைகளுடைய ராஜ்ய சபையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு சுய ராஜ்ய அதிகாரி, தூய்மையின் ஒளிக்கிரீடதாரி, அதிகாரத்தினுடைய நினைவின் திலகதாரி, அவரவரது நெற்றியில் அழியாத சிம்மாசனம் தெரிந்து கொண்டிருக்கிறது. இச்சமயம் எந்தளவு சுய ராஜ்ய அதிகாரம் அனுபவம் செய்கிறீர்களோ அந்தளவே எதிர்காலத்தில் விஷ்வ ராஜ்ய அதிகாரி ஆக முடியும். நான் யார்? அல்லது எனது எதிர்காலம் என்ன? -இதை இப்போதுள்ள உங்களுடைய சுய ராஜ்ய ஸ்திதி மூலம் நீங்களே பார்க்க முடியும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சதா சுய ராஜ்யத்தின் ஸ்திதியைப் பார்த்துக் கொண்டிருந்தார். எல்லாக் காரியமும் செய்தவாறே, லௌகீக-அலௌகீக காரியங்களைச் செய்தவாறே சுய ராஜ்ய அதிகாரியின் போதை நிரந்தமாக எவ்வளவு நேரம் மற்றும் எத்தனை சதவீதத்தில் இருக்கிறீர்கள்? ஏனெனில் பல குழந்தைகள் தனது சுய ராஜ்யத்தின் நினைவை சங்கல்ப ரூபத்தில் நினைவு செய்கின்றனர் -நான் ஆத்மா அதிகாரியாக இருக்கிறேன், ஒன்று சங்கல்பத்தில் நினைப்பது. அடிக்கடி நினைவை புதுப்பிக்க வேண்டும் -நான் இருக்கிறேன்! இரண்டாவது -அதிகாரத்தின் ரூபத்தில் தன்னை அனுபவம் செய்வது மற்றும் இந்த கர்மேந்திரியங்கள் ரூப வேலைக்காரர்கள், அப்படியே மனம், புத்தி, சமஸ்கார ரூப சகயோகி துணைவர்கள் மீது ராஜ்யம் செய்வது, அதிகாரத்துடன் நடத்துவது.

ஒவ்வொரு நேரமும் பாப்தாதா ஸ்ரீமத்படி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதில் எப்படி குழந்தைகள் நீங்கள் அனுபவிகளாக இருக்கிறீர்கள் மற்றும் நீங்கள் அனைவரும் ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள். நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார், நடப்பவர் நடந்து கொண்டிருக்கிறார். அப்படி, ஹே சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்களே, உங்களுடைய சுய ராஜ்யத்தில் உங்களுடைய எல்லா கர்மேந்திரியங்கள் அதாவது வேலைக்காரர்கள், உங்களுடைய மனம், புத்தி, சமஸ்கார ரூப சகயோகி துணைவர்கள் எல்லோரும் உங்களுடைய கட்டளைப்படி நடந்து கொண்டிருக்கிறார்களா, என்ன? ஓரிரு கர்மேந்திரியங்கள் கொஞ்சம் கட்டுப்பாடின்றித் திரிவதில்லையே? உங்களுடைய ராஜ்யத்தை சட்டம் மற்றும் ஒழுங்கிற்குப் (law and order) பதிலாக அன்பு மற்றும் சட்டத்தில் (love and law) சரியான முறையில் நடத்திக் கொண்டிருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள்? நடந்து கொண்டிருக்கிறதா அல்லது மறுப்பு தெரிவிக்கின்றதா? எப்போது எனது கை என கூறுகிறீர்களோ, எனது சம்ஸ்காரம், எனது புத்தி, எனது மனம் எனில் எனது என்பதன் மீது அதிகாரம் இருக்கிறதா? அல்லது சில சமயம் எனது அதிகாரியாகி விடுகிறது, சில சமயம் நான் அதிகாரியாகி விடுகிறேன்? நேரத்திற்கு ஏற்றவாறு ஹே சுய ராஜ்ய அதிகாரி, இப்போது சதா மற்றும் சகஜ அழியாத சிம்மாசனதாரி ஆகுங்கள் அப்போதுதான் பிற ஆத்மாக்களுக்கு தந்தை மூலம் ஜீவன்முக்தி மற்றும் முக்தியின் அதிகாரத்தை தீவிர வேகத்தில் அளிக்க முடியும்.

காலத்தின் குரல் -இப்போது எல்லைக்கப்பாற்பட்ட தீவிர வேகம் தேவை! சிறிய ஒத்திகையைப் பார்த்தீர்கள், கேட்டீர்கள். ஒரேடியாக எல்லையற்ற படத்தைப் பார்த்தீர்கள்தானே. ஓலமிடுவதும் எல்லையற்றது, இறப்பதும் எல்லையற்றது, இறப்பவர்களின் கூடகூடவே இருப்பவர்களும் தனது வாழ்க்கையில் கஷ்டப்பட்டு இறந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய நேரத்தில் சுய ராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் உங்களுக்கு என்ன வேலை உள்ளது? சோதனை செய்யுங்கள் எப்படி ஸ்தூல சாதனங்களுக்காக கூறுகிறீர்கள் -பூகம்பம் வந்தால் இதைச் செய்யணும், புயல் வந்தால் இதைச் செய்யணும், தீப்பிடித்தால் இதைச் செய்யணும், அது போல் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களிடம் என்னென்ன சாதனங்கள் உள்ளன -சர்வ சக்திகள்,

யோகபலம், சிநேகத்தின் காந்தம், இந்த எல்லா சாதனங்களும் நேரத்திற்காகத் தயாராக இருக்கிறதா? சர்வ சக்திகளும் இருக்கிறதா? யாருக்காவது அமைதியின் சக்தி தேவை ஆனால் நீங்கள் வேறு ஏதாவது சக்தியைக் கொடுத்தால் அவர் திருப்தி அடைவாரா? எப்படி யாருக்காவது தண்ணீர் தேவை மற்றும் நீங்கள் அவருக்கு 36-வகை உணவு அளித்தீர்கள் என்றால் அவர் திருப்தி அடைவாரா? எனில் சதா தயாராக இருக்க வேண்டும், தன்னை மட்டும் அசரீரி ஆக்குவதற்காக அல்ல! அதுவோ ஆகத்தான் வேண்டும்; ஆனால் எந்த சாதனங்கள் சுய ராஜ்ய அதிகாரத்தின் மூலம் பிராப்தியாகி உள்ளதோ, பரமாத்ம ஆஸ்தியில் கிடைத்துள்ளதோ, அந்த எல்லா அதிகாரங்களும் சதா தயாராக இருக்கிறதா? செய்தி வருகிறது இந்த இயந்திரம் இந்த நேரம் தேவை என ஆனால் அது வெளிநாட்டிலிருந்து வந்த பின்புதான் காரியத்தில் ஈடுபடுத்தினோம் என்று அப்படி ஆகக்கூடாது. அப்படியானால் சாதனம் எவர் ரெடியாக வைக்கவில்லைதானே! எல்லா சாதனங்களையும் தக்க தருணத்தில் காரியத்தில் ஈடுபடுத்த முடியவில்லையேல் எவ்வளவு நஷ்டம் ஆகிறது.

எனில் ஹே உலகிற்கு நன்மை செய்யக்கூடிய, உலகை மாற்றம் செய்யக்கூடிய ஆத்மாக்களே எல்லா சாதனங்களும் எவர் ரெடியாக இருக்கிறதா? சர்வ சக்திகளும் உங்கள் கட்டளைப்படி இருக்கிறதா? கட்டளையிடுவது என்றால் சங்கல்பம் செய்வது -நிர்ணய சக்தி! ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில் -நிர்ணய சக்தி ஆஜராக வேண்டும், கூற வேண்டும் சுய ராஜ்ய அதிகாரியே நான் ஆஜராகி விட்டேன் என. இப்படி கட்டளைப்படி இருக்கிறதா? அல்லது தனக்குள் கொண்டு வர ஒரு நிமிடம் எடுக்கும், பின்னர் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியுமா? ஒருவேளை தக்க சமயத்தில் யாருக்கு என்ன தேவையோ அதைத் தர முடியவில்லை என்றால் என்ன ஆகும்? எல்லாக் குழந்தைகளின் உள்ளத்தில் இந்த சங்கல்பமோ ஓடிக் கொண்டிருக்கிறது -இன்னும் என்ன ஆக வேண்டும் மற்றும் என்ன செய்ய வேண்டும்? ஆக வேண்டியதோ நிறைய உள்ளது. கூறினோம்தானே இதுவோ ஒத்திகை என! இந்த 6-மாதத்தில் தயாராவதற்கான சிறிய மணி அடித்து விட்டது, சேகண்டி அடிக்கவில்லை. முதல் மணி அடிக்கும், பின்பு முரசு ஒலிக்கும். பயப்படுவீர்களா? கொஞ்சம் கொஞ்சம் பயப்படுவீர்களா? சக்தி சொரூப ஆத்மாக்களை எந்த சொரூபத்தில் காட்டியுள்ளனர்?

சக்திகளை (சக்தி சொரூபத்தில் பாண்டவர்களும் வந்து விடுகின்றனர் எனில் சக்திகளும் கூட வந்து விட்டனர்) சதா சக்திகளை சிலர் 4-கைகள், சிலர் 6-கைகள், சிலர் 8-கைகள், சிலர் 16-கைகள் உடைய ரூபத்தில் காட்டுகின்றனர், சாதாரணமாக இல்லை. இந்தக் கைகள் சர்வ சக்திகளைக் குறிப்பவை. ஆதலால் சர்வ சக்திவான் மூலம் பிராப்தியான தனது சக்திகளை வெளிக் கொணருங்கள் (எமர்ஜ்). இதற்காக இப்படி நினைக்காதீர்கள் நேரம் வரும்போது வெளிப்பட்டு விடும் என ஆனால் முழு நாளும் தன் மீது விதவிதமான சக்திகளைப் பயன்படுத்திப் பாருங்கள். எல்லாவற்றையும் விட முதல் பயிற்சி சுய ராஜ்ய அதிகாரம் முழு நாளும் எது வரை காரியத்தில் வருகிறது? நானோ ஆத்மா எஜமானனாக உள்ளேன், இது இல்லை. எஜமானன் ஆகி கட்டளையிடுங்கள் மற்றும் எல்லா கர்ம இந்திரியங்களும் ராஜா எனது 'லவ்&லா'படி நடக்கின்றனவா? என சோதனை செய்யுங்கள். கட்டளையிடுவது மன்மனாபவ என மற்றும் மனது எதிர்மறை, வீண் எண்ணங்களில் சென்றால், இது என்ன 'லவ்&லா' ஆக இருந்ததா? கட்டளையிடுவது இனிமை சொரூபம் ஆக வேண்டும் என மற்றும் பிரச்சனைகளின்படி, சூழ்நிலைகளின்படி கோபத்தின் பெரிய ரூபம் இல்லை ஆனால் சூட்சும ரூபத்திலும் கூட ஆவேசம் அல்லது சிடுசிடுப்பாவது, இது என்ன கட்டளையா? கட்டளைப்படி நடந்ததா?

கட்டளையிடுவது நாம் பணிவானவராக வேண்டும் மற்றும் வாயுமண்டலத்தின்படி நினைப்பது எது வரை இப்படியே பணிந்து போவது, கொஞ்சம் காட்டத்தான் வேண்டும். என்ன நான் தான் பணிந்து போகனுமா? நான் தான் சாகணுமா? நான் தான் மாறணுமா? என்றால் இது என்ன 'லவ்&ஆர்டர்'ஆ? ஆதலால் உலகத்தின் மீது, கூக்குரலிடுகின்ற துக்க ஆத்மாக்களின் மீது இரக்கம் காட்டுவதற்கு முன்பு தன் மீதே இரக்கம் காட்டுங்கள். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். போகப்போக உங்களுடைய நாலா பக்கமும் சகாஷ் தருவது, வைப்ரேஷன் தருவது, மனம் மூலம் வாயுமண்டலத்தை உருவாக்குவது என நிறைய காரியங்கள் செய்ய வேண்டும். முன்பும் கூறினோம் இது வரை யாரெல்லாம் எங்கெங்கு சேவைக்கு நிமித்தமாக இருக்கிறீர்களோ, நீங்கள் மிக நன்றாகவே சேவை செய்தீர்கள் மேலும் செய்வீர்கள்தான் ஆனால் நேரத்திற்கு ஏற்றவாறு தீவிர வேகம் மற்றும் எல்லையற்ற சேவையின் அவசியம் உள்ளது. எனவே இப்போது

முதலில் தினமும் சுய ராஜ்ய அதிகாரம் எது வரை உள்ளது? என சோதனை செய்யுங்கள். ஆத்மா எஜமானன் ஆகி கர்ம இந்திரியங்களை நடத்தட்டும். நான் எஜமானன் இந்த துணைவர்களுடன், சகயோகிகளுடன் காரியம் செய்து கொண்டிக்கின்றேன் என்ற நினைவு சொரூபம் இருக்கட்டும். சொரூபத்தில் போதை இருந்தது எனில் தானாகவே இந்த எல்லா கர்ம இந்திரியங்களும் உங்கள் முன் தானாகவே இதோ வந்து விட்டேன் என்று நிற்கும். கடினமாக உழைக்கத் தேவையில்லை. இன்று வீண் சங்கல்பத்தை அழியுங்கள், இன்று சம்ஸ்காரத்தை அழியுங்கள், இன்று நிர்ணய சக்தியை வெளிப்படுத்துங்கள். ஒரே அடியில் எல்லா கர்ம இந்திரியங்களும் மற்றும் மனம் புத்தி சம்ஸ்காரமும், எதை நீங்கள் விரும்புகிறீர்களோ அதைச் செய்யும். இப்போது கூறுகிறீர்கள், இல்லை பாபா, விரும்புவதோ இதை ஆனால் இந்தளவு ஆகவில்லை... பின்னர் கூறுவீர்கள் என்ன விரும்பினேனோ அது நடந்தது, எளிது! எனில் என்ன செய்ய வேண்டும் என புரிந்ததா? உங்களது அதிகாரத்தின் வெற்றியை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். சம்ஸ்காரத்திற்குக் கட்டளையிடுங்கள். சம்ஸ்காரம் உங்களுக்கு ஏன் கட்டளையிடுகிறது? சம்ஸ்காரம் அழியவில்லையா, ஏன்? உங்கள் கட்டளைக்குக் கீழ்படிய சம்ஸ்காரம் கட்டுப்பட்டுள்ளது. எஜமானத் தன்மையைக் கொண்டு வாருங்கள். மற்றவர்களுடைய சேவையும் மிக மிக மிக மிக அவசியம்தான். இதுவோ ஒன்றுமில்லை, மிகவும் நாசுக்கான நேரம் வரத்தான் போகிறது. அத்தகைய நேரத்தில் நீங்கள் பறக்கும் கலை மூலம் பரிஷ்தா ஆகி நாலா புறமும் சுற்றி வந்தபடியே, யாருக்கு அமைதி தேவை, யாருக்கு குஷி தேவை, யாருக்கு திருப்தி தேவை, என பரிஷ்தா ரூபத்தில் சகாஷ் தருவதற்காக சுற்றி வருவீர்கள் மற்றும் அந்த அனுபவம் செய்வீர்கள். எப்படி இப்போது அனுபவம் செய்கிறீர்கள்தானே -தண்ணீர் கிடைத்தது தாகம் தீர்ந்தது, உணவு கிடைத்தது, தங்குமிடம் கிடைத்தது, புகலிடம் கிடைத்தது என. அப்படி அனுபவம் செய்வார்கள் பரிஷ்தாக்கள் மூலம் அமைதி கிடைத்தது, சக்தி கிடைத்தது, குஷி கிடைத்தது என. அத்தகைய இறுதிச் சரீரம் (அந்த்வாஹக்), அதாவது இறுதி ஸ்திதி, சக்திசாலியான ஸ்திதி உங்களுடைய இறுதி வாகனமாகி விடும். மற்றும் நாலா புறமும் சுற்றிபடியே அனைவருக்கும் சக்தியைத் தருவீர்கள், சாதனம் தருவீர்கள். தனது ரூபம் முன்னால் வருகிறதா? வெளிக் கொணருங்கள்! எத்தனை பரிஷ்தாக்கள் சுற்றிக்

கொண்டிருக்கிறார்கள், சகாஷ் தந்து கொண்டிருக்கிறார்கள், அப்போது கூறுவார்கள், நீங்கள் ஒரு பாடல் பாடுகிறீர்கள் அல்லவா -சக்திகள் வந்து விட்டன... சக்திகளின் மூலம்தான் சர்வ சக்திவான் தானாகவே நிரூபணமாகி விடுவார். கேட்டீர்களா!

இது வரை என்ன செய்தீர்களோ, என்ன நடந்ததோ அது நேரப்படி நல்லதிலும் நன்றாக நடந்தது. இப்போது இன்னும் நல்லதிலும் நன்றாக ஆகத்தான் வேண்டும். நல்லது. பயப்படவில்லைதானே! செய்தியைக் கேட்டு, பார்த்து பயப்பட்டீர்களா? இதுவோ ஒன்றுமில்லை. உங்களிடம் எல்லாமே உள்ளது மற்றும் இதுவோ ஒன்றுமே இல்லை; ஆனால் இருப்பினும் உங்களுக்கு சகோதர சகோதரிகள் உள்ளனர் ஆதலால் அவர்களுக்கு சேவை செய்வதும் மிக நல்லது. இப்போது ராஜ்ய அதிகாரத்தில், அழியாத சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருங்கள், மேலே கீழே வரக்கூடாது பின்பு பாருங்கள் அரசாங்கத்திற்கும் கூட சாக்ஷாத்காரம் ஆகும் அவ்வளவுதான், அவ்வளவுதான், அவ்வளவுதான்! சிம்மாசனத்தில் இருந்து இறங்கக் கூடாது, அதிகாரத்தை விடக்கூடாது, சதா அதிகாரம் செய்யுங்கள், தன் மீது, பிறர் மீது அல்ல! பிறர் மீது செய்யக்கூடாது. நல்லது.

புதுப்புது குழந்தைகளும் அதிகம் வந்துள்ளனர். வளர்ச்சியோ அடைகின்றதுதான். யார் இந்த கல்பத்தில், இந்த முறை முதல் முறையாக வந்துள்ளீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். தைரியம் வைத்து வந்தடைந்து விட்டீர்கள்தானே! யார் அமர்ந்தனரோ அமர்ந்து விட்டார்கள், அதனால் ஒன்றும் ஆகவில்லை. தைரியம் மிக அவசியமானது. எந்த ஒரு காரியத்திலும் தைரியம் இருந்தது எனில் வெற்றி என்று புரிந்து கொள்ளுங்கள். தைரியம் குறைவு என்றால் வெற்றியும் குறைவு. ஆதலால் தைரியம் மற்றும் பயமின்மை, பயப்படக் கூடாது இது என்ன நடந்து கொண்டிருக்கிறது என. இறந்து கொண்டுள்ளனர், யாரோ அங்கு இறந்து கொண்டுள்ளார், பயம் உங்களுக்கு வந்து விடுகிறது. பயம் கூடாது, பயமின்மை! சரிதானா, அவருக்கு சாந்தியின் சகயோகம் அளியுங்கள், அந்த ஆத்மாவிற்கு இரக்க மனதின் பாவனை மூலம் சகயோகம் அளியுங்கள், பயப்படக்கூடாது. பயம் எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பூதம் ஆகும்! மற்றும் பூதத்தை ஓட்டி விடலாம், பயம் எனும் பூதத்தை மிகவும்

கஷ்டப்பட்டுத்தான் விரட்ட முடியும். எந்த ஒரு விஷயத்திலும் பயம், இறப்பவருடைய பயம் மட்டும் இல்லை, பல விஷயங்களில் பயம் வருகிறது. பல விதமான பயங்களை, தனது பலவீனத்தாலும்கூட பயம் வருகிறது. அந்த எல்லா விஷயங்களிலும் பயமற்றவர் ஆவதற்கான சகஜ சாதனம் -சதா சுத்தமான உள்ளம், உண்மையான உள்ளம்! எனில் பயம் ஒருபோதும் வராது. மனதில் ஏதாவது விஷயம் கண்டிப்பாக இருக்கும் அதனால் பயம் வருகிறது. சுத்தமான உள்ளம், உண்மையான உள்ளத்தில் இறைவன் உறைகின்றார் மற்றும் அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

நல்லது. புதிது புதிதாய் வரப் போகின்ற குழந்தைகளுக்கு, புதிய வாழ்க்கையில் பரமாத்ம பாக்கியத்தை பிராப்தி செய்வதற்கான வாழ்த்துக்கள். நல்லது. வெளிநாட்டிலிருந்தும் அதிகம் வந்துள்ளனர். வெளிநாட்டினர் கை உயர்த்துங்கள் (குறைந்தது 700-பேர் வந்துள்ளனர். வெல்கம்!

**சேவையின் வாய்ப்பு -மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம்:** -மகாராஷ்டிரா காரர்கள் கை உயர்த்துங்கள் (4,000-பேர் வந்துள்ளனர். எனில் 4,000-பேருக்கும் 4-மடங்கு வாழ்த்துக்கள்! நன்றாகச் செய்தீர்கள், ஒவ்வொரு குழுவிற்கும் அவரவருடைய சேவையின் அழகு உள்ளது ஏனெனில் சேவைக்கு முன்பே, பரிவாரத்திற்கு முன் அருகில் வரக்கூடிய பொன்னான வாய்ப்பு கிடைக்கிறது. வாய்ப்பு கிடைக்கிறதுதானே? இல்லையேல் யார் கேட்பார்கள் -மகாராஷ்டிராவா, ஆந்திராவா என? ஆனால் விசேஷ சேவையினுடைய வாய்ப்பை எடுத்துக் கொள்வதால் பரிவாரத்தின், தாதிகளின், தாதாக்களின் முன்னால் வருகின்றீர்கள். மேலும் குஷியும் கிடைக்கிறது, ஏன், காரணம்? பாருங்கள் சென்டரில் சேவை செய்கிறீர்கள் எனில் எத்தனை பேருக்கு? அதிகத்திலும் அதிகமாக 50-100 இருக்கும் மற்றும் இங்கு எப்போது சேவை செய்கிறீர்கள் என்றால் ஆயிரம் பேருக்கு மேல் சேவை செய்கிறீர்கள் மற்றும் அதனால் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறதல்லவா, மிக நன்றாக சேவை செய்தீர்கள், மிக நன்றாக சேவை செய்தீர்கள்! இந்த ஆசீர்வாதங்களால் ஒன்று தற்சமயத்தில் குஷி கிடைக்கிறது மற்றும் இரண்டாவது சேமிப்பும் ஆகிறது. இரட்டை லாபம்! ஆதலால் யாரெல்லாம் சேவை செய்தார்களோ அவர்களுக்கு சேவையின்

பலனாக குஷியும் கிடைக்கிறது மற்றும் சேமிப்பின் கணக்கும் சேர்கிறது. இரட்டை லாபம் ஆனதல்லவா! இப்போது பெரும்பான்மையான மண்டலங்கள் நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டனர், பயிற்சியும் ஆகி விட்டது. நன்றாகச் செய்தீர்கள், வாழ்த்துக்கள். (100-குமாரிகள் சமர்ப்பணம்!). நல்லது, 100-குமாரிகளும் எழுந்திருங்கள்! எல்லோரும் பாருங்கள்! எங்கு டி.வி. உள்ளதோ அங்கு காட்டுங்கள். நன்றாக உள்ளது, எப்படியோ சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள் ஆனால் சமர்ப்பணத்தின் உறுதியான முத்திரையை இட வேண்டும். இந்த சர்வ சக்திவான் அரசாங்கத்தினுடைய (Almighty Government) முத்திரையை அழிக்க முடியாது. பக்காதானே, பக்கா? பக்கா? யார் மிக மிக மிக பக்கா என நினைக்கிறீர்களோ அவர்கள் கை அசைக்கவும். மிக பக்கா? மஹாராஷ்ட்டிரா, ஏதாவது மேன்மையைக் காட்டுமல்லவா! மிக்க நன்று, பாப்தாதாவின் சார்பாக நிறைய நிறைய நூறாயிரம் கோடி முறை வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்! நல்லது.

இப்போது ஒரு நொடியில் பரிஷ்தா ஆகி விசேஷமாக இங்கு பூகம்பம் வந்துள்ளது, அந்த நாலா பக்கமும் பரிஷ்தா ஆகி பறக்கும் கலை மூலம் சாந்தி, சக்தி மற்றும் திருப்தியின் சகாஷ் பரவச் செய்து விட்டு வாருங்கள்; சுற்றி வாருங்கள் ஒரு நொடியில்; எல்லாவிடமும் சுற்றி வாருங்கள். நல்லது.

நாலா புறமும் உள்ள உள்நாடு, வெளிநாடுகளில் பரிஷ்தா ரூபத்தில் வீற்றிருக்கும், சுய அதிகாரி குழந்தைகளுக்கு, சதா 'லவ்&லா' மூலம் தனது சகயோகி, சூட்சும மற்றும் ஸ்தூல சகயோகி துணைவர்களை நடத்தக்கூடிய, நான் ஆத்மா ராஜா ஆகி ராஜ்ய அதிகாரத்தின் அனுபவம் செய்யக்கூடிய, சதா பறக்கும் கலை மூலம் பரிஷ்தா ரூபம் மூலம் நாலாபுறமும் சகாஷ் தரக்கூடிய சக்தி சொரூப ஆத்மாக்களுக்கு, சதா தூய்மையான உள்ளம், உண்மையான உள்ளம் மூலம் பயமின்றி, நிராகாரி ஸ்திதியில் அனுபவம் செய்யக்கூடிய உலகிற்கு நன்மை செய்யக்கூடிய, உலகை மாற்றக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

தாதிகளுடன்: உங்கள் அனைவருக்கும் குஷி ஏற்படுகிறதுதானே, நம்முடைய நிமித்த தாதிகள், தாதாக்கள் முன்பாக வந்துள்ளோம் எனில்

குஷிதானே. எனில் நீங்களும் வர விரும்புகிறீர்கள்தானே? இன்னும் முன்பாக வருவது நன்றாக உள்ளது. முன்னால் இருப்பவர்களை அதிகம் பார்க்கிறார்கள், அடிக்கடி பார்க்கின்றார்கள். நல்லது.

ஜகதீஸ் சகோதரருடன்: எல்லாம் நன்றாக உள்ளதா. எல்லாவற்றையும் விட மிக நல்ல விஷயம், நீங்கள் சரீர சகிதமாக தன்னை, தந்தைக்கு அர்ப்பணம் செய்து விட்டீர்கள். அப்படியாக தந்தைக்கு தனது அனைத்தையும் கொடுத்து விட்டீர்கள். கொடுத்து விட்டீர்கள்தானே? நீங்களோ நிமித்த ஆத்மாக்கள் என்ன கொடுத்தனரோ, அப்போது சாகார ரூபத்தில் பின்பற்றுகிறீர்கள். சாகார ரூபத்தில் மகாரதிகளைப் பார்த்து எல்லோருக்கும் சக்தி கிடைக்கிறது எனில் இந்த எல்லா குழுக்களும் என்ன? சக்திகளின் துதிப்பாடல்கள்தானே!

(தாதி ஜானகி கூறுகின்றார் -நடத்துபவர் மிக ரகசியமானவர்). ரகசியமானவராக இல்லையேல் இவ்வளவு வளர்ச்சி எப்படி ஆகியிருக்கும். தந்தை கூறுகிறார் நடப்பவரும்கூட தந்தையை விட மிகவும் சாமர்த்தியானவர்!

நல்லது. எல்லோரும் சதா ஒரு வார்த்தையை மனதார பாடிக் கொண்டே இருக்கின்றனர் -மேரா பாபா! இந்தப் பாடல் அனைவருக்கும் பாட வருகிறது. எளிதுதானே. 'மேரா' என்றதும் தன்னுடையவராக்கி விட்டார். தந்தை கூறுகின்றார், குழந்தைகள் தந்தையைவிட புத்திசாலிகள், ஏன்? பகவானைக் கட்டிப்போட்டு விட்டனரே! (தாதி ஜானகியிடம்) கட்டிப்போட்டு விட்டனர்தானே. எனில் கட்டிப் போடுபவர் சக்திசாலியா அல்லது கட்டப்பட்டவரா? யார் சக்திசாலி ஆனார்கள்? கட்டுபவர் வழியை மட்டும் உங்களுக்குக் கூறினார், இப்படிக் கட்டிப்போட்டால் கட்டுப்படுவார் என. நல்லது. ஓம் சாந்தி!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 20.02.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவஜெயந்தி விரதம் எடுத்துக் கொள்வது மற்றும் சர்வ சமர்ப்பணம் ஆவதின் ஞாபகார்த்தமாகும்!

இன்று திரிமூர்த்திகளையும் படைப்பவரான சிவதந்தை தன்னுடைய பூஜிக்கத்தக்க சாலிகிராம்களை சந்திக்க வந்திருக்கின்றார். சந்திப்பதுமட்டுமல்ல, இன்று கொண்டாடவும் வேண்டும். நீங்கள் எல்லோரும். உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் பாப்தாதாவின் ஜெயந்தியைக் கொண்டாடுவதற்காக ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் வந்து சேர்ந்திருக்கின்றீர்கள். குழந்தைகள், தந்தையின் ஜெயந்தியைக் கொண்டாட வந்திருக்கிறோம் என்று கூறுகின்றனர். தந்தை, குழந்தைகளின் ஜெயந்தி யைக் கொண்டாட வந்திருக்கின்றேன் என்று கூறுகின்றார். நீங்கள் எல்லோரும் கூட தங்கள் ஜெயந்தியான அலௌகீக பிறந்த தினத்தைக் கொண்டாட வந்திருக்கின்றீர்கள். முழு கல்பத்திலும் இப்படிப்பட்ட நியாரா மற்றும் பியாரா பிறந்த நாள் ஒருபோதும் நடப்பதில்லை. தந்தையோடு கூட, குழந்தைகளினுடைய ஜெயந்தியையும் கொண்டாடும் இப்படிப்பட்ட பிறந்த நாளை முழு கல்பத்திலும் எப்போதாவது பார்த்திருக்கின்றீர்களா? ஏனென்றால், உலக பரிவர்த்தனை என்னும் காரியத்தில், சிவ தந்தை மற்றும் பிரம்மா தாதாவுடன் பிராமணர்களும் கூட அவசியம் வேண்டும். பிராமணர்கள் இல்லாமல் யக்ஞம் வெற்றி பெறாது. ஆதலால் தான் தந்தை மற்றும் குழந்தைகள் ஆகிய இருவருக்கும் சேர்ந்து ஜன்ம தினம் அதாவது ஜெயந்தி. ஆகவே குழந்தைகள் உளமார தந்தைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக் கின்றனர். மேலும் தந்தை ஒவ்வொரு பிராமண குழந்தைக்கும், அலௌகீக ஜன்மத்திற்கு, கோடான கோடிக்கு அதிகமாக உள்ளத்தின் ஆசீர்வாதங்களோடு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்வாழ்த்துக்கள். நல்வாழ்த்துக்கள். நல்வாழ்த்துக்கள். மிகவும் நன்று. ஒரு கை அசைப்பது நன்றாக இருக்கிறது. இரண்டு கை களால் அல்ல.

மிகவும் குஷியாக இருக்கிறது. ஆதலால் கை, சும்மா இருக்க முடியவில்லை, தனது வேலையைச் செய்து விடுகிறது. (கை தட்டுகிறார்கள்).

உலகில் பக்தர்களும் கூட சிவ ஜெயந்தியை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அவர்களுடைய பண்டிகை ஒரு நாள் மட்டும் விழித்திருப்பது மற்றும் ஒரு நாள் மட்டும் விரதம் இருப்ப தாகும். குழந்தைகளாகிய நீங்கள் அஞ்ஞான உறக்கத்திலிருந்து விழித்திருக்கும் எண்ணம், ஒரு நாளைக்கு மட்டுமல்ல. நீங்கள் ஒரு சங்கமயுகத்தின் வைரத்திற்குச் சமமான ஜன்மத்தை விழிப்படையச் செய்திருக்கின்றீர்கள். மேலும் செய்து கொண்டு மிருக்கின்றீர்கள். விழிப்படைந்து விட்டீர்களல்லவா? இப்போது மீண்டும் உறங்க மாட்டீர்கள் தானே! அல்லது கொஞ்சம், கொஞ்சம் தூங்குவீர் களா? நன்று. உறங்குவதில்லை. கொஞ்சமாக தூக்கக்கலக்கத்தில் கொட்டாவி விடுவீர்கள். அப்படியா! உங்களு டைய விழிப்பு அப்படிப்பட்டதென்றால், நீங்கள் விழிப்படைவதோடு, மற்றவர் களையும் விழிப்படையச் செய்கின்றீர்கள். ஞான வாழ்க்கையில் விழிப்பது என்பது இருளிலிருந்து, வெளிச்சத்திற்கு வருவதாகும். இந்த அலௌகீக விழிப்பு எல்லோருக்கும் பிடித்தமானதாக இருக்கிறதல்லவா? எப்போது ஜன்மம் எடுத்து ஜெயந்தி கொண்டாடினீர்களோ, அப்போதிருந்து என்னென்ன விரதம் எடுத்துக் கொண்டீர்கள்? ஞாபகமிருக்கிறதா? இதற்கு குழந்தைகள் கூறுகின்றனர். ஞாபகம் மட்டுமல்ல, எங்களுடைய இயற்கையான வாழ்க்கையே விரதம் ஆகி விட்டது. தூய்மையான உணவு, தூய்மையான பழக்க வழக்கங்கள், தூய்மையான சிந்தனை, இம்மாதிரியான வாழ்க்கையாகி விட்டது. ஒரு மாதம், அல்லது இரண்டு மாதங்களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையே விரதத்தோடு கூடியதாகி விட்டது. இயற்கையாகி விட்டது. இயல்பாகி விட்டது. தூய்மையான இயல்பையுடையதாகி விட்டதல்லவா? இயல்பாகி விட்டதா? அல்லது ஆக்க வேண்டியதாக இருக்கிறதா? ஆகி விட்டது தானே? ஒரு கை மெதுவாக அசையுங்கள். அதுபோதும். ஆகி விட்டது. தூய்மையற்ற (அசுத்தமான) இயல்பு முடிந்து விட்டது. மேலும் தூய்மையான வாழ்க்கையில் ஒன்றிவிட்டீர்கள். இப்படிப்பட்ட வைரத்திற்குச் சமமான சிவஜெயந்தி மற்றும் சாலிகிராம் ஜெயந்தி கொண்டாடி விட்டீர்கள். நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா நாடுகளையும் சேர்ந்த

குழந்தைகளும் கூட, சேர்ந்து கொண்டாடுகிறார்கள். நாலா பக்கங்களிலும் (மதுபன் வராமல் இருக்கும் குழந்தைகள்) தந்தையுடனும், உங்களுடனும், அவர்களும் கூட எவ்வளவு சந்தோஷமடைந்து கொண்டிருக்கின்றனர்.

இன்றைய தினம் விசேஷமாக பக்தர்கள், உங்களுடைய ஞாபகார்த்தமாக பலியும் கொடுக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் மனம், சொல், செயல் மூலமாக, தந்தையிடம், உங்களை அர்ப்பணிக்கின்றீர்கள். (சமர்ப்பணம்) இதன் ஞாபகார்த்தமாக பக்தர்கள், தங்களை பலியிடுவதற்குப் பதிலாக (அர்ப்பணிப்பதற்குப் பதிலாக) ஆட்டை பலி கொடுக்கிறார்கள். பலி கொடுப்பதற்கு ஆடுதான் கிடைத்ததா? வேறு எதுவும் கிடைக்கவில்லை, ஏன்? இதிலும் இரகசியம் உள்ளது. உங்களுக்குத் தெரியும். ஏனென்றால், எல்லாவற்றையும் விட பெரிய தேகாபிமானத்திற்குக் காரணம் "நான்" எனும் அகங்காரம். இந்த அகங்காரத்தை எப்போது அர்ப் பணித்து விடுகிறீர்களோ, அப்போது தான் பிராமணன் ஆகின்றீர்கள். ஆடு என்ன செய்கிறது? மே, மே என்று கத்துகிறதல்லவா? இது தேகாபிமானமான "நான்" எனும் அகங்காரத்தின் அடையாள மாகும். இந்த தேகாபிமான அகங்காரம் மிகவும் சூட்சுமமானதோடு, விதவிதமானதாகவும் இருக்கின்றது. எல்லாவற்றையும் விட முதலாவது அகங்காரம் நான் சரீரம், இன்னார் என்பது பிறகு சம்மந்தத்தில் சிக்கிக் கொள்வதிலும் கூட விதவிதமான அகங்காரம் உள்ளது. பிறகு தங்களுடைய அந்தஸ்து பற்றிய விதவிதமான அகங்காரம், பிறகு சூட்சுமமாக, தன்னிடமுள்ள ஏதாவதொரு விசேஷத்தைப் பற்றிய அகங்காரம். இவை நிலையை (ஸ்திதி) மேலும் கீழுமாக ஆக்கி விடுகிறது. ஒவ்வொருவரிடத்திலும், ஸ்தூலத்திலோ, சூட்சுமத்திலோ ஒரு விசேஷமாவது அடங்கியுள்ளது. விசேஷமே இல்லாத ஒரு மனித ஆத்மா கூட இல்லை. ஞானி ஆத்மாவிலும் கூட ஒவ்வொரு பிராமணனுக்குள்ளும் குறைந்த பட்சம் ஒரு விசேஷமாவது நிச்சயமாக இருக்கிறது ஆனால் ஞானி வாழ்க்கையில் விசேஷம் என்பது பரமாத்மா கொடுத்தது. இது பரமாத்மாவின் அன்பளிப்பு பரமாத்மா கொடுத்த அன்பளிப்பை தேகாபிமானத்தின் வசமாகி அகங்காரத்தில் நான் இப்படி, நான் அப்படி என்று கூறுவது, ராயல் அபிமானமாகும். இது மிகப் பெரிய அகங்காரம் சமர்ப்பணமாகி விட்டீர்கள் ஆனால் இனி என்ன பார்க்க வேண்டும்?

டீச்சர்ஸ் எல்லோரும் தங்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்? “சமர்ப்பணம்" ஆகி விட்டீர்கள் அல்லவா? நன்று. பிரவிருத்தியில் (குடும்ப வாழ்க்கை) உள்ளவர்கள் சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? சமர்ப்பணம் ஆம் அல்லது இல்லை -என்ன கூறுகின்றீர்கள்? ஆகி விட்டீர்கள். பாண்டவர்கள் சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா? மிக்க நன்று. வாழ்த்துக்கள். இனி மேல் என்ன செய்ய வேண்டும்? சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள். மிகவும் நன்று. இப்போது இனி மேல் இதை சோதித்துப் பார்க்க வேண்டும். அது என்ன என்று சொல்லட்டுமா? சமர்ப்பணம் ஆகி விட்டோம். இனி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டீர்கள். ஒன்று சமர்ப்பணம். இதன் பிறகு சர்வ சமர்ப்பணம். எல்லோரிலும் விசேஷமாக கோடிட்டு கவனம் (Underline) செய்ய வேண்டிய ஒன்று உண்டு. தன்னுடைய மனம், புத்தி, சம்ஸ்காரம் இணைந்து சமர்ப்பணம் ஆகவேண்டும். ஏனென்றால். எவ்வளவு முன்னேறிக் கொண்டிருக்கிறீர்களோ, புருஷாரத்தத்தில் தீவிரமாக அடியெடுத்து வைக்கின்றீர்களோ, அப்போது இன்றைய சூழ்நிலையின் அடிப்படையில் (வாயுமண்டலம்) பிராமண வாழ்க்கையில் (மெஜாரிட்டி பிராமணர்கள் அமர்ந்துள்ளனர்) மனதின் மீது வீணானது, (வியர்த்தம்) அசுத்தமல்ல, அசுத்தம் முடிந்து விட்டது. மற்றும் எதிர்மறையானது (நெகட்டிவ்) தற்சமயத்தில் வாயுமண்டலத்தின் பிரபாவம் புத்தியில் கிறது, என்றால் யதார்த்தமாக, மேலும் சத்திய நிர்ணயம் செய்யக்கூடிய உணர்வின் சக்தி குறைந்து விடுகிறது. அறிவு பூர்வமாக, இது தவறு, இது சரி என்ற உணர்வு ஏற்படுகிறது ஆனால் ஒன்று விவேக பூர்வமாக உணர்வது, இரண்டாவது உள்ளப் பூர்வமாக உணர்வது. எந்த ஒரு விஷயமானாலும், அதனை உள பூர்வமாக உணர்ந்து விட்டால் போதும். பிறகு உலகமே மாறினாலும் தன்னில் மாற்றம் ஏற்படாது. சரி, மனம் புத்தியைப் பற்றிச் சொல்லியாகி விட்டது. இப்போது சம்ஸ்காரம் பற்றியது. சம்ஸ்காரம் 63-ஜன்மம் பழையதாகி விட்டதன் காரணமாக இயற்கையாகி விட்டது. இதை வேறு விதமான வார்த்தையில் இதை தவறு என்று சொல்ல முடியாது, என்னுடைய சுபாவம் என்கின்றீர்கள். இப்படி, பழைய சம்ஸ்காரம் சில நீங்கி விடுகிறது. இன்னும் சில அமிழ்ந்து விடுகிறது. அமிழ்ந்திருப்பது மீண்டும் தலை தூக்குகிறது ஆனால் சர்வ சமர்ப்பணம் என்பதன் பொருள், மனதின் இயல்பு மற்றும் பாவனை ஒவ்வொரு ஆத்மாவும் பரிவர்த்தனை (சுயமாற்றம் அடைதல்)

யாகட்டும் என்பதாகும். இதற்காக பாப்தாதா கூறுகின்றார். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், விதவிதமாக இருக்குமல்லவா? கல்ப விருக்ஷம், அநேக விதமாக இல்லையென்றால் அழகாக இருக்காது. என்றாலும் ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும், இவர்கள் நிச்சயமாக மாறி விடுவார்கள் என்ற சுப பாவனை, சுப அபிலாஷை இருக்க வேண்டும் என்பது. இவராவது, மாறுவதாவது என்று நினைக்கக் கூடாது. அவரைப் பற்றி நீங்களே தீர்மானித்து, இவர் மாறவே மாட்டார் என்று நீதிபதியாகி குற்றம் சுமத்தி விடக்கூடாது. நீங்கள் இயற்கையையும் கூட (பிரகிருதி) பரிவர்த்தனை செய்து சதோகுணி ஆக்க வேண்டும். ஆக்கிய தீர வேண்டும் என்று சவால் விட்டீர்கள் அல்லவா? ஆகும் என்பதல்ல, ஆக்குவோம் என்று. இதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆக்கியே தீர வேண்டும். ஆக்கியே என்ற வார்த்தையை கோடிட்டு வைத்துக் கொள்ளுங்கள். சரி. பிரகிருதியை மாற்ற முடியும் என்றால், ஆத்மாவை மாற்ற முடியாதா? ஆத்மா, பிரகிருதியின் எஜமானன். பிரகிருதி மாறும் என்றால் ஆத்மா மாறாதா? ஆகையால் தற்சமயத்தில் மனம்-புத்தி சம்ஸ்காரம் என்ற சுய பரிவர்த்தனை மற்றும் எல்லோருடைய பரிவர்த்தனையும் ஆக வேண்டும். இந்த சேவை இருக்கின்றது.

எல்லோரும் இந்த ஆண்டு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகையால் டபுள் சேவை செய்ய வேண்டும். ஒன்று தன்னை (சுயம்) சர்வ சமர்ப்பணம் (மனம்-புத்தி-சம்ஸ்காரம் மூன்றும்) செய்வது, உங்களுடைய அர்ப்பணம் என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால், உங்களுடைய வாயுமண்டலம், உங்களுடைய வைப்ரேஷன், உங்களுடைய சம்மந்தம், உங்களுடைய உளப்பூர்வமான சகயோகம், உங்களுடைய உளப்பூர்வமான ஆசீர்வாதம், எல்லோரையும் பரிவர்த்தனை செய்யும்படியான சகயோகமாக இருக்க வேண்டும். இவ்வளவு சுய பரிவர்த்தனை செய்ய வேண்டும். சர்வ அர்ப்பணம் ஆக்க வேண்டும். இது ஒரு சேவை. பிறகு அடுத்தது உலக சேவை. சேவையின் பலனைப் பார்க்கும்போது எல்லா நாடுகளையும் சேர்ந்த பிராமண குழந்தைகள் இது வரையிலும் என்னென்ன சேவை செய்திருக்கின்றார்களோ, அதை தந்தையிடம் வைத்திருக்கின்ற உள்ளன்புடன் செய்திருக்கின்றனர். இதற்காக பாப்தாதா, மிக, மிக, மிக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். இனி என்ன செய்ய வேண்டும்?

அநேகர் பிராமணன் ஆகியிருக்கின்றார்கள். பிராமணர்கள் விருத்தியாகியிருக்கின்றார்கள். இன்னும் தீவிர கதியில் விருத்தி உண்டாகும். இதை பாப்தாதா பார்த்திருக்கின்றார். இத்தோடு உலகத்திற்குப் பிரியமான சேவையும் செய்திருக்கின்றார்கள். விதவிதமான திட்டங்கள் மூலமாக சேவை நடந்து கொண்டிருக்கிறது. இது நன்றாக இருக்கின்றது. இப்போது வெவ்வேறு இடங்களில் சகயோகி ஆத்மாக்கள் நல்ல விதமாக நிமித்தமாகியிருக்கின்றார்கள். சகயோகிகள் மிக நல்லவர்களாக இருக்கின்றனர். ஒரு காலடி சகயோகமாக இருக்கிறது. ஒரு காலை முன்னே அடியெடுத்து வைத்திருக்கிறார்கள் ஆனால் இன்னொரு அடி சகஜயோகி, கர்மயோகி. கர்மயோகி, சகஜயோகி என்று கொஞ்சம் கொஞ்சம் ஆகியிருக்கின்றார்கள். இது அடுத்த ஒரு அடி இப்போது இப்படிப்பட்ட ஆத்மாக்கள் நடைமுறையில் (Practical) சொரூபத்தில் மேடை மீது (எல்லோர் முன்னிலையிலும்) பார்ட் செய்ய வேண்டும். பேச்சாளர்கள் (மைக்) ஸ்டேஜ் மீது இருப்பார்கள் அல்லவா? ஆகவே பேச்சாளர்களாகி சேவை ஸ்டேஜ்'ல் (மேடையில்) பிரத்யக்ஷமாக நிச்சயமாக வருவார்கள். நீங்கள் அவர்களுக்கு சக்தி கொடுப்பவர்களாக இருங்கள். அவர் ள் பேசுபவர்களாக இருக்கட்டும். பிரம்மாபாபா அவ்யக்த ரூபத்தில் சக்தியாக இருந்து கொண்டு குழந்தைகளாகிய உங்களை பேச்சாளர்களாக (மைக்) ஆக்கினார். இதுபோல இப்போது நீங்கள் சக்தி கொடுப்பவர்களாகி, பேசுபவர்களை தயார் செய்யுங்கள். மிக மிக நல்ல விதமாக, நம்பிக்கையோடு முன்னேறு பவர்களாக இருக்கின்றனர். இப்போது இப்படிப்பட்ட ஆத்மாக்களின் தொடர்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அவர்கள் என்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்று தெரியாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற வழி காட்டுங்கள். லௌகீக அதிகார அந்தஸ்து மற்றும் அலௌகீக சேவை இரண்டையும் பேலன்ஸாக வைத்து கடைசியில் வந்தாலும், வேகமாகவும், வேகத்தின் மூலம் முதல் லைனில் வர வேண்டும் என்று அவர்களிடம் கூறுங்கள். இப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். பிரத்யக்ஷம் ஆகப் போகிறார்கள். தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் போதும், சக்தி கொடுங்கள். ருஹானியத் சக்தி. வைப்ரேஷன், வாயுமண்டலத்தின் சக்தி மற்றும் விதி பற்றி கூறுங்கள். இவ்வாறு நிமித்தமாகி, பேலன்ஸ் வைத்துக் கொண்டு வாழ்க்கை கொள்பவர்களுடைய வாழ்க்கை மிக

நன்றாக, சகஜமாக ஆகி விடும். அமைத்துக் சரிதானே! என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கேட்டீர்கள் அல்லவா?

சிறு சிறு பூச்செண்டு தயார் செய்யுங்கள். பெரிய பூச்செண்டு வேண்டாம் பரவாயில்லை. 5-மலர்கள், 10-மலர்கள் கொண்ட பூச்செண்டை அழைத்து வாருங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் பாப்தாதாவின் பார்வை உள்ளது. கேட்டீர்களா? பாண்டவர்கள் கேட்டீர்களா? மிகவும் நல்லது.

டபுள் ஃபாரினர்ஸ் தாண்டவில்லை, பறந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே முதல் பூச்செண்டு யாருடையது? வெளிநாட்டினருடையதா? பாரதவாசிகளுடையதா? யார் கொண்டு வரப் போகிறார்கள். ஒரு பக்கம் ஃபாரினர்ஸ், இன்னொரு பக்கம் பாரதம். இருவருமே பூச்செண்டை மேடைக்கு அழைத்து வருவார்கள். நீங்கள் மரியாதை உபசாரம் செய்கின்றீர்கள் அல்லவா? அதுபோல அவர்களுக்கும் மரியாதை உபச்சாரம் செய்ய வேண்டும். இரண்டு பூச்செண்டுகள் ஒன்று பாரதம். இன்னொன்று வெளிநாடு சரியா? வெளிநாட்டினர் என்ன நினைக்கிறார்கள்? சரியா? அப்படியானால் அடுத்த சீசனில் கொண்டு வருவீர்களா? கொண்டு வர வேண்டும். பாரதவாசிகள் கொண்டு வருவார்களா? லௌகிக் மற்றும் அலௌகிக் வாழ்க்கையில் பேலன்ஸ் உள்ளவர்கள். உங்களைப் போன்று பிராமண வாழ்க்கையில் உள்ளவர்கள் அல்ல. லௌகிகம் மற்றும் அலௌகீகம் அவர்களுடைய பிரபாவம் அதிகமாக இருக்கும். உங்களிடம் திருஷ்டி வாங்குவதற்காக வருவார்கள். நல்லது. என்ன யோசனை செய்கிறீர்கள் ஜெயந்தி! யாரென்று, பெயர் யோசிக்கிறீர்களா? இங்கே நிர்மலா, மோஹினி ஆகியோர் யாரை அழைத்து வரலாமென்று யோசிக்கிறார்கள். இங்கே பாண்டவர்களைப் பாருங்கள். பாரத பாண்டவர்கள் மிகவும் குறைவு. சுபான் அல்லா. இங்கே பாருங்கள், கொஞ்சம் கொஞ்சப்பேர் அமர்ந்திருக்கிறார்கள். இங்கே பிரெய்ன் எதிரில் அமர்ந்துள்ளார். (ஆஸ்திரேலியா பிரதர்) பூச்செண்டு தயாரிக்க வேண்டுமல்லவா என்று பாபா அவரிடம் கேட்கின்றார். மிக நல்ல நல்லவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இதற்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள். என்.சி.ஓ. (National Co-ordinator -NCO) நல்லது. வெளிநாட்டிலுள்ள என்.சி.ஓ.வைச் சேர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். என்.சி.ஓ. ஆவது அவ்வளவு எளிதல்ல. தீவிர முயற்சி செய்ய வேண்டும். செய்ய

முடியும். ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஏனெனில் சூழ்நிலை ஏதுவாக இருக்கிறது. விதை போடப்பட்டிருக்கிறது. பாலனை என்னும் நீர் ஊற்ற வேண்டும். அவ்வளவு தான். இப்போது விதைக்கு பாலனை என்னும் நீர் ஊற்ற வேண்டும். நல்லது. பாப்தாதா எல்லா குழந்தைகளையும் பார்த்து குஷி அடைகின்றார். ஒவ்வொரு குரூப்பிலும் பாதிக்குமேல் புதிதாக வந்து சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அதாவது முதன் முறையாக வருபவர்கள். இது விருத்தியாகியிருப்பதன் அடையாளம். இந்த தடவையில், முதன் முதலாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். கையை மட்டும் உயர்த்துங்கள். டி.வி.காரர்கள் பின்னால் கை உயர்த்தியிருப்பர்கள் பக்கமாக திருப்புங்கள். நிறைய பேர் இருக்கிறார்கள். யார், முதன் முறையாக வந்திருக்கின்றார்களோ, அந்த விசேஷ ஆத்மாக்களுக்கு புதிய பிறந்த நாள் கொண்டாடுவதற்கு நல்வாழ்த்துக்கள். மதுபனில் பிறந்த நாள் இன்று தான் கொண்டாடுகிறார்கள். இந்த தடவை கொண்டாடுகிறார்கள். நன்றாக இருக்கிறது.

டீச்சர்களும் அதிகமாக வந்திருக்கிறார்கள். டீச்சர்களுக்கும் நல்வாழ்த்துக்கள். நீங்கள் தான் சேவை செய்திருக்கிறீர்கள் அல்லவா? ஆகவே சேவைக்கு நல்வாழ்த்துக்கள். நல்லது. குஜராத் நிலைமை என்ன? குஜராத்தில் குழப்பம் ஆரம்பமாகி விட்டது. அதிகமான குழப்பம் குஜராத்தில். வெளிநாட்டில் கொஞ்சம், கொஞ்சம் ஆரம்பமாகியிருக்கிறது. பயப்படவில்லை தானே? பூமி தான் ஆடுகிறது. மனம் ஆடவில்லையல்லவா? எங்கே பூகம்பம் வந்ததோ, நஷ்டம் அதிகமாகியதோ, அங்கிருந்து வந்திருப்பவர் கள் கை உயர்த்துங்கள். அகமதாபாத்திலிருந்து வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள் நல்லது. மனம் ஆடியதா? பூமி ஆடியதா? என்ன நடந்தது? மனம் கொஞ்சம் இப்படி அப்படி ஆகி விட்டது அப்படியா? இல்லையா? மாவீரர்கள். குழந்தைகள் தங்களுடைய துணிவு மற்றும் தந்தையின் பாதுகாப்பு குடைநிழலில் (க்ஷத்ரக்ஷாயா) உங்களுடைய ரிகார்டு நன்றாக வைத்திருக்கின்றீர் கள். யாரும் தோல்வி அடையவில்லை. எல்லோரும் பாஸாகி விட்டார்கள். சிலர் கொஞ்சம் சிலர் அதிகம். ஒவ்வொரு இடத் திலும் நம்பர் வார் இருக்கிறதல்லவா? என்றாலும் எல்லோரும் பாஸாகி விட்டார்கள். நல்வாழ்த்துக்கள். இவற்றிலெல்லாம் மிகவும் நாசூக்கான (பூகம்பம் அதிகமாக இருந்த இடம்) இடத்திலிருந்து யார் வந்திருக்கிறார்கள்?

(ஒருவர் புஜ், இன்னொருவர் பச்சாவு) நல்லது. நீங்கள் ஆயிரம் கைகளை உடையவருடன் இருந்தீர்கள் நல்லது. பேப்பரில் பாஸ். (சோதனை) மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இனிமேலும் ஆடிவிடக்கூடாது. இனிமே நடந்து கொண்டே தான் இருக்கும். பயப்பட வேண்டாம். (தினமும் இதுபோல நடக்கும்) நடக்கட்டும். பரிவர்த்தனை ஆகவேண்டுமல்லவா? பிரகிருதி தன்னுடைய காரியத்தைச் செய்யுமல்லவா? எப்போது மனித ஆத்மாக்கள் பிரகிருதியை (இயற்கையை) தமோகுணி ஆக்கி விட்டார்களோ அப்போது அது தன் காரியத்தைச் செய்யுமல்லவா? ஆனால் ஒவ்வொரு விளையாட்டும் டிராமாவில் அடங்கியுள்ள ஒரு விளையாட்டு தான். இந்த விளையாட்டைப் பார்த்து தனது ஸ்திதியை மேலும், கீழும் ஆக்கி விடக்கூடாது. பரஸ்திதி, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களின் சுய ஸ்திதி மீது பிரபாவம் ஏற்படுத்திவிடக் கூடாது. மேலும் மற்ற ஆத்மாக்களின் மானசீகமான குழப்பங்களிலிருந்து, அவர்களை விடுவிப்பதற்கு நீங்கள் நிமித்தமாகுங்கள். ஏனென்றால் மனக் குழப்பம் உங்களுடைய யோக சக்தியின் மூலமாகவே நீக்க முடியும். டாக்டர்கள் தங்களுடைய கடமையைச் செய்வார்கள். விஞ்ஞானிகள் அவர் களுடைய கடமையைச் செய்வார்கள். கவர்ன் மெண்ட் அதனுடைய கடமையைச் செய்யும். இதுபோல உங்களுடைய கடமை மனக் குழப்பத்தை, மன இறுக்கத்தை நீக்குவது. மன இறுக்கமான வாழ்க்கையிலிருந்து விடுவிப்பது. உதவி செய்வது, தற்சமயம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ளவர்கள் சகயோகியாகி, சகயோகம் கொடுக்கிறார்கள் அல்லவா? இவர்கள் நல்லவிதமாக சகயோகம் தருகின்றார்கள். இதன் மூலம் வெளி நாட்டினராயினும், வேறு யாராயினும் பாரத தேசத்தின் மீது அன்பிருக்கிறது என்பது உறுதியாகிறது. ஒவ்வொருவரும் தத்தமது கடமையைச் செய்து கொண்டிருக்கின்றனர். நீங்கள் உங்களுடைய கடமையைச் செய்கிறீர்கள். உதாரணமாக எங்காவது நெருப்பு பற்றிக் கொண்டால், தீயணைப்பவர்கள், பயப்படாமல் தீயை அணைக் கிறார்கள் அல்லவா? இதுபோல நீங்களும் கூட மனதில் எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பை அணைப்பவர்கள். நல்லது.

குஜராத் எப்படி இருக்கிறது? சக்திசாலியாக உள்ளதா? ஆயிரம் கரங்களின் அரவணைப்பில் பாதுகாப்பு குடை நிழலில் பத்திரமாக

இருக்கிறார்கள். வேறு எங்கு வந்தாலும் குஜராத்தைப் பார்த்து இப்போது அனுபவி ஆகி விட்டீர்கள். எங்கே வேண்டுமானாலும் வரட்டும் (பூகம்பம்) இயற்கையின் சீற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது. குஜராத்தில் வரட்டும், அபுவில் வர வேண்டாம். பாம்பேயில் வர வேண்டாம் என்று சொல்ல முடியாது. அதற்கு சுதந்திரம் உண்டு ஆனால் எல்லோரும் தங்களுடைய சுய ஸ்திதியை மிக உறுதியாக (அச்சல்-அடோல்) தங்களுடைய மனம் மற்றும் புத்தியை மன ஓட்டத்தை (லைன் கிளியர்) சீராக வைத்துக்கொள்ள வேண்டும். லைன் கிளியராக இருந்தால், டச்சிங் ஆகும். (உள்ளுணர்வைத் தொடும்) பாப்தாதா இதற்கு முன்னரும் கூறியிருக்கின்றார். அவர்களுடையது வயர்லெஸ். உங்களுடையது வைஸ்லெஸ் (நிர்விகாரி) புத்தி என்ன செய்ய வேண்டும்? என்ன நடக்கும்? இதை தெளிவாக உங்களால் தீர்மானிக்க முடியும். சீக்கிரமாகவும் செய்ய முடியும். வீட்டை விட்டு வெளியே போய் விடலாமா? உள்ளேயே இருந்து விடலாமா? வாசற்படியில் உட்கார்ந்திருக்கலாமா? மாடிக்குச் சென்று விடலாமா? என்ற குழப்பமெல்லாம் இருக்காது. எங்கே பாதுகாப்பாக இருக்குமோ, அந்த இடத்தை நோக்கி, உங்கள் கால்கள் தானாகவே நடக்கத் தொடங்கி விடும். பயப்படத் தேவையில்லை. ஒருவேளை உங்களுக்கு மிகவும் பயமாக இருந்தால், உங்களுக்கு அடைக்கலம் தருவதற்கு மதுபன் இருக்கிறதல்லவா? அது உங்களுடைய வீடு. பயப்பட வேண்டாம். இப்போது நடக்கும் சம்பவங்களெல்லாம் ஒன்றுமேயில்லை. இன்னும் நடக்க வேண்டியது நிறைய இருக்கிறது. பயப்படத் தேவையில்லை. விளையாட்டுதான். பரிவர்த்தனை ஆகவேண்டு மல்லவா? விநாசம் அல்ல. பரிவர்த்தனை ஆக வேண்டும். எல்லாவற்றிலிருந்தும் வைராக்கிய விருத்தி உற்பத்தியாக வேண்டும். இரக்க உணர்வுடன், சர்வ சக்திகள் மூலமாக, மன ஆறுதல் அளிப்பதன் மூலமாக கருணை காட்டுங்கள். புரிந்ததா?

சேவைக்கான வாய்ப்பு -ஈஸ்டர்ன், நேபாள், தமிழ்நாடு ஆகிய மண்டலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது: தமிழ் நாட்டிலிருந்து வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். எல்லோரும் மார்பில் பட்டை அணிந்தவாறு நின்று கொண்டிருக்கிறார்கள். என்ன டியூட்டி? செக்யூரிட்டி டியூட்டி. நல்ல முறையில் சேவை செய்தீர்கள். சேவை செய்ததன் பலனாக குஷியும் அனுபவம் ஆகியது. இந்த சமயத்திற்கும்,

எதிர்காலத்திற்கும் பலமும் கிடைத்தது. சேவைக்கு பலமும் கிடைத்தது, மேலும் பலனும் கிடைத்தது. சரி தானே. மிக நன்றகாக சேவை செய்தீர்கள். நல்வாழ்த்துக்கள். நேபாளம் எழுந்திருங்கள். நேபாளம் என்ன சேவை செய்தது? (காய்கறி நறுக்குதல், தானியம் சுத்தப்படுத்துதல்) கொஞ்சம் கஷ்டமான சேவை தான். நன்றாகச் செய்தீர்கள். காய்கறி நறுக்கவில்லையேல், எல்லோரும் எதை சாப்பிடுவார்கள். ஆகவே நல்ல சேவை செய்தீர்கள். இந்த சேவை செய்ததன் பலனாக இத்தனை பிராமண ஆத்மாக்களின் ஆசீர்வாதம் கிடைத்தது. ஆசீர்வாதம் சேமிப்பாகி விட்டது. எல்லோரும் மனப்பூர்வமாக சேவை செய்தீர்கள். இந்த ரிகார்டு எல்லோருக்கும் நன்றாக இருக்கின்றது. நல்லது. நல்வாழ்த்துக்கள்.

ஈஸ்டர்ன், வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், எழுந்திருங்கள்: பின்னால் நிறைய பேர் இருக்கிறார்கள். பீகார்காரர்களுக்கு என்ன சேவை கிடைத்தது? செக்யூரிட்டி உங்களையும் செக்யூரிட்டியாக வைத்துக் கொண்டீர்கள் அல்லவா? உங்களுடைய சுயஸ்திதிக்கும் செக்யூரிட்டி. மேலும் சாந்தி வனத்திலும் செக்யூரிட்டி (பாதுகாப்பு -பாரா டியூட்டி) டியூட்டி நன்றாகச் செய்தீர்கள். மிகவும் நன்று. பாருங்கள் எல்லோருடைய முகத்திலும் எவ்வளவு மகழ்ச்சி இருக்கிறது! ஏனென்றால் சேவையின் குஷி முகமலர்ச்சியாகி விட்டது. மிகவும் நன்று. ஒரிஸ்ஸா எழுந்திருங்கள், எல்லோரையும் விட அதிகமாக இருக்கிறார்கள். ஒரிஸ்ஸாகாரர்கள் என்ன செய்தார்கள். (தங்குமிடம், ரொட்டி, தண்ணீர், தேநீர், உணவு தயாரித்தல், உபசரித்தல்) ஒரிஸ்ஸாகாரர்களைப் பாருங்கள். நான்கு பொட்டு வைத்து விட்டார்கள். (நான்கு விதமான டியூட்டி) மிகவும் நல்லது. ரொம்ப நல்லது. எண்ணிக்கை அதிகம். ஆகவே தான் நான்கு பொட்டு வைத்துக் கொண்டார்கள். மகிழ்ச்சியாக இருந்ததல்லவா? சேவை செய்ததால் எவ்வளவு குஷி உண்டானது? ரெம்ப அதிகம் இல்லையா? அஸ்ஸாம் அஸ்ஸாமிலிருந்து சக்திகள் அதிகமாக வந்துள்ளனர். சக்தி சேனை பெரியது. என்ன டியூட்டி எடுத்துக் கொண்டீர்கள்? (டிரான்ஸ்போர்ட், வி.ஜ.பி. உணவு) நல்லது. எல்லோருக்கும், நல்ல விதமாக கிடைக்கும்படி செய்தீர்களா? டிரெயினிலிருந்து கொண்டு வந்து, டிரெயின் வரை கொண்டு சேர்த்தீர்கள். சௌகரியமாக சேர்ப்பித்து விட்டீர்கள். நன்றாகச் செய்தீர்கள். அஸ்ஸாமியருக்கு பாப்தாதா

கூறுகின்றார், இவர்கள் விசேஷ ஆசாமிகள். அஸ்ஸாம் அல்ல. ஆசாமி. மிகவும் நன்று. வாழ்த்துக்கள். வங்காளம் உங்களுக்கு என்ன டியூட்டி? (சுத்தம் செய்தல், தாதியுடனான சந்திப்பு, துணி துவைத்தல்) ஒரு பக்கம் சுத்தம் செய்தல், இன்னொரு பக்கம் சந்திக்க வைத்தல். இரண்டுக்கும் எவ்வளவு பொருத்தம்? சுத்தம் செய்வதும் மிக அவசியம். சந்திக்க வைப்பதும் அவசியமே. நீங்கள் தங்களுடைய வீடு என்று உணர்ந்து டியூட்டி செய்தீர்கள். ஆகவே தான் வெற்றி! வெற்றி குழந்தைகளின் ஜன்ம சித்த அதிகாரம். வெற்றி கிடைத்து விட்டது. மிகவும் நல்லது.

அச்சா. இப்போது ஃபாரின் குமார் குரூப். மிக நன்றாக பட்டி செய்தீர்கள். மிக நன்றாக இருந்தது. குமார் மிக நல்ல சேவை செய்வார்கள். குமார்கள் விரும்புவதைச் செய்ய முடியும். செய்து கொண்டுமிருக்கிறார்கள். இனிமேலும் செய்வார்கள். செய்யத் தான் வேண்டுமல்லவா? எல்லோரும் கெட்டிக்காரர்கள். எல்லோ ருமே துணிச்சலானவர்கள் என்பது அவர்களுடைய முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. துணிவுக்கு வாழ்த்துக்கள். மிக நல்லது. பாப்தாதா பார்த்து விட்டாரல்லவா? நம்மை பாப்தாதா பார்க்கவில்லை என்ற குறை இப்போது இருக்காதல்லவா? ஒவ்வொரு வரையும் பார்த்து விட்டேன் நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள்.

அச்சா. பாப்தாதா பார்த்தார். கேள்விப்படவில்லை. பார்த்தார். இந்த முறை டபுள் ஃபாரினர்ஸ் சைலன்ஸ் மிக நல்ல முறையில் அனுபவம் செய்தார்கள். எல்லோரிடமிருந்தும் கேட்க முடியாது ஆனால் கேட்டு விட்டேன். மிக நல்ல விதமாக ஆர்வம், உற்சாகத்துடன் புரோகிராம் செய்திருக்கிறார்கள். பிறகு, இங்கிருந்து அவரவர் இடத்திற்குச் சென்ற பின்னரும் கூட, இந்த சைலன்ஸ் அனுபவத்தை இடையிடையே செய்து கொண்டேயிருக்க வேண்டும். இதற்காக எவ்வளவு நேரம் கிடைத்தாலும் சரி. ஏனென்றால் சைலன்ஸ்'ன் பிரபாவம் சேவையில் இருக்கும். நல்ல விதமாக புரோகிராம் செய்தீர்கள். பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். இனிமேலும் கூட முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். பறந்து கொண்டேயிருக்க வேண்டும். பறக்கவும் உதவ வேண்டும். நல்லது.

இப்போது ஒரு வினாடியில் மனம் மற்றும் புத்தியை ஏகாக்கிரஹம் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? ஸ்டாப் என்றால் ஸ்டாப் ஆகி விட வேண்டும். இப்போது ஒரு வினாடி மனம் மற்றும் புத்தியை முற்றிலும் ஏகாக்கிரஹம் செய்ய வேண்டும். பிந்து பிந்துவில் ஒடுங்கி விடட்டும். மனம் மற்றும் புத்தி இரண்டையும் ஒருமித்து பிந்து ஆத்மாவானது, பிந்து பரமாத்மாவில் லயித்து விடுதல்.

நாலா பக்கங்களிலுமுள்ள சர்வ சிரேஷ்ட பிராமண ஆத்மாக்களுக்கு, நாலா பக்கங்களிலும் திடமான சங்கல்பத்திற்கான விரதம் இருக்கும் உறுதியான ஆத்மாக்களுக்கு, நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா துணிவும் உல்லாசமும் கூடிய சுய சேவை மற்றும் உலக மங்களத்திற்கு சேவை செய்யக்கூடிய மகான் சேவாதாரி ஆத்மாக்களுக்கு, இன்றைய சிவ ஜெயந்திக்கு, வைர சமமான ஜெயந்திக்கு, நியாரே, பியாரே ஜெயந்திக்கு மற்றும் ஆசீர்வாதங்களுடன் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

அச்சா. எல்லோரிடமிருந்தும் மிக நல்ல நல்ல அழகான வாழ்த்து கார்டுகளும் கடிதங்களும் வந்துள்ளன. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். இங்கேயே இருக்கின்றது. மேலும் டபுள் ஃபாரினர்ஸ் தங்களுடைய புருஷாரத்தம் பற்றி மனப்பூர்வமாக கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அவை எல்லாமே பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. எல்லோருடைய கார்டு, கடிதம் மற்றும் விதவிதமாக அலங்காரம் செய்யப்பட்ட மிக அழகானதும், மனதில் ஆர்வம் மற்றும் உற்சாகத்துடன், உள்ளத் திலிருந்து எழுதப்பட்ட கார்டு கிடைத்தது. ஆதலால் வெகு தூரத்தில் இருந்தாலும் மற்றவர்களையும் விட மிக சமீபத்தில், எதிரில் பார்த்து நல்வாழ்த்துக்களை அளிக்கின்றேன். நன்று.

**(ஆந்திர பிரதேசத்தின் முதல்வர் (chief minister) சகோதரர் சாந்திரபாபுநாயுடுஜி மற்றும் அவருடைய தர்ம பத்தினி திருமதி சந்திரபாபுநாயுடு இவர்களுடன் பாப்தாதாவின் நேர்முக உரையாடல்):** தெய்வீக குடும்பத்தில் (காட்லி ஃபேமிலி) வந்து சேரக்கூடிய மிக நல்ல காரியம் செய்தீர்கள். இது காட்லி ஃபேமிலி தானே! நீங்கள் ஃபேமிலி மெம்பர் தானே! அல்லது வெளியிலிருந்து வந்தவரா? என்ன நினைக்கிறீர்கள்? ஃபேமிலி மெம்பரா? நீங்கள் விருந்தினர் அல்ல.

விருந்தினரா? விருந்தினர் அல்ல. இது உங்களுடைய வீடு. ஏனென்றால் இந்த வீடு, பரமாத்மாவின் வீடு. ஆகவே இது எல்லோருடைய வீடு. பாப்தாதாவுக்கு ரெம்பவும் மகிழ்ச்சி. ஏனென்றால், குழந்தையிடம் ஒரு விசேஷம் உள்ளது. அந்த விசேஷம் துணிச்சல். எந்த காரியம் செய்தாலும் மிகவும் துணிவோடு செய்கிறீர்கள். துணிச்சல் இருப்பதால் தானாகவே உதவியும் கிடைக்கிறது. துணிச்சலை ஒரு போதும் விட்டுவிடக் கூடாது. துணிச்சல் பரமாத்மாவின் உதவிக்கும் பாத்திரமாக்கி விடுகிறது. (மிஸஸ் நாயுடு) இவரும் கூட துணிச்சல் உள்ளவர் தான். குறைவில்லை. ஆகையால் கொஞ்சம் பிரச்சினை ஏற்பட்டாலும் வெற்றி கிடைக்கிறது. ஏன்? மன உறுதி எனும் சாவி உங்களிடம் இருக்கிறது. எங்கே உறுதி உள்ளதோ அங்கு வெற்றியும் இருக்கும். வெற்றியாகுமா? ஆகாதா? என்ற கேள்விக்கே இடமில்லை. மற்றபடி சூழ்நிலையின் அடிப்படையில் கொஞ்சம் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். என்றாலும் அவற்றை சைடு சீனாக நினைத்து சென்று கொண்டேயிருங்கள். நல்ல பார்ட் செய்துள்ளீர்கள். உங்களுடைய துணையாக மாநிலத்தில் உங்களுக்கு மிகுந்த அன்பு இருக்கிறது, மேலும் இவர் உங்களுடைய துணையாக இருக்கின்றார். இருக்கிறீர்கள் தானே! உதவியாயிருக்கிறீர்களல்லவா? இவர்கள் எல்லாம் யார்? (செகரட்டரி, செக்யூரிட்டி) மிகவும் நன்று.

நிறைய பக்தர்களுக்கு, பக்தியின் வழியைக் காட்டியிருக்கிறீர்கள் அல்லவா? இதற்கான பலனும் கிடைக்கிறது. ஏனெனில் நல்ல காரியம். கெட்ட காரியம் இல்லை. நல்ல காரியத்தின் பலனாக குஷி கிடைக்கிறது. இலகுவாக (பாரமற்ற நிலை) இருக்க முடிகிறது. நல்லது. செகரட்டரி மிகவும் நம்பிக்கைக்குரியவர், நல்லவர். பாருங்கள், செகரட்டரி உதவி செய்பவராக இல்லாது போனால் வெற்றி கிடைக்காது, ஆதலால் யார் உதவியாக இருக்கின்றார்களோ அது அந்த செகரட்டரிகளின் அர்ப்பணிப்பு. யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, அவர்களுடையது.

அச்சா. நீங்கள் பி.கே.வா? (பிரம்மா குமாரரா?) அச்சா. பாருங்கள். உலகைப் படைப்பவர் யார்? படைப்பவர் பிரம்மா தானே? இதை நீங்கள் ஒப்புக்கொள்பவர் தானே? ஸ்தாபனை செய்பவர் பிரம்மா, பாலனை செய்பவர் விஷ்ணு, மற்றும் பழைய உலகை விநாசம் செய்பவர் சங்கர்.

இந்த மூன்று பேரையும் பற்றித் தெரியுமல்லவா? அப்படியானால் நீங்கள் பிரம்மாவால் படைக்கப்பட்டவரில்லையா? ஆகவே எல்லோரும் பிரம்மா குமார் தான். படைப்பவர் பிரம்மா எனும்போது எல்லோரும் பிரம்மா குமார் தான். இப்போது கொஞ்சம் பிரம்மாபாபாவைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள். போதும். நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள். பாருங்கள். பாப்தாதா மைக் தான். மைக் என்றால் புரிகிறதா? யார் மக்கள் முன்னிலையில் சேவை செய்கிறார்களோ, அவர்கள். இதுபோல நீங்கள் மைக் ஆவதில் நல்ல பார்ட் செய்திருக்கிறீர்கள். உங்களுடைய அசெம்பிளியில் எல்லோருக்கும் இந்த செய்தியைக் கொடுக்கின்ற உங்கள் கடமையைச் செய்தீர்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, அதன்படி நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி, நீங்கள் உங்கள் கடமையை நன்றாகச் செய்தீர்கள். இவ்வாறு நீங்கள் ஒரு முன்னுதாரணம் ஆகி விட்டீர்கள். ஆதலால் பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். மற்றும் உங்களோடு வந்திருப்பவர்களைப் பற்றியும் மகிழ்ச்சியடைகின்றார். (எல்லோருக்கும் மெடிட்டேஷன் செய்வதற்கு பிரேரணை கொடுத்தீர்கள்) பாப்தாதா இதை அறிவார். துணிவுடன் செய்தீர்கள். (இவருடைய லக்ஷியம் பொன்மயமான ஆந்திரா ஆக்க வேண்டும் என்பது) செய்ய முடியாதா என்ன? முழுவதையும் பொற்காலமாக்கத்தான் வேண்டும்.

**கால் ஆஃப் டைம் புரோகிராமில் வந்திருக்கும் விருந்தினர்களுடன்:** உங்கள் எல்லோருக்கும் இது உங்களுடைய வீடு என்று தோன்றுகிறதா? உங்களுடைய வீடா? இவ்வளவு பெரிய காட்லி ஃபேமிலி எப்போதாவது பார்த்திருக்கின்றீர்களா? பார்த்திருக்கின்றீர்களா? பார்க்கவில்லை. இவ்வளவு பெரிய காட்லி ஃபேமிலியில் வந்து சேர்வதற்கு ரெம்பவும் பாக்கியம் செய்திருக்கிறீர்கள். எல்லோருக்கும் அனுபவம் நன்றாக இருந்தது. இனிமேலும் கூட இம்மாதிரி கனெக்ஷன் (தொடர்பு) மூலமாக இந்த அனுபவத்தை அதிகப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். தொடர்பு மிகவும் அவசியம் இல்லையா? எவ்வளவுக்கெவ்வளவு தொடர்பில் இருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு அனுபவம் அதிகமாகிக் கொண்டேயிருக்கும். இப்போது நீங்கள் மெஸ் ஸெஞ்சர் ஆகி சென்று கொண்டிருக்கிறீர்கள். மெஸெஞ்சர் தானே? மெஸெஞ்சரா? என்ன மெஸேஜ் கிடைத்ததோ, அந்த செய்தியை

மற்றவருக்கும் கொடுத்து டென்ஷன்ஃபிரி லைப் ஆக்க வேண்டும். இன்று உலகில் எவ்வளவு டென்ஷன் இருக்கிறது. நீங்கள் டென்ஷன் ஃபிரியை அனுபவம் செய்து, மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்க வேண்டும். செய்ய வேண்டுமல்லவா? நல்லது. யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்கள் விசேஷ மானவர்கள். உங்களிடம் விசேஷம் உள்ளது. இப்போது அந்த விசேஷத்தை காரியத்தில் கொண்டு வந்தால் விசேஷத்தில் முன்னேற்றம் அதிகமாகிக் கொண்டேயிருக்கும். விதையில் எல்லா சத்தும் அடங்கியிருந்தாலும், அது பூமியில் நடப்படாதவரை பலன் ஒன்றும் ஏற்படாது. இதுபோல உங்கள் எல்லோரிடமும் விசேஷம் என்னும் விதை உள்ளது. அதை நீங்கள் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதன் மூலம் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். சரி தானா? நல்லது. இவர் சேவை செய்திருக்கின்றார். நல்ல சேவை செய்திருக்கின்றார். குரூப் தயார் செய்திருக்கின்றார். மேலும் திட்டமும் நல்லவிதமாக தயாரித்திருக்கின்றார். நல்லது. எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியோடிருக்கிறீர்கள் அல்லவா? நல்லது.

**65வது திரிமூர்த்தி சிவஜெயந்தி -பாப்தாதா தன்னுடைய திருக்கரங்களால் கொடியேற்றி வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி, கேக் வெட்டி, எல்லா குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் அளித்தார்!**

எல்லோருமே கொடியை பறக்க விட்டீர்கள். கை சிலருடைய தாக இருந்தாலும் உங்கள் எல்லோருடைய கைகளும் பாபாவுடன் இருந்தது. கடைசியில், பின்னால் யாரெல்லாம் அமர்ந்திருக்கின்றார்களோ, அவர்களுடைய கைகள் எல்லாம் கொடியை பறக்க விட்டது. எல்லோருடைய முகங்களிலும், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பாபாவின் கொடி பறந்து கொண்டிருக்கிறது. இது முகத்தில் தெரிகிறது. உள்ளத்தில் கொடி பறக்கச் செய்து விட்டீர்கள். துணியிலான கொடியும் எல்லா இடங்களிலும் பறக்க விட்டீர்கள். இப்போது பிரத்யக்தா என்னும் கொடி வெகு சீக்கிரமாகவே பறக்க விட வேண்டும் இந்த விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். திடமான உறுதிமொழியுடன் (பிரதிக்ஞை) விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். வெகு சீக்கிரமாக இந்தக் கொடியின் புகழ் பரவ வேண்டும். இப்போது துன்பம் நிறைந்த உலகை முக்திதாமில், ஜீவன் முக்தி தாமில் சேர்ப்பிக்க வேண்டும். மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் கருணை காட்டுங்கள்.

அவர்களை துன்பத் திலிருந்து விடுவியுங்கள். பாபா விடமிருந்து பெறக்கூடிய ஆஸ்தியான முக்தியை எல்லோருக்கும் கொடுங்கள். ஏனெனில் குழப்பத்தில் இருக்கிறார்கள். நீங்கள் உங்கள் கௌரவத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள். அவர்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள். ஒரு போதும் தங்களுடைய மனசா சேவையிலிருந்து விலகக்கூடாது. சதா சேவை செய்து கொண்டேயிருக்க வேண்டும். நல்ல சூழ்நிலையை பரவச் செய்து கொண்டேயிருங்கள். சுகதாத்தாவின் குழந்தைகள் சுகமளிக்கும் வாயுமண்டலத்தை பரப்பிக் கொண்டேயிருங்கள். இப்படித்தான் கொண்டாட வேண்டும். கொண்டாடி விட்டீர்கள். சிவராத்திரி கொண்டாடி விட்டீர்கள். எல்லோரும் கொண்டாடினீர்கள். இங்கேயிருப்பவர்கள் கொண்டாடினார்களா? நாற்காலியில் அமர்ந்திருப்பவர்கள் கொண்டாடினீர்களா? பின்னால் அமர்ந்திருப்பவர்கள் கொண்டாடினீர்களா? இந்தப்பக்கமாக உள்ளவர்கள் கொண்டாடினீர்களா? கேலரியில் உள்ளவர்கள் கொண்டாடினீர்களா? எல்லோரும் சேர்ந்து கொண்டாடினீர்கள். எல்லோருக்கும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!! வாழ்த்துக்கள்!!!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 04.11.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்யவாதி ஆகுங்கள், இன்றைய சமய பிரமாணம் பேகத் விருத்தி, திருஷ்டி மற்றும் கிருத்தி (செயல்) உண்டாக்குவதற்கான திட சங்கல்பம் எனும் தீபம் ஏற்றுங்கள்!

இன்று அன்புக்கடலான பாப்தாதா, தன்னுடைய மிகவும் அன்பான, செல்லமான, இனிமையிலும் இனிமையான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். நீங்கள் எல்லோரும் கூட சந்தித்து மிகழ்வதற்காகவே வந்திருக்கிறீர்கள் அல்லவா! ஓடி, ஓடி வந்திருக்கின்றீர்கள். ஆதலால் பாப்தாதாவும் கூட குழந்தைகளைச் சந்திப்பதற்காக ஓடி, ஓடி வந்திருக்கின்றார். நீங்கள் இந்த லோகத்திலிருந்து வத்திருக்கின்றீர்கள் ஆனால் பாப்தாதா பரலோகத்திலிருந்தும், சூட்சும லோகத்திலிருந்தும் வந்திருக்கின்றார். ஆகவே, எல்லோரையும் விட தூரத்திலிருந்து வந்திருப்பவர் யார்? யார் தூரதேஷி? டபுள் ஃபாரினர்ஸ் (அயல்நாட்டவர்) தூரதேஷிகளா? இல்லை. எல்லோரைக் காட்டிலும் தூரமான, தூரதேஷி தந்தை தான். பாப்தாதாவுக்கு இந்த முறை, டபுள் விதேஷி மற்றும் பாரதவாசி குழந்தைகளைப் பற்றி ஒரு விஷயத்தில் பெருமையாக இருக்கிறது. என்ன விஷயம் அது? எந்த விஷயத்தில் பெருமை? சொல்லுங்கள். குமாரிகள் கூறுங்கள். எந்த விஷயத்தில் பெருமை? பேசுங்கள். குழந்தைகள், விசேஷமாக டபுள் விதேஷி குழந்தைகளினுடைய தைரியத்தைப் பார்த்து, பாப்தாதாவுக்குப் பெருமையாக இருக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் கூட தந்தையைச் சந்திப்பதற்காக வந்து விடுவார்கள். வந்து சேர்ந்து விட்டார்கள். டிராமாவில் உள்ள விளையாட்டும் காட்டப்பட்டது ஆனால் தந்தை மற்றும் குழந்தைகளினுடைய சந்திப்பை டிராமாவும் கூட நிறுத்த

முடியவில்லை. இப்படிப்பட்ட துணிச்சலான குழந்தைகள் மீது பாப்தாதா வரதானங்களாலான மழை பொழிகின்றார்.

இன்று இந்த நேரத்தில் எந்த ஒரு குழந்தையானாலும் எந்த ஒரு வரம் வேண்டுமானாலும், அந்த வரம் கிடைக்கும். சகஜமாகவே கிடைக்கும் ஆனால் இந்த வரதானத்தை தினமும் அமிருதவேளையில் மற்றும் கர்மயோக ஸ்திதியில் அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். மனமுடைந்து விடக்கூடாது. வரதானம் கிடைத்து விட்டது. சதா கண்களில் மாத்திரம், எப்படி ஸ்தூல கண்களுக்கிடையே என்ன ஒளி வீசுகிறது? எல்லோருடைய கண்களுக்கிடையே என்ன ஒளி வீசிக் கொண்டிருக்கிறது? பிந்தி (ஆத்மா) ஒளி வீசிக் கொண்டிருக்கிறதல்லவா? ஒளி நிரந்தரமாக இருக்கிறதல்லவா? இதே போல சதா கண்களில் பிந்துவாக இருக்கின்ற தந்தையை கண்ணுக்குள் வைத்திருக்க வேண்டும். வைக்க முடியுமல்லவா? கஷ்டமா? கஷ்டமில்லையா? சகஜமா? நல்லது. எப்படி ஸ்தூல பிந்து நிரந்தரமாக இருக்கிறதோ அதேபோல கண்களில் பிந்துவான தந்தையும் அடங்கியிருக்க வேண்டும். அடக்கி வைத்துக் கொண்டீர்களா? சரியாகப் பொருந்தி விட்டதா? வெளியில் வந்து விடாதல்லவா? இதுபோல கண்களில் தந்தை பிந்து அடங்கியிருந்தால், வேறு எந்தப் பக்கமும் கண்கள் ஆகர்ஷிக்கப்பட மாட்டாது. கஷ்டப்படுவதினின்றும் விலகி விடுவீர்கள். வேறு பக்கம் பார்வை செல்லவே செல்லாது. முற்றிலும் பத்திரமாக இருப்பீர்கள். என்ன நடந்தாலும் சரி, கண்களில் சதா பிந்து தந்தை அடங்கியிருக்க வேண்டும். சதா கண்களில் அடங்கி யிருந்தால், உள்ளத்திலும் கூட அவர் தான் உறைந்திருப்பார். ஆதலால் உள்ளத்திலும், கண்களிலும் அடக்கி வைப்பதற்கு ஒரு விதி இருக்கிறது -பாப்தாதா சாஹப்பை ராசியாக வைத்துக் கொள்ள வேண்டும். சாஹப் (மரியாதைக்குரியவர்) ராசியாயிருக்கின்றாரா? எத்தனை சதவிகிதம்? சொல்லுங்கள். (சிலர் 99-என்றும் சிலர் 75-என்றும் கூறினர்) நல்லது. பாப்தாதாவை ராசி செய்வது மிகவும் எளிது எளிதா, கஷ்டமா? எளிதானது. பின்னால் இருப்பவர்கள் கூறுங்கள் எளிதா? கை மிக நன்றாக உயர்த்தி விட்டார்கள். பாப்தாதாவை ராசி செய்வதற்கான சகஜ சாதனம் உண்மையான உள்ளம்! உண்மையான உள்ளத்தில் பாபா குடியிருப்பார். (சச்சி தில் பர் சாகப் ராசி) ஒவ்வொரு கர்மத்திலும் சத்யவாதி. சத்தியம், மகான் ஆகும். (சத்யத்தா, மஹானத்தா) யார்

உண்மையான உள்ளமுடையவராக இருக்கின்றாரோ, அவர் சதா சங்கல்பம், பேச்சு மற்றும் கர்மத்தில், சம்மந்தம், தொடர்பு ஆகியவற்றில் ராஜ்யுக்த்தாக இருப்பார்கள். அதாவது உள்ளார்ந்த உண்மைப் பொருளை புரிந்து செய்பவர்கள், அவ்வாறே நடக்கக் கூடியவர்கள். மேலும் இதற்கான அடையாளம் என்ன? தான் எவ்வளவு ராஜ்யுக்த்தாக ஆகியிருக்கிறோம் என்பதை பகுத்தறியக் கூடியவர்களாக இருப்பார்கள். ஒருக்கால் உண்மையான உட்பொருளை (ராஜ்) அறிந்து கொண்டால், அவர்கள் ஒருபோதும் சுயஸ்திதி மீது கோபப்பட மாட்டார்கள். அதாவது மனமுடைந்து போக மாட்டார்கள். மேலும் சங்கல்பத்திலும், விருத்தி மூலமாகவும், ஸ்மிருத்தி மூலமாகவும், திருஷ்டி மூலமாகவும் கூட யார் மீதும் கோபப்பட மாட்டார்கள். ஏன்? எல்லோருடைய மற்றும் தன்னுடைய சம்ஸ்காரம், சுபாவம் ஆகியவற்றை அறிந்து கொள்ளக் கூடிய ராஜ்யுக்த் ஆக இருக்கின்றார். ஆதலால் பாபாவை ராசி செய்வதற்கான விதி -ராஜ்யுக்தாக நடக்க வேண்டும். மேலும் ராஜ்யுக்த் என்றால் தனக்குள்ளேயும் கோபம் வரக்கூடாது, பிறர் மீதும் கோபம் வரக்கூடாது.

சமய அனுசாரமாக தன்னுடைய மனம், புத்தியை சொப்பனம் வரையிலும் கூட சதா சுபம் மற்றும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அநேக குழந்தைகள் (ரூஹ் ரிஹான்) பாப்தாதாவுடன் சம்பாஷனையின் போது கூறுகிறார்கள். பாப்தாதா சக்தியைக் கொடுக்கின்றார் ஆனால் வேண்டும் போது சக்தி உபயோகிக்கப்படுவதில்லை. பாப்தாதா விசேஷமாக எல்லாக் குழந்தைகளுக்கும் துணையாக சம்மந்தத்தில் இருப்பதன் காரணமாக, இப்படிப்பட்ட சமயத்தில் அதிகப்படியான உதவி அளிக்கின்றார். ஏன்? தந்தைக்கு பொறுப்பு இருக்கிறது. குழந்தைகளை சம்பன்னம் செய்து, கூடவே அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக தந்தை இதற்கு பொறுப்பு. ஆதலால் தந்தை இப்படிப்பட்ட சமயத்தில் விசேஷமாக தனது பொறுப்பைச் செய்கின்றார் ஆனால் சில சமயங்களில் குழந்தைகளினுடைய, உணர்ந்து கொள்ளக்கூடிய மனதின் சக்தி எனும் ஸ்விட்ச் உபயோகித்திலிருப்பதில்லை. இப்படியிருந்தால் தந்தை என்ன செய்ய முடியும்? இருந்தாலும் தந்தை ஸ்விட்ச்சை ஆன் செய்வதற்கு, செயல்படுவதற்கு முயற்சி செய்கிறார், ஆனால் நேரம் ஆகி விடுகிறது. ஆதலால் மீண்டும் எப்போது ஸ்விட்ச் ஆன் ஆகி விடுகிறதோ,

அப்போது என்ன கூறுகிறார்கள். செய்யக் கூடாது தான், ஆனால் நடந்து விட்டது, ஆதலால் மனதில் "டச்" ஆவதை உணரக்கூடிய சக்தியின் ஸ்விட்ச் சதா ஆன் செய்திருக்க வேண்டும். மாயை ஸ்விட்ச்சை அணைத்து விட முயற்சிக்கிறது. ஒரு வினாடி நேரத்தில் ஸ்விட்ச்சை “ஆஃப்" செய்து விட்டு சென்று விடுகிறது. நேரம் நாசுக்கானது. (மென்மையானது). இனிமேல் போகப்போக இப்படித்தான் இருக்கும். பயப்பட மாட்டீர்களல்லவா? பரவாயில்லை. பாப்தாதா இதற்கு முன்பே கூறியிருக்கின்றார். எல்லோரும் புத்தாண்டு ஏன் கொண்டாடுகிறீர்கள் என்று. எப்படிப்பட்ட ஆண்டு கொண்டாடினீர்கள்? சம்ஸ்காரத்தின் மூலம் உலக மாற்றம். பக்கா தானே? கொண்டாடினீர்கள் அல்லவா? அல்லது மறந்து விட்டீர்களா? கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். குழந்தைகள், உலக மாற்றத்திற்கான சங்கல்பம் செய்திருக்கிறார்கள். பக்காவாகச் செய்திருக்கிறார்கள் அல்லவா என்று பாபாவிடம் இயற்கை கேட்கிறது. பின்னால் இருப்பவர்கள் சங்கல்பம் செய்திருக்கிறீர்களா? சங்கல்பம் பக்கவாக இருக்கிறதல்லவா? எல்லோருக்குமே சங்கல்பம் இருக்கிறது. ஆதலால் இயற்கை பாபாவிடம் கூறுகிறது. தூய்மைப்படுத்துவதற்கு நான் தயாராகிறேன் என்று ஆனால் தூய்மைப்படுத்துவதற்கு நிமித்தமாயிருப்பவர்கள், சங்கல்பம் செய்து, செய்து, ஆழ்ந்த யோசனையில் இருந்து விடுகிறார்கள். செய்வோமா? வேண்டாமா? என்று குழப்பத்தில் இருக்கிறார்கள். சீக்கிரமாகவே செய்யலாமா? அல்லது மெதுவாகச் செய்யலாமா? இப்படி யிருந்தால் நான் என்ன செய்வது? பிரகிருதிக்கு என்ன பதில் கொடுப்பது? சொல்லுங்கள். டபுள் விதேஷிகள் கூறுங்கள். (சற்று பொறுத்துப் பார்ப்போம்) இது சரியான பதில் அல்ல. ஒருவேளை டபுள் விதேஷிகள் பொறுத்திருக்க வேண்டுமென்று நினைத்தால் விமானம் கிடைக்காது. இப்போது உங்களுக்கு விமானம் (பயணம் செய்வதற்கு) கிடைத்து விட்டது. விமானத்தில் தூங்கிக் கொண்டே வந்தீர்கள் அல்லவா? சௌகரியமாக வந்தீர்கள் அல்லவா? இந்த முழு சபையில் இருப்பவர்களுக்கு, இங்கு வருவதில் ஏதாவது கஷ்டம் இருந்ததா? கை உயர்த்துங்கள். யாருக்காவது கஷ்டம் இருந்ததா? வந்து சேர்ந்து விட்டீர்கள். நேரப்படி வந்து சேர்ந்து விட்டீர்கள். இது தைரியமான காரியம். யார் பயப்பட்டார்களோ, அவர்கள் அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள். நீங்களோ, போகத்தான் வேண்டும் என்று திட சங்கல்பம் செய்தீர்கள். ஆதலால் வந்து சேர்ந்து விட்டீர்கள். ஒரே ஒருவருடைய

விமானம் திரும்பிவிட்டது. அவ்வளவு தானே! இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். பிறகு நல்ல விமானம் கிடைக்கும். இனிமேல் தூய்மை செய்வதற்காக காத்திருக்கும் இயற்கையை யோசிக்கும்படி செய்யாதீர்கள். ஏனென்றால் ஸ்தாபனை செய்பவர்கள் இப்போதும் கூட சிலசமயம் ஆலோசனையில் ஆழ்ந்து விடுகிறார்கள். என்ன செய்வது? இப்படிச் செய்யலாமா? செய்யாமல் இருந்து விடலாமா? சரியாக இருக்குமா? இருக்காதா? முடிவாக முடிவெடுங்கள். சரியா? தவறா? எது சரி என்ற தீர்மானித்து விடுங்கள். ஆகவே நீங்கள் புத்தாண்டு கொண்டாடும் போது இயற்கை தயார் செய்து கொண்டிருக்கும். இப்போது கூட தயார் செய்து கொண்டு தானிருக்கிறது ஆனால் ஸ்தாபனைக்கு நிமித்தமாயிருக்கின்ற ஆத்மாக்கள் இப்போதும் கூட சில விஷயங்களில், தன்னைப் பற்றி அல்லது மற்றவர்களைப் பற்றி யோசிப்பதில் நேரம் அதிகம் எடுத்துக் கொள்கிறார்கள். இது கூடாது. கிளியர் டச்சிங் ஒரு வினாடியில் ஆக வேண்டும். பிந்தி (Full stop) புள்ளி இடுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும். (செகண்டு) அதாவது நடைமுறை வாழ்க்கையில் முற்றுப்புள்ளி வைப்பதானால் ஒரு வினாடி ஆகிறது. ஏதாவதொரு விஷயத்தில் முற்றுப்புள்ளி வைப்பதற்கு. பிந்து ரூப ஸ்திதியில் நிலைத்திருப்பதற்கு ஒரு செகண்டு ஆகிறதா? ஒரு செகண்டு ஆகிறதா? நடைமுறையில் (பிராக்டிக்கல்) ஒரு செகண்டை விட குறைவான நேரமே ஆகிறது. உங்களிடம் ஒரு விஷயம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரு செகண்டு ஆகிறதா? பாண்டவர்கள் கூறுங்கள். ஒரு செகண்டு ஆகிறதா? (சிலசமயம்) பாண்டவர்களுக்கு பிந்தி (புள்ளி) வைப்பதற்கு நேரமாகிறது, ஒரு செகண்டு ஆகிறது என்று கூறுகிறார்கள். சக்திகளிடம் சக்தி இருக்கிறதா? (பாண்டவர்கள் உண்மையைக் கூறுகிறார்கள்). இல்லை. இரு சாராருமே, உண்மையானவர்கள். ஏனென்றால் அவர்களுக்கு இப்போது புள்ளி டச்சாகலாம், உங்களுக்கு டச்சாகாமலிருக்கலாம். ஆதலால் வித்தியாசப்படுகிறது. மற்றப்படி எல்லோரும் உண்மையானவர்கள் தான். உண்மையான உள்ளமுடையவர்கள். ஹால் நிரம்பியிருக்கிறது. கீழேயும் அமர்ந்திருக்கிறார்கள். பாப்தாதா மதுபனில் வந்து விட்டார். அவரவர்களுடைய தூரதேசி திருஷ்டி கண்ணாடி மூலம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களும் கூட பாபாவுக்கு எதிரில் வந்து கொண்டிருக்கிறார்கள். தூரத்திலிருந்தாலும் மனதால் மதுபனில்

இருக்கிறார்கள். இது உங்கள் சாதனம். சாகாரத்திலுள்ள சாதனங்கள், மேலும் கீழும் ஆகி விடக்கூடும் ஆனால் இந்த ஆன்மீக தூர திருஷ்டி, தூரதேச திருஷ்டி ஒருபோதும் கெட்டுப்போகாது. ஆதலால் பாப்தாதாவின் எதிரில் நாலாபக்கங்களிலுமுள்ள எல்லோரும், சேவா கேந்திரத்திலுள்ள குழந்தைகள் யாவரும் எதிரில் தெரிகிறார்கள்.

தீபாவளி கொண்டாடினீர்களா? சங்கமயுகம் என்பது கொண்டாடுவதற்கான யுகம். வேண்டுமானால், அந்தர்முகியாகலாம், அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்யலாம். சேவையில் மகாதானியாகி ஆத்மாக்களுக்கு மகாதானம் கொடுத்துக் கொண்டே, கொண்டாடுங்கள். வேண்டுமானால் உங்களுக்குள் சம்பாஷணை செய்யுங்கள். ஆடிப்பாடி மகிழுங்கள். சம்மந்தம் மற்றும் தொடர்பில் ஒருவர்க்கொருவருடைய விசேஷத்தைப் பாருங்கள். விசேஷத்தாவின் நறுமணத்தை சுவாசியுங்கள். சதா கொண்டாடிக் கொண்டேயிருக்க வேண்டும். இழப்பதற்கான நேரம் முடிந்து விட்டது. இழப்பதற்கான யுகம் இது இல்லை யல்லவா? இப்போது கொண்டாட வேண்டிய, வருமானம் சேமிக்க வேண்டிய யுகம். ஆதலால் பாப்தாதா குழந்தைகளை கொண்டாடிக் கொண்டிருப்பதாகவே காண்கின்றார். எந்த ரூபத்திலாவது கொண்டாடத் தான் வேண்டும். ஏனென்றால் சங்கமயுகத்தில் இருக்கின்றனர். இழப்பது என்றால் என்ன? கொண்டாடுவது என்றால் என்ன? என்பது பற்றிய ஞானம் உள்ளது. ஆதலால் இழந்த பிறகு கொண்டாடும் நேரத்திற்கு மகத்துவம் உள்ளது. இப்போது இழப்பதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் ஸ்டாப். இழக்கவே கூடாது. ஒரு சங்கல்பத்தைக் கூட இழந்து விடக்கூடாது. வருமானம் சேர்ப்பதற்கான நேரத்தில், இழந்து கொண்டிருந்தால், எப்போது சேமிக்கப் போகிறீர்கள்? பிறகு நேரம் இருக்காது. என்னென்ன கஜானா (பொக்கிஷங்கள்) இருக்கின்றன என்று சோதியுங்கள். எல்லாவற்றிலும் பெரிய கஜானா எது? சங்கல்பம், சமயம், ஞானம், பிரத்யக்ஷ வாழ்க்கை யில் இருக்கட்டும். ஞானம் கேட்பது, ஞானம் பிறருக்கு கூறுவது முதல் ஸ்டேஜ் ஆனால் ஞானம் என்றால் அறிவு. அறிவை என்னவென்று சொல்லுகிறீர்கள். அறிவு என்பது ஒளி மற்றும் சக்தி என்று கூறுகிறீர்கள் அல்லவா? ஆதலால் ஞானம் மற்றும் அறிவு என்பதன் பொருள், சங்கல்பத்தில், பேச்சில், செயலில் ஒளி மற்றும் சக்தி இருக்க வேண்டும். அப்போது தான் நாலஜ் ஃபுல் என்று சொல்ல முடியும்.

குமாரிகள் நாலஜ் ஃபுல் (ஞானம் நிறைந்தவர்கள்) ஆகக்கூடியவர்கள் தானே? வெறுமனே, கோர்ஸ் கொடுப்பவர்களாக மட்டும் இருக்கக்கூடாது. சொற்பொழிவு ஆற்றக் கூடியவர்களாக மட்டும் ஆகக்கூடாது. கூடவே ஞானத்தின் லைட், மைட், சங்கல்பம், பேச்சு, கர்மத்திலும் இருக்க வேண்டும். குமாரிகளிடம் பாபாவுக்கு விசேஷமான அன்பு உண்டு. ஏன்? தனது வாழ்க்கையைப் பற்றித் தீர்மானித்து விட்டார்கள். தீர்மானம் செய்து விட்டீர்களல்லவா? அல்லது இனிமேல் தான் செய்ய வேண்டுமா? நல்லவிதமாக யோசித்து விட்டீர்களா? அல்லது அங்கே சென்ற பின்னர் தான் யோசிப் பீர்களா? பக்காவாக யோசித்து முடிவெடுத்து விட்டீர்கள் என்றால், வாழ்த்துக்கள். பாருங்கள், இவ்வளவு டீச்சர்கள் (ஹேண்ட்ஸ்) உங்களுக்கு ரெடிமேடாக கிடைப்பார்கள். குமாரிகள் யாரெல்லாம் இன்னும் டிரெயினிங் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? சற்று கை உயர்த்துங்கள். எவ்வளவு பேர் (80) யாரெல்லாம் இப்போது சேவையில் ஈடுபடவில்லையோ அவர்கள் யார்? கை உயர்த்துங்கள். யாரெல்லாம் இப்போது செண்டரை பராமரிக்கும் சேவை பொறுப்பில் இல்லையோ, அவர்கள் உயரமாக கை உயர்த்துங்கள். எத்தனை பேர் என்று பாருங்கள்? பாதிப்பேர் இருக்கிறார்கள். சரி தான் இவ்வளவு பேர் (ஹேண்ட்ஸ்) கிடைப்பார்கள் அல்லவா? ரைட் ஹேண்ட்? அல்லது லெப்ட் ஹேண்ட்? ரைட் ஹேண்ட் ஆவீர்கள் அல்லவா? நல்லது. குமாரிகள் என்றால் பாப்தாதா குமாரிகளுக்கு வீடு கொடுக்கின்றார் வரம் ஏற்கனவே கிடைத்திருக்கிறது. எப்போதும் வீடு மற்றும் வரம் என்ற இரண்டும் அவசியம். குமாரிகளுக்கு வரம் கிடைத்து விட்டது. இனி வீடும் கிடைக்கும். சென்டரும் கிடைக்கும். குமார்களுக்கும் கிடைக்கும். குமார்கள் நாங்கள் மட்டும் ஏன் பின்னால் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். பின்னால் இல்லை, முன்னால் இருக்கின்றீர்கள். குமார்கள் இல்லையேல் சேவை எப்படி நடக்கும்? எந்த ஒரு சென்டரை வேண்டுமானாலும் பாருங்கள், கடுமையாக சேவை செய்யும் குமார்கள் இல்லையென்றால், சகோதரிகள் ஒன்றும் செய்ய முடியாது. இரு சாராரும் தேவை. ஆதலால் பாண்டவர் களுக்கு புகழ் இருக்கிறது. சக்திகளுக்கும் புகழ் இருக்கிறது. இருவருக்குமே புகழ் உண்டு. நல்லது.

உங்கள் எல்லோருடைய மீட்டிங் சமாச்சாரம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தது. பாரதவாசிகளாகட்டும், டபுள் விதேஷிகளாகட்டும். இந்த ஆண்டு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் மாநாடுகள், சிநேக மிலன் நிறைய நடந்திருக்கிறது. மேலும் வெளிநாட்டில் பல விதமான புராஜெக்க்ட (திட்டமிடப்பட்ட சேவை) நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் சேவையில் ஈடுபாடும், தீவிர வேகமும் இருப்பதை பாப்தாதா பார்த்தார். இரண்டுமே இருந்தது. சமயப்பிரமாணமாக ஒவ்வொரு புராஜெக்கட்; அல்லது மாநாடு அல்லது சிநேகமிலன் என்று சொன்னாலும் சரி, எந்த ஒரு நிகழ்ச்சி நடந்தாலும், அதில் சமயப்பிரமாணம் என்ன தலைப்பு (டாபிக்) முக்கியமானதோ, அதைப் பற்றியதாக இருப்பது அவசியம். ஏனென்றால், எந்த சமயத்திலாவது, யாராவது தண்ணீர் கேட்கிறார்கள் என்றால், அதைக் கொடுப்பதை விட்டுவிட்டு, 36 வகை உணவு கொடுத்தால், அதனை ஏற்பார்களா? ஆதலால் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் நிகழ்ச்சித் தலைப்பு எதுவாக இருந்தாலும் இந்த சமயத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் அவசியமாகயிருப்பது சாந்தி மற்றும் சிநேகம். சாந்தி வேண்டுமென்று விரும்புகின்ற அதே சமயத்தில் அன்பும் வேண்டும் என்றும் விரும்புகின்றனர். எந்த ஒரு சேவையும், திட்டமும் நன்றாக இருக்கிறது. சேவை நன்றாகவும் நடக்கிறது. ரிசல்ட்டும் நன்றாக இருக்கிறது. தைரியமுமிருக்கிறது. ஆதலால் பாப்தாதா மகிமை செய்கிறார்? எப்படி? வாஹ் பச்சே வாஹ் (ஆகா குழந்தே ஆகா) இந்த சமயத்தில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை நிறுத்தக் கூடாது. சூழ்நிலை காரணமாக தானாகவே நின்று போய் விடுமானால் நிற்கட்டும் ஆனால் நீங்கள் நிறுத்தக் கூடாது. நல்லது. நீங்கள் ஏதோ ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து விடுகிறீர்கள். ஒருக்கால் இது மாறி விட்டால், வந்து போகிறவர்கள் என்ன நினைப்பார்கள்? நீங்கள் ஏன் செய்திருக்கக்கூடாது! என்று நினைப்பார்கள். வள்ளலின் குழந்தைகள் இல்லையா? ஆதலால் நீங்கள் கொடுப்பதிலோ, புரோகிராம் செய்வதிலோ, முடியாது என்று சொல்லக் கூடாது. வாருங்கள், தாராளமாக வாருங்கள், குஷியோடு வாருங்கள் வரவேற்போம் என்று கூறுங்கள். ஒருக்கால் ஏதாவது பிரச்சினைகள் உண்டாகி அந்தச் சூழ்நிலைகள் அவர்களை நிறுத்திவிடுமானால் நின்று விடட்டும். நீங்கள் நிறுத்தக்கூடாது. இப்போது கூட அமெரிக்காவில் பீஸ் வில்லேஜில் எவ்வளவோ பிரச்சினைகளுக்கிடையே புரோகிராம் நடந்து

கொண்டிருக்கிற தல்லவா? மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. நிறுத்தி விட்டீர்களா? நிறுத்தவில்லை தானே? இப்போது 4-ம் தேதி வரை எந்த ஒரு புரோகிராம் நீங்கள் ஏற்பாடு செய்திருந்தீர்களோ அதில் ஏதாவது நின்று விட்டதா? குண்டுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. விழட்டுமே. சண்டை நடந்து கொண்டிருக்கிறதல்லவா? காதில் கேட்டுக் கொண்டேயிருங்கள். நல்லது. கேட்பதால் பிராமணர்களாகிய உங்கள் எல்லோரிடமும், விசேஷமாக எந்த ஒரு சம்ஸ்காரம், சுபாவம் (ரஹம் தில், மெர்ஸிபுல்) இரக்கம், கருணை இருக்கின்றதோ அது விழிப்படையும். இப்படி விழிப்படைவது அவசியம். இந்த சமயத்தில் நீங்கள் ஒவ்வொருவரும், ஆத்மாக்களுக்கு இரக்கம் காட்டுதல், வள்ளல் தன்மை ஆகிய ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும். மனசா சேவை மூலமாக கொடுத்தாலும் சரி, சுப பாவனை மூலம் கொடுத்தாலும் சரி, சிரேஷ்ட சக்தி கொடுக்கும் உணர்வு மூலமாக கொடுத்தாலும் சரி, ஆன்மீக சக்தி நிறைந்த பேச்சு மூலமாக கொடுத்தாலும் சரி, தன்னுடைய அன்பு நிறைந்த சம்மந்தம் அல்லது தொடர்பு மூலமாக கொடுத்தாலும் சரி, கொடுக்கத்தான் வேண்டும். எந்த ஒரு ஆத்மாவும் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. வள்ளலாகுங்கள். கருணையுள்ளவர்களாகுங்கள். கூக்குரலிடுகிறார்கள். தந்தையிடம் தங்கள், தங்கள் மொழியில் கூக்குரலிடுகிறார்கள். சாந்தி வேண்டும், அன்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். மனதார அன்பு செலுத்துங்கள். சுகத்தின் கிரணங்கள் தென்படட்டும். இதனை பாபா எப்படி கொடுப்பார்? குழந்தைகளாகிய உங்கள் மூலமாகவே கொடுப்பாரல்லவா? பாபாவுக்கு நீங்கள் எல்லோரும் வலது கைகள்" அல்லவா! பாண்டவர்கள் வலது கரங்கள். ஏதாவது கொடுக்கும் போது வலது கை (ரைட் ஹேண்ட்) மூலமாகவே கொடுக்கிறீர்கள் அல்லவா? இவ்வளவு வலது கரங்கள் உள்ளனர். வலது கரமாக விளங்கும் உங்களுக்கு ஞாபகார்த்தங்கள் உள்ளன. தெரியுமா? என்ன ஞாபகார்த்தம்? விராட்ரூப சித்திரம் பார்த்திருக்கிறீர்களா? அதில் எத்தனை கைகள் காட்டப்பட்டுள்ளன? உங்களுடைய சித்திரம் பார்த்திருக்கிறீர்களா? அதில் எத்தனை கைகள் காட்டப்பட்டுள்ளன. உங்களுடைய சித்திரம் வலது கை பற்றிய தாகும். குமாரிகளும் சித்திரத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள் அல்லவா? ஆதலால் இப்போது பாபா, ரைட் ஹேண்ட்ஸ் மூலமாக, ஆத்மாக்களுக்கு சுகம், சாந்திக்கான அஞ்சலி (ஆசீர்வாதம்) கொடுப்பிப்பாரல்லவா? அப்பாவிகளுக்கு அஞ்சலி கூட

கொடுக்கவில்லையென்றால், எவ்வளவு துடித்துப்போய் விடுவார்கள்! இப்போது எல்லோரும் எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்து, உயரே சென்று விடுங்கள். எல்லைக்குட்பட்ட விஷயங்களில் எல்லைக்குட்பட்ட சம்ஸ்காரங்களில் நேரத்தை வீணடிக்காதீர்கள். பாப்தாதா இன்றைக்கும் கூட, எல்லாக் குழந்தைகளுக்கும், எதிரில் அமர்ந்திருப்பவர்களானாலும் சரி, சென்டர்களில் அமர்ந்திருப்பவர்களானாலும் சரி, உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கருணையுள்ளத்தோடு சைகை மூலமாக (ஜாடையாக) கூறுகின்றார்: பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய எல்லைக்குட்பட்ட விஷயங்கள், சுபாவம், சம்ஸ்காரம், அல்லது விளையாட்டு புத்தி, கெட்டிக்காரத்தனமான, வீறாப்பான சம்ஸ்காரம், அலக்ஷிய பாவனையுள்ள சம்ஸ்காரம், ரொம்ப காலமாக பார்த்துக் கொண்டிருக்கின்றார். எல்லாமே நடக்கிறது என்று அநேக குழந்தைகள் நினைக்கிறார்கள். யார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், யாருக்குத் தெரியப்போகிறது என்றும் நினைக்கிறார்கள் ஆனால் இதுவரையிலும் பாப்தாதா கருணையுள்ளமுடையவராகவே இருக்கின்றார். ஆதலால் பார்த்தாலும், கேட்டாலும் கூட இரக்கம் காட்டு கின்றார் ஆனால் பாப்தாதா கேட்கின்றார்: முடிவாக, இரக்கம் காட்டுவது கூட எதுரையில்? எதுவரை? என்ன, இனியும் நேரம் வேண்டுமா? பாபாவிடம் எப்போது என்றும் கேட்கிறார்கள். இருந்தும் கூட எதுவரை? இயற்கையும் கூட கேட்கிறது? நீங்கள் பதில் கூறுங்கள் என்று இயற்கை கேட்கிறது. நீங்கள் இதற்கு பதில் சொல்லுங்கள். இதுவரை தந்தை என்ற ரூபம் நடந்து கொண்டிருக்கிறது. சிக்ஷக் (ஆசிரியர்) மற்றும் சத்குருவாகவும் இருக்கின்றார் ஆனால் தந்தை என்ற ரூபம் நடந்து கொண்டிருக்கிறது. மன்னிக்கும் கடல் என்ற பார்ட் நடந்து கொண்டிருக்கிறது ஆனால் தர்மராஜ் பார்ட் நடந்தால்? என்ன செய்வீர்கள்? பாப்தாதா என்ன விரும்புகிறார் என்றால், தர்மராஜ் பார்ட் நடக்கும் போதும் கூட ஆகா குழந்தை ஆகா என்ற குரல் காதில் ஒலிக்க வேண்டும் என்பது தான். பிறகு தந்தையின் மீது பழி சுமத்தக்கூடாது. பாபா எங்களுக்கு தெரிவிக்கவில்லையே என்று குறை சொல்லக்கூடாது. நீங்கள் தெரிவித்திருந்தால் தயாராகியிருப்போமல்லவா என்று சொல்லக் கூடாது. ஆதலால் இப்போது எல்லைக்குட்பட்ட சிறு சிறு விஷயங்களில், சுபாவத்தில்,

சம்ஸ்காரத்தில் நேரத்தை வீணாக்காதீர்கள். நடந்து கொண்டிருக்கிறது. நடக்கும் என்பதல்ல. சேமிப்பாகிக் கொண்டேயிருக்கின்றது இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நூறு மடங்கில் நேரத்தை வீணாக்கி விடாதீர்கள். நடக்கிறது என்று அலக்ஷியமாக இருந்து விடாதீர்கள். ஆதலால் உள்ளத்தில் திட சங்கல்பம் என்ற தீபம் ஏற்றுங்கள். எல்லைக்குட்பட்டதிலிருந்து பேகத் விருத்தி, திருஷ்டி, கிருத்தி உண்டாக்க வேண்டும். ஆதலால் சதா பாப்தாதா கூறுகின்றார். உண்டாக்கியே தீரவேண்டும். இன்று இதைக் கூறுகின்றார். உண்டாக்கியே தீர வேண்டும். பிறகு என்ன சொல்வேன்? டூ லேட் சமயத்தைப் பாருங்கள், சேவையைப் பாருங்கள். சேவை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது ஆனால் கயம் எல்லைக்குட்பட்டதில் உள்ளதா? பேகத்தில் உள்ளதா? எல்லைக்குட்பட்ட விஷயத்தின் பின்னால் நீங்கள் ஓடாமலிருந்தால், பேகத் விருத்தி, ஸ்வமான் ஸ்திதி உங்கள் பின்னால் ஓடி வரும்.

பாப்தாதா இந்த ஆண்டில், இந்த நேரம் வரையிலும் என்ன செய்திருக்கின்றீர்களோ, அதில் திருப்தி உள்ளது. ஆசீர்வாதமும் கொடுக்கின்றார் ஆனால் இப்போது சேவையில் அனுபவம் உண்டாக்க வேண்டும். வுமா (ஒளி பாபா) மீது, விட்டில்பூச்சிகளைப்போல ஆக்க வேண்டும். சகயோகிகளாகச் செய்தாலும் சரி, துணையாக இருப்பவர்களாக்கினாலும் சரி, ஏதாவது கொஞ்சம் செய்யுங்கள். அனுபவம் என்ற சுரங்கத்தை திறந்து விடுங்கள். நன்றாக உள்ளது. இது வரை செய்தது சரிதான். வந்து சுற்றிச் சுற்றி வந்து பறக்கும் விட்டில்பூச்சிகளாக மட்டும் இருக்கக்கூடாது. பக்கா விட்டில்பூச்சிகளாக இருக்க வேண்டும். அனுபவம் உண்டாக்கக்கூடிய கோர்ஸ் கொடுப்பதன் மூலமாகவே பக்கா விட்டில்பூச்சி ஆவார்கள். இப்போது, நன்றாக இருக்கிறது, சொர்க்கமாக இருக்கிறது என்ற அளவுக்குத்தான் அவர்களுக்கு அனுபவம் உள்ளது. இது யதார்த்த ஞானம், நல்ல ஞானம் இத்தகைய சேவைக்கான ரிசல்ட் நன்றாக இருக்கிறது. இப்போது அனுபவ சொரூபம் ஆவதற்கான அனுபவத்தை தாருங்கள். அனுபவம் செய்பவர்கள், அதாவது பாபாவுடன் நேரடியாக சம்மந்தம் வைப்பவர்களாக ஆகவேண்டும். இப்படிப்பட்ட அனுபவி விட்டில்பூச்சி தயார் செய்யுங்கள். சகயோகிகளாக ஆக்கியுள்ளீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். இதற்கு மேலும் செய்வியுங்கள். பிராப்தி

வேண்டுமானால் இந்த இடத்தில் தான் செய்ய முடியும் என்ற அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாபாவுடன் கொஞ்சம் சம்மந்தத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். இதன் மூலம் ஷமாவின் (பாபாவின் ஒளி) பின்னாலேயே ஓடிக் கொண்டிருப்பவர்களாக ஆகி விடட்டும். ஆகியே இந்த ஆண்டில் விசேஷமாக பாப்தாதா அனுபவம் செய்விப்பதற்கான கோர்ஸ் சேவையில் செய்விக்க வேண்டும். என்று பாபா விரும்புகின்றார் இதன் மூலமாகவே சாட்சாத்காரம் ஏற்படும். மேலும் சாட்சாத் தந்தை (பாபா) பிரத்யக்ஷம் ஆவார். என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொண்டீர்களா? என்ன செய்ய வேண்டும்? பிளான் கிடைத்து விட்டதா? இனி இந்த ஆண்டினுடைய ரிசல்ட்டைப் பார்க்கலாம். எத்தனை பேர்களை, பாபா (ஒளி) வினுடைய விட்டில்பூச்சிகளாக ஆக்கப் போகிறீர்கள் என்று பார்க்கலாம். ஸ்வாஹா ஆகாவிட்டாலும், சுற்றிச் சுற்றியாவது வரட்டும். நல்லது. குமாரிகள் நன்றாக இருக்கின்றீர்கள் அல்லவா? நல்லது.

நாலா பக்கங்களிலிருந்தும் பாப்தாதாவுக்கு குழந்தைகள் எழுதிய கடிதங்கள் வந்து சேர்ந்து கொண்டேயிருக்கின்றன. குழந்தைகள் எழுத ஆரம்பித்தவுடனேயே, பாபாவிடம் அப்போதே வந்து சேர்ந்து விடுகிறது. உள்ளத்தின் குரல் அல்லவா? எழுதுவது கைகள் மூலமாக, ஆனால் முதலில் உள்ளத்தின் குரல் (தில் கா ஆவாஸ்) உள்ளத்திற்கு சுகம் கொடுக்கின்ற (திலாராம்) பாபாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. இதுவும் நல்லது தான். பாப்தாதாவினுடைய நினைவு வருகிறதல்லவா? சமாச்சாரம் எழுதிக் கொண்டிருக்கும்போது, எவ்வளவு குஷியாக இருக்கிறது. ஆதலால் யாரெல்லாம் கடிதம், ஈமெயில், மற்றும் வேறு சாதனங்கள் மூலமாக அன்பு நினைவு சமாச்சாரம் பாப் தாதாவுக்கு அனுப்பியிருக்கின்றார்களோ, எல்லோருக்கும் ஒவ்வொருவருடைய பெயர் சகிதமாக, ஸ்பெஷல் அவர்கள் அன்பு நினைவுகள் மற்றும் நல்வாழ்த்துக்களை அளிக்கின்றார். நீங்கள் எல்லோரும் எதிரிலேயே அளிக்கின்றீர்கள் அல்லவா? அவர்களுக்கு கொடுக்க வேண்டுமல்லவா? ஆதலால் எல்லோருக்கும், நாலா பக்கமும் உள்ள அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களும் பாப்தாதா குழந்தைகள் அளிக்கின்றார். எப்படிப்பட்ட தீபாவளி கொண்டாட வேண்டும்? அதைப் பற்றி ஏற்கனவே கூறிவிட்டார். நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள பாப்தாதாவின் தில்தக்த் நஷீன் (மன சிம்மாசனத்தில் அமரும் அதிகாரி) சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு சதா எல்லைக்குட்பட்ட சுபாவம், சம்ஸ்காரம் ஆகிய வற்றை பரிவர்த்தனை செய்யக்கூடிய, பேகத்தின் பரிவர்த்தக் ஆத்மாக்களுக்கு சதா ஒரு செகண்டு, ஒரு சங்கல்பம் கூட வீணாக கழித்து விடாமல் இருக்கக்கூடிய சேமிப்பு செய்யக் கூடிய தீவிர புருஷார்த்தி குழந்தைகளுக்கு சதா ரஹம் தில் (இரக்க குணமுடையவராகி) ஆகி, வள்ளல் ஆகி, ஒவ்வொரு ஆத்மாவுக்கும் பிராமண ஆத்மாவாகட்டும், தாகமுள்ள ஆத்மாக்களாகட்டும், ஏதாவது ஒருவகையில் அஞ்சலி அளிக்கக்கூடிய சக்தி அளிக்கக் கூடிய இப்படிப்பட்ட பெரிய மனம் படைத்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக மிக மிக மிக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵ ✵✵✵✵✵✵✵✵

## 25.11.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஆசீர்வாதம் வழங்குங்கள், ஆசிர்வாதம் பெறுங்கள். காரணத்திற்கான நிவாரணம் கண்டு, பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள்!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தன்னுடைய அன்பு சொரூபமான குழந்தைகளை அன்புக் கயிற்றால் பிணைத்து அவர்களுடன் கூடி மகிழ்வதற்காக வந்திருக்கின்றார். குழந்தைகள் அழைத்தனர், உடனே வந்து சேர்ந்து விட்டேன். அவ்யக்த சந்திப்பு சதா நடந்து கொண்டேயிருக்கின்றது. எனினும், சாகாரத்தில் அழைத்ததால், குழந்தைகளினுடைய விசாலமான உற்சவத்தில் கலந்து கொள்ள வந்து சேர்ந்து விட்டேன். பாப்தாதாவுக்கு குழந்தைகளினுடைய சிநேகம் மற்றும் குழந்தைகளினுடைய அன்பைப் பார்த்து மகிழ்ச்சியாயிருக்கின்றது. மனதிற்குள்ளேயே நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளைப் பற்றி, வாஹ்! சிரேஷ்டமான பாக்கியவான் குழந்தைகளே! என்று மகிமை பாடுகின்றார். பகவானுடைய அன்புக்குப் பாத்திரமான ஆத்மாக்களே, வாஹ்! இவ்வளவு பெரிய பாக்கியம் மேலும் இவ்வளவு சாதாரண ரூபத்தில், சுலபமாகக் கிடைக்கின்றது. இதை சொப்பனத்தில் கூட நினைத்துப் பார்க்கவில்லை ஆனால் இன்று சாகார ரூபத்தில் பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தூரமாக இருக்கின்ற குழந்தைகளும் கூட, சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாப்தாதா அவர்களையும் சந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றார். மெஜாரிட்டி மாதாக்களுக்கு கோல்டன் சான்ஸ் கிடைத்திருக் கின்றது. மேலும் பாப்தாதா விசேஷமாக சக்தி சேனையைப் பார்த்து மகிழ்கின்றார். நான்கு. சுவர்களுக்குள்ளே அடங்கியிருந்த மாதாக்கள், தந்தை மூலமாக விஷ்வ

கல்யாணகாரியாகி, விஷ்வ இராஜ்ய அதிகாரியாக ஆகி விட்டனர். ஆகி விட்டீர்களா? ஆகிக் கொண்டிருக்கின்றீர்களா? என்ன சொல்கிறீர்கள்? ஆகி விட்டீர்கள் தானே! விஷ்வ இராஜ்யம் என்ற வெண்ணெய் திரண்டு வந்து உங்கள் எல்லோருடைய கையிலும் இருக்கிறதல்லவா? மாதாக்கள், யாரெல்லாம் மதுபன் வந்து சேர்ந்திருக்கின்றார்களோ, அவர்களுக்கு ஒரு விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கின்றது. எந்த மகிழ்ச்சி? பாப்தாதா மாதாக்களை விசேஷமாக அழைத்திருக்கின்றார் என்றால் மாதாக்களிடம் விசேஷ அன்பு இருக்கிறது என்பதால் தானே!' பாப்தாதா அழைத்திருக்கின்றார். பாப்தாதா எங்களை அழைத்திருக்கும்போது, நாங்கள் வராமல் இருப்போமா என்று நஷாவோடு கூறுகின்றார்கள். இவ்வாறு மாதாக்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதை பாப்தாதா கேட்டுக் கொண்டேயிருக்கின்றார். இப்படிப்பட்ட மகிழ்ச்சியின் நஷாவை பார்த்துக் கொண்டுமிருக்கின்றார். அப்படிப் பார்த்தால் பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. பாண்டவர்கள் இல்லாமல் விஷ்வ காரியம் முடியாது. என்றாலும், இன்று விசேஷமாக, பாண்டவர்களைக் காட்டிலும், மாதாக்களை முன்னிலையில் வைத்திருக்கின்றார்.

பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் கலபமான புருஷாரத்தம் செய்வதற்கான விதியைக் கூறுகின்றார். மாதாக்களுக்கு, சுலபமாக இருக்க வேண்டுமல்லவா? ஆதலால் எல்லா மாதாக்களுக்கும், குழந்தைகளுக்கும், பாப்தாதா எல்லாவற்றிலும் சுலபமான புருஷாரத்தம் என்ன என்பதைக் கூறுகின்றார். இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போதும், சம்பந்தம், தொடர்பில் வரும்போதும், ஒவ்வொரு ஆத்மாவுக்கும், உள்ளன்பு நிறைந்த சுப பாவனையின் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும். மற்றவர்களிடமிருந்தும், ஆசீர்வாதம் பெற வேண்டும். உங்களுக்கு, மற்றவர்கள் என்ன கொடுத்தாலும், சாபம் கொடுத்தாலும் கூட, அதனை சுப பாவனை என்னும் சக்தி மூலமாக ஆசீர்வாதமாக மாற்றிவிடுங்கள். உங்களிடமிருந்து ஒவ்வொரு ஆத்மாவும், ஆசீர்வாதத்தை அனுபவம் செய்யட்டும். மற்றவர் சாபம் கொடுக்கின்றார் என்றால் அவர் அந்த சமயத்தில் ஏதாவதொரு விகாரத்திற்கு வசப்பட்டிருக்கின்றார் என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்த மாதிரி புரிந்து கொண்டால், அவருக்கு பதிலுக்குப் பதில் சாபம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வராது. மாறாக, அவருக்கு உதவி

செய்ய வேண்டுமென்று, ஆசீர்வாதம் தான் கொடுப்பீர்கள். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகத்தில் வையுங்கள். நான் நிரந்தரமாக ஒரு காரியம் செய்ய வேண்டும். அதாவது சங்கல்பம் மூலமாகவும், பேச்சு மூலமாகவும், செயல் மூலமாகவும், சம்பந்தம், தொடர்பு மூலமாகவும் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும். ஆசீர்வாதம் பெற வேண்டும் என்பது தான். ஒருவேளை, யாராவது ஒரு ஆத்மாவைப் பற்றி வீணான அல்லது எதிர்மறையான சங்கல்பம் வருமானால், அப்போது எனது கடமை என்ன? என்று நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். எப்படி ஒரு இடத்தில் நெருப்பு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது என்றால் அங்கே அப்போது தீயை அணைக்கக்கூடியவர்கள் உடனே அதன்மீது தண்ணீர் ஊற்றி தீயை அணைக்க வேண்டும் என்பதை மறந்து விட மாட்டார் களோ, (நாம் தண்ணீர் பாய்ச்சி தீயை அணைப்பவர்கள் என்ற நினைவு அவர்களிடம் இருக்கிறது) அதுபோல, யாரோ ஒருவர் விகாரம் என்னும் நெருப்பு பற்றி எரிந்து விழுந்து கொண்டிருந்தால், உங்களுக்கு அது பிடிக்காமலிருக்கும். என்றாலும் அந்த சமயத்தில், எனது கடமை எரியும் நெருப்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும் அணைப்பது தான், ஆசீர்வாதம் கொடுப்பது தான், சுபபாவனையோடு உதவி செய்வது தான் என்பது ஞாபகத்தில் இருக்க வேண்டும். மாதாக்கள் சுலபமான ஒரு வார்த்தையை நினைவில் கொள்ள வேண்டும். ஆசீர்வாதம் கொடுப்பது, ஆசீர்வாதம் பெறுவது, இவ்வளவு தான். மாதாக்கள் இதைச் செய்ய முடியுமா? எல்லா மாதாக்களும் கையை உயர்த்துகிறார்கள். செய்ய முடியுமா? அல்லது செய்யத்தான் வேண்டும் என்று நினைக்கிறீர்களா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? பாண்டவர்கள், செய்து தான் ஆக வேண்டும் என்று சொல்கிறார்கள். பாண்டவர்களுக்கு விஜயி என்ற மகிமை உண்டு. சதா விஜயி. சக்திகளுக்கு விஷ்வ கல்யாணி என்ற பெயர் பிரசித்தம்.

பாப்தாதாவுக்கு நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா குழந்தைகளிடமிருந்தும், இது வரையிலும் ஒரு ஆசை நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. அது என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம். உங்களுக்குத் தெரியும். டீச்சர்களுக்குத் தெரியுமல்லவா? குழந்தைகள் அவரவர் சக்திக்கேற்றவாறு புருஷாரத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த புருஷாரத் தத்தைப் பார்த்து பாப்தாதா புன்முறுவல் செய்கின்றார். அந்த ஆசை என்னவென்றால்,

புருஷாரத்தத்தில் இப்போது தீவிரகதி வேண்டும். புருஷாரத்தம் நடக்கிறது ஆனால் தீவிர கதி வேண்டும். இதற்கான விதி எது என்றால், “காரணம்" என்ற வார்த்தைக்கு முடிவு கட்டிவிட வேண்டும். மேலும் நிவாரண சொரூபம் சதா இருக்க வேண்டும். இதற்கு என்ன காரணம் என்பது போன்ற சூழ்நிலை நேரத்திற்கேற்றவாறு அவ்வப்போது வரத்தான் செய்கிறது. மேலும் வந்து கொண்டேதானிருக்கும் ஆனால் நீங்கள் அந்த நேரத்தில் நிவாரண சொரூபமாகி விடுங்கள். ஏனென்றால், குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் உலகத்திற்கு (விஷ்வ நிவாரணம்) நிவாரணம் அளித்து, எல்லோரையும், அதாவது மெஜாரிட்டி ஆத்மாக்களை நிர்வாணதாம் (சாந்திதாம்) அனுப்ப வேண்டும். ஆதலால் எப்போது நீங்கள் சுயம் நிவாரண சொரூபமாகி விடுகிறீர்களோ, அப்போது தான், உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு, உங்களுடைய நிவாரண சொரூபத்தின் மூலமாக, எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் நிவாரணம் அளித்து, நிர்வாண தாமத்திற்கு அனுப்ப முடியும். இப்போது உலகிலுள்ள ஆத்மாக்கள் முக்தி வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆதலால் பாபா மூலமாக முக்திக்கான ஆஸ்தி அவர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு நிமித்தமாயிருப்பவர்கள் நீங்கள் தான். ஆதலால் நிமித்தமாக இருக்கக் கூடிய ஆத்மாக்கள் முதலில் விதவிதமான பிரச்சினைகளுக்கான காரணங்களுக்கு நிவாரணம் கண்டு அவைகளிலிருந்து முக்தி அடைந்தால் தான், உலகத்தினருக்கு முக்திக்கான ஆஸ்தி கிடைக்கச் செய்ய முடியும். ஆகவே இவ்விதமாக முக்தியடைந்து விட்டவர்களாக ஆகி விட்டீர்களா? இனி மேல் எந்தவிதமான பிரச்சினைக்கும் இது தான் காரணம், இது தான் காரணம், இது தான் காரணம் என்ற விஷயமே இருக்கக் கூடாது. எப்போது ஏதாவதொரு காரணம் தெரிகின்றதோ அப்போது அந்தக் காரணத்திற்கு ஒரு செகண்டில் நிவாரணம் பற்றி யோசியுங்கள். அதாவது எப்போது விஷ்வத்திற்கு நிவாரணம் அளிக்கக்கூடியவன் என்பது நினைவிலிருக்கிறதோ அப்போது தனக்கு வருகின்ற சிறுசிறு பிரச்சினைகளுக்கு நிவாரணம் செய்து கொள்ள முடியாதா என்ன? செய்ய முடியாதா? இப்போது "ஹே! முக்தி தாதா" (முக்தியளிக்கும் வள்ளல்) முக்தி கொடுங்கள் என்று கேட்கக்கூடிய ஆத்மாக்களின் வரிசை (கியூ) உங்கள் எதிரில் வரப் போகிறார்கள். ஏனெனில் முக்தியளிக்கக்கூடிய வள்ளலின் நேர்முகமான குழந்தைகள் நீங்கள். அதிகாரி குழந்தைகள். நீங்கள் மாஸ்டர் முக்தி தாதா தானே?

(தாதா-வள்ளல்) ஆனால் இவ்வாறு கியூவில் நிற்கக் கூடிய ஆத்மாக்களுக்கு எதிரில், முக்தியளிக்கும் வள்ளலின் குழந்தைகளாகிய உங்களுக்கு தடை உண்டாக்கக் கூடிய கதவு சாத்தப்பட்டிருக்கிறது. கியூ தயாராக இருக்கிறது ஆனால் எப்படிப்பட்ட கதவு மூடியிருக்கிறது? புருஷாரத் தத்தில், பலவீன புருஷாரத்தத்தைக் குறிக்கக்கூடிய ஒருவார்த்தை கதவு போல் தடுத்து நிற்கிறது. அந்த வார்த்தை “ஏன்?” என்பதாகும். "ஏன்" என்ற கேள்விக்குறி. இந்த “ஏன்” என்ற வார்த்தை தான் காத்துக் கொண்டிருக்கின்ற கியூவை முன்னேற விடாமல் தடையாக இருக்கிறது. ஆதலால் பாப்தாதா உலகிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் நினைவூட்டுவது என்ன வென்றால், இப்போது பிரச்சினைகள் என்னும் கதவாக இருக்கின்ற "ஏன்" என்பதை முடித்து விடுங்கள். செய்ய முடியுமா? டீச்சர்ஸ் செய்ய முடியுமா? பாண்டவர்கள் செய்ய முடியுமா? எல்லோருமே கை உயர்த்துகிறார்களா? அல்லது சிலர் மட்டுமே உயர்த்துகிறார்களா? இந்த வெளிநாட்டினர் கை உயர்த்தவில்லை. இவர்களுக்கு டிரான்ஸ்லேஷன் (மொழி பெயர்ப்பு) தாமதமாக சென்றடைகிறது என்பதால். வெளி நாட்டினர் எவர்ரெடி தானே? எவர் ரெடி? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். "ஆம்" என்று சொல்பவர்கள் நேராக கை உயர்த்துங்கள். சிலர் சரியாக கை உயர்த்தவில்லை. இனி எந்த ஒரு சேவா கேந்திரத்திலும் பிரச்சினை என்பது பெயரளவுக்கும் கூட இருக்கக்கூடாது. அப்படி இருக்க முடியுமா? (இங்கே இருக்கும் மோகினி, முன்னி பதில் சொல்லட்டும். எதிரில் அமர்ந்திருக்கக்கூடியவர்கள் சொல்லுங்கள், முடியுமா?) எல்லோரும் நிச்சயம் செய்து கொள்ள வேண்டுமல்லவா? ஒவ்வொருத்தரும் நான் முதலில் அப்படி இருந்து காட்ட வேண்டும் என்று நினைக்க வேண்டும். டீச்சர்ஸ் அப்படி நினைக்க வேண்டும். மாணவர்கள் அப்படி நினைக்க வேண்டும். கிருஹஸ்தத்தில் இருக்கக்கூடியவர்கள் அப்படி நினைக்க வேண்டும். மதுபன் வாசிகள் அப்படி நினைக்க வேண்டும். மதுபன் வாசிகள் செய்ய வேண்டு மல்லவா? மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். உங்களுக்கு அருகிலேயே மிக நல்ல இடம் கிடைத்து விட்டது. அதிகாரிகள் அல்லவா? சரி, மதுபன் வாசிகள் அப்படி நடந்து கொள்ள முடியுமா? இப்போது கை உயர்த்துங்கள். செய்ய முடியும். பிரச்சினை என்ற வார்த்தையே இல்லாமல் போய் விட வேண்டும். காரணம் முடிந்து நிவாரணம் வந்து சேரட்டும். இப்படி ஆக முடியும். நடக்க முடியாது

என்பது இருக்க முடியுமா? ஆரம்பத்தில் ஸ்தாபனைக்கான நேரத்தில் வந்து கொண்டிருந்த குழந்தைகள் அனைவரும் எந்த ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். அதை நிறைவேற்றியும் விட்டார்கள். நடக்க முடியாததை நடந்து காட்டினார்கள். காட்டினீர்கள் அல்லவா? இப்போது எத்தனை ஆண்டுகள் முடிந்து விட்டன? ஸ்தாபனையாகி எத்தனை ஆண்டுகள் ஆகி விட்டன. 65-ஆண்டுகள். இத்தனை ஆண்டுகளில், நடக்க முடியாததை, நடத்திக் காட்ட முடியாதா? முடியும். முக்கியமாக டீச்சர்ஸ் கை உயர்த்துங்கள். பஞ்சாப் கை உயர்த்தவில்லை. சந்தேகமாக இருக்கிறதா? கொஞ்சம் யோசிக்கிறார்கள். யோசிக்க வேண்டாம். செய்யத்தான் வேண்டும். மற்றவர்களைப் பற்றி யோசிக்காதீர்கள். முதலில் தனக்காக யோசியுங்கள். தனக்காக யோசிக்க முடியுமல்லவா? மற்றவரை விட்டு விடுங்கள். தன்னைப் பற்றி சிந்தித்து, தனக்காக தைரியத்தோடு இருக்க முடியுமல்லவா? முடியாதா? வெளிநாட்டினர் தைரியமாக இருக்க முடியுமா? வாழ்த்துக்கள். இப்போது நீங்கள் திட சங்கல்பம் செய்ய வேண்டும். அதாவது காரணம் என்பதை முடித்து விட்டு, நிவாரண சொரூபம் ஆகியே தீர வேண்டும், என்ன நடந்தாலும் சரி, சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். மாயாவை எதிர் கொள்ளத்தான் வேண்டும், ஒருவருக்கொருவரிடையேயான சம்மந்தம், தொடர்பில் சகித்துக் கொள்ள வேண்டியதிருந்தாலும் கூட, பொறுமையோடு தான் இருக்க வேண்டும், நான் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கக் கூடாது என்பது. இப்படி இருக்க முடியுமா? நிச்சயமாக. அப்படி இருக்க முடியும் என்று நினைப்பவர்கள், ஹாலின் பின் பக்கமிருந்து முன்பக்கம் வரையிலும் கை உயர்த்துங்கள். மனதார கை உயர்த்த வேண்டும் மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்பதற்காக அல்ல. எல்லோரும் உயர்த்துகிறார்கள், ஆதலால் நான் உயர்த்த வேண்டும் என்பதாகவும் இருக்கக்கூடாது. உளப்பூர்வமாக கை உயர்த்த வேண்டும். பாப்தாதா எல்லோரையும் கை உயர்த்தும்படி செய்தார். இந்த காட்சி முழுவதையும் டி.வி. மூலமாக பார்த்தார். நன்றாயிருந்ததல்லவா! எக்ஸர்சைஸ் (உடற்பயிற்சி) ஆகி விட்டதல்லவா? இவ்வாறு எல்லோரையும் கை உயர்த்தச் சொன்னது எதற்காக என்றால், இதனை ஒருவர்க்கொருவர் பார்க்கும்போது, கை உயர்த்து வதற்கு ஆர்வம் உண்டாகிறதல்லவா? சரி. ஒருவேளை ஏதாவது ஒரு பிரச்சினை வந்தாலும், பாப்தாதாவை பார்க்க வேண்டும். மனதார பாபா என்று சொல்ல வேண்டும். பாபா ஆஜராகி விடுவார்.

பிரச்சினை முடிந்து விடும். பிரச்சினை அங்கிருந்து விலகி விடும். பாப்தாதா எதிரில் ஆஜராகி விடுவார். மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற டைட்டிலை (பட்டம்) ஒவ்வொரு சமயத்திலும் ஞாபகத்தில் வைத்திருங்கள். அப்படி நினைவில் வைத்துக் கொள்ளாவிடில், பாப்தாதா யாத் பியார் சொல்லும் போது, மாஸ்டர் சர்வ சக்திவான் என்று சொல்லாமல் சர்வ சக்திவான் என்று மட்டுமே சொன்னால், பரவாயில்லையா? சக்திவான் குழந்தைகளுக்கு இவ்வாறு சொன்னால் யாத் பியார் நன்றாக இருக்குமா? மாஸ்டர் சர்வ சக்திவான். மாஸ்டர் சர்வ சக்திவான் என்ன செய்ய முடியாது? சதா தன்னுடைய டைட்டில் மற்றும் கடமையை மட்டும் நினைவில் வைத்தால் போதும். டைட்டில், மாஸ்டர் சர்வ சக்திவான் என்பது. கடமை, விஷ்வ கல்யாணகாரி. ஆதலால் சதா தன்னுடைய டைட்டில் மற்றும் கடமையை நினைவு செய்தால், விழிப்படைந்து வெளிப்படும். மாஸ்டர் சக்திகள் சக்திகளுக்கும் மாஸ்டர் ஆகுங்கள். கட்டளை இடுங்கள். ஆகுங்கள். எப்போது எந்த சக்தி வேண்டுமோ, அந்த சக்திக்கு கட்டளை இடுங்கள். சக்திகள் உங்களிடம் இருக்கின்றன ஆனால் வேண்டும்போது, அந்த சக்திகளை உபயோகிக்கத் தெரியவில்லை. நேரம் கடந்த பிறகு இப்படிச் செய்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என்று, நினைவுக்கு வருகிறது. ஆதலால் பயிற்சி செய்யுங்கள். உங்களிடம் அடங்கியுள்ள சக்திகளை வேண்டும்போது உபயோகியுங்கள். எவ்வாறு கை, கால் ஆகிய கர்மேந்திரியங்களை உங்கள் விருப்பப்படி உபயோகிக்கின்றீர்களோ, அது போல ஒவ்வொரு சக்திக்கும் கட்டளை இடுங்கள். காரியத்தில் உபயோகியுங்கள். சக்திகளை சேமித்து வைத்திருக்கின்றீர்கள் ஆனால் காரியத்தில் குறைவாக உபயோகிக்கின்றீர்கள். வேண்டும்போது, நீங்கள் உங்களிட முள்ள சக்திகளை உபயோகிப்பீர்களேயானால், அந்த சக்தி உங்கள் காரியத்தை செய்து முடிக்கும். சந்தோஷமாக இருங்கள். சில சமயங்களில் சிலருடைய முகம், ஆலோசனையில் கொஞ்சம் அதிகமாக ஆழமான சிந்தனையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். மகிழ்ச்சியோடிருங்கள். ஆடிப்பாடி மகிழுங்கள். உங்களுடைய பிராமண வாழ்க்கை என்பது ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பதற்காகத்தான். தன்னுடைய பாக்கியம் மற்றும் பகவானுடைய மகிமை பாடுவதற்காகத்தான். ஆடும் கலை, பாடும் கலை தெரிந்தவர்கள் மிகவும் ஈடுபாடுடன் ஆடுவார்கள், பாடுவார்கள், இருந்தாலும் எனக்கு அவ்வளவாக ஆடத் தெரியவில்லை, பாடத்

தெரியவில்லை என்பார்கள். ஆழமான சிந்தனையில் ஆழ்ந்து விடுவதென்பது நல்லது தான் ஆனால் மிக ஆழமானதாக இருந்தால், அதில் சில வேறு சிந்தனைகளும் கலந்து விடும்.

டெல்லியில் திறப்பு விழா நடக்கப் போகிறது என்பதைப் பற்றி பாப்தாதா அறிவார் ஆனால் பாப்தாதா பார்க்க விரும்புகின்ற திறப்பு விழா எது? அந்த தேதியை குறிப்பிடுங்கள். இந்த சிறு, சிறு திறப்பு விழா நடத்துவது என்பது பெரிய காரியமல்ல. அது நடந்து விடும் ஆனால் எல்லோரும் உலக நாடக அரங்கில் பாபா சமானமாக சாட்சாத் பரிஸ்தாவாக காட்சியளிக்க வேண்டும். அப்போது திரை விலக வேண்டும் என்ற திறப்பு விழாவைத்தான் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். இந்த மாதிரி திறப்பு விழா உங்களுக்கும் பிடித்தமானதாக இருக்குமல்லவா? ரூஹ்ரிஹான் (பாபாவுடனான சம்பாஷனை) செய்து கொண்டு இருக்கின்றார்கள் பாபாவும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றார். அதாவது இப்போது பாபாவை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் தெரிகிறது ஆனால் பாபாவின் விருப்பம், முதலில் குழந்தைகள் பிரத்யக்ஷம் ஆகட்டும் என்பதாக உள்ளது. தந்தை குழந்தைகளோடு பிரத்யக்ஷம் ஆவார். தனியாக ஆக மாட்டார். இப்படிப்பட்ட திறப்பு விழாவை பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். எல்லோருக்கும் நல்ல ஆர்வம் இருக்கின்றது ஆனால் எப்போது கர்மயோகியாக இருக்கின்றார்களோ, அப்போது கொஞ்சம் வித்தியாசப்படுகிறது. ஆதலால் மாதாக்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? மாதாக்களின் கூட்டம் பெரிதாக உள்ளது. மாதாக்களைப் பார்த்து பாப்தாதாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கின்றது. வேறு யாரும், பாப்தாதாவைப் போல மாதாக்களை இவ்வளவு முன்னிலைப்படுத்தவில்லை ஆனால் பாப்தாதா மாதாக்களின் முன்னேற்றத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். மாதாக்களுக்கு ஒரு விசேஷ சங்கல்பம் இருக்கின்றது. யார் இது வரையிலும் செய்து காட்டவில்லையோ, அதை மாதாக்களாகிய நாங்கள் தந்தையுடன் செய்து காட்டுவோம். செய்து காட்டுவீர்களா? இப்போது ஒரு கையால் அசைத்துக் காண்பியுங்கள். மாதாக்கள் செய்ய முடியாதது எதுவுமே இல்லை. எல்லாமே செய்து காட்ட முடியும். மாதாக்களிடம் ஆர்வம் நன்றாக உள்ளது. இவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் தான் ஆனால் நான் பாபாவுக்காக, பாபா எனக்காக என்பதை நன்றாகப் புரிந்து

கொண்டிருக்கிறார்கள். இதைப் புரிந்து கொண்டு விட்டீர்கள் அல்லவா? என்னுடைய பாபா (மேரா பாபா) என்று எல்லோருமே கூறுகின்றார்கள் அல்லவா! போதும். உள்ளன்போடு இந்த பாட்டை பாடிக் கொண்டே இருங்கள். மேரா பாபா! மேரா பாபா! மேரா பாபா!

நல்லது, டீச்சர்ஸ் கை உயர்த்துங்கள். நிறைய டீச்சர்ஸ் (1300) வந்திருக்கின்றார்கள். மாதாக்களை நல்ல விதமாக கவனித்து அழைத்து வந்தீர்கள் அல்லவா? டீச்சர்கள் மாதாக்களை அழைத்து வந்திருக்கிறார்கள். அழைத்து வந்தார்கள் என்பது தங்களுடைய புண்ணிய கணக்கை சேமித்திருக்கின்றார்கள் என்பதாகும். உங்களுக்கு நன்மை தானே! உங்களுடைய புண்ணிய கணக்கு அதிகரித்து விட்டது.

நல்லது, டபுள் ஃபாரினர்ஸ் (வெளிநாட்டினர்) இப்போது கை உயர்த்துங்கள் வெளிநாட்டு குழந்தைகளிடம் ஸ்பெஷலாக ஒரு விசேஷம் இருப்பதை பாப்தாதா பார்த்தார். அதாவது எந்த குரூப்பாக இருந்தாலும், அதில் வெளிநாட்டு குழந்தைகளும் கண்டிப்பாக இருப்பார்கள். சர்வ வியாபி ஆகி விட்டார்கள். மதுபன் நிவாசிகளும், பாப்தாதாவும் டபுள் ஃபாரினர்ஸ் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள். ஆதலால் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். நல்லது.

இந்த சபையில் அமர்ந்திருக்கின்ற குமாரிகள் கை உயர்த்துங்கள். நிறைய குமாரிகள் வந்திருக்கின்றார்கள். குமாரிகள் கமால் (வியக்கத்தக்க காரியம் செய்து முடிப்பவர்கள்) செய்பவர்கள் அல்லவா? குமாரிகளுக்கு, கூடுதலான (extra) அதிருஷ்டம் (பாக்கியம்) கிடைத்திருக்கின்றது. இதைக் கேட்டு பாண்டவர்கள் சிரிக்கிறார்கள். பொறாமைப்படுகிறார்கள். இந்த குமாரிகள் சென்டருக்கு வந்து விட்டால், மரியாதைக்குரிய டீச்சர் சகோதரி (தீதி) ஆகி விடுகிறார்கள் ஆனால் பாண்டவர்கள் சென்டரில் வந்திருந்தால், தாதா ஆவதில்லை. பாருங்கள். குமாரிகளுக்கு விசேஷமாக ஒரு லிஃப்ட் (உயர் ஸ்தானம்) இருக்கிறது. ஏனெனில் உள்ளன்போடு சமர்ப்பணம் ஆவதால், இவர்களுக்கு முரளி படிப்பதற்கான ஆசனம் கிடைத்து விடுகிறது. இந்த ஆசனம் குறைந்ததல்ல பாண்டவர்களும் முரளி படிக்கிறார்கள். ஆனாலும் மெஜாரிட்டி சகோதரிகள் தான். இது குமாரிகளினுடைய

பாக்கியம். குமாரிகள் தங்களுக்கு போதுமான வருமானத்தைப் பெற முடியும். நல்லது.

குமார் எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்? குமார்களும் குறைவானவர்கள் அல்ல. குமார், சுகுமார் (நன்மை செய்யக் கூடியவர்கள்) ஆகி விட்டார்கள். மேலும் குமார்கள் இல்லாமல் சென்டர் நடத்த முடியாது. டீச்சர்ஸ் சொல்லுங்கள். குமார்கள் இல்லாமல் சென்டர் நடத்த முடியுமா? நடத்த முடியாது. குமார்களிடம் ஒரு நல்ல விசேஷத்தன்மை உள்ளது. குமார்கள் எந்த ஒரு காரியத்தை செய்து முடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்றார்களோ, அதைச் செய்து முடித்து விட முடியும். ஏனென்றால் சுகுமார்கள் தவறு ஏதும் செய்ய மாட்டார்கள். சரியானதையே செய்வார்கள். குமார்களுக்கு திட சங்கல்பம் என்ற கிஃப்ட் (சிறப்பு) உள்ளது. எதைச் செய்ய வேண்டு மென்று நினைக்கின்றார்களோ, அதைச் செய்ய முடியும். இது தான் அவர்களிடமுள்ள சிறப்பு, மற்றபடி அவர்களை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் கையில் உள்ளது ஆனால் அரசு (கவர்ன்மெண்ட்) கூட, குமார், கருமார் ஆக வேண்டும் என்றும், நிறைய பேர் சுகுமாராக ஆக வேண்டும். என்றும் எதிர்பாக்கிறது. குமார்கள் அல்ல, சுகுமார்? பாப்தாதா காட்டிய ஒரு சைகையை இதுவரையிலும் நடைமுறையில் கொண்டுவராமல் இருக்கின்றார்கள். அதாவது உலகில் உள்ள சுகுமார்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, மதுபனில் ஆஜர் படுத்த வேண்டும். பிரதம மந்திரி, மற்றும் அமைச்சர்கள் இங்கு வரட்டும். வர முடியும். நன்றாக இருக்கும். குமார் தங்களது சிறப்பை காண்பிக்க முடியும். இங்குமங்கும் உள்ள இப்படிப்பட்ட குமார்களை தங்களோடு அழைத்துச் செல்லுங்கள். நேர்முகமாக அழைக்கட்டும். தேதி குறிப்பிடட்டும். குமார்கள் மீது பாப்தாதாவுக்கு மிக, மிக, மிகுந்த, நம்பிக்கை இருக்கின்றது. இது பூரணமாகத்தான் போகிறது. நல்லது.

(இரண்டு மாத காலம் மாதாக்களுக்கான சேவை நடந்தது) ஆகவே தான் மாதாக்கள் இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். ஹாலில் முக்கால்வாசி மாதாக்கள் இருக்கின்றனர். 13,000-மாதாக்கள். மாதாக்கள் உயர்த்துங்கள். மாதாக்கள் அதிகம் பேர் உள்ளனர். முழு ஹாலிலும் மாதாக்கள் அமர்ந்திருப்பதால் சோபிக்கிறது. நல்லது, யாரெல்லாம் மாதாக்களின் யாத்திரையில் சென்றிருந்தார்களோ அவர்கள் எல்லாம்

எழுந்து நில்லுங்கள். சிலர் தான் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு நினைவு கிடைத்து விடும். பாப்தாதா (வராத மாதாக்கள்) அவர்களையும் டி.வி.யில் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அவர்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். நல்ல யாத்திரை நடந்தது. மேலும் நாலா பக்கமும் சேவையும் நன்றாக நடந்தது. ஆதலால் மிக்க நல்வாழ்த்துக்கள். பிரவிருத்தியில் (குடும்ப வாழ்க்கை) இருக்கும் அதர்குமார்கள் கை உயர்த்துங்கள். நல்லது அதர் குமார்களின் விசேஷம் என்ன? அதர் குமார்கள் உலகிலுள்ள ஆத்மாக்களினுடைய பிரமையை (புத்தி தடுமாற்றம்) நீக்கி விட்டனர். பிராமணன் ஆகி விட்டால் வீடு, வாசலைத் துறக்க வேண்டும் என்று ஜனங்கள் நினைத்துக் கொண்டிருந்தனர் ஆனால் எப்போதிருந்து அதர் குமார், அதர் குமாரிகளை பார்த்தார்களோ, அது முதல் நாமும் கூட பிராமணன் ஆகலாம் என்ற பிரேரணை இவர்கள் மூலமாக அவர்களுக்குக் கிடைத்தது. இதன் மூலமாக அதர் குமார்கள் சேவையில் விருத்தி என்னும் கதவை திறந்தனர். (பலே நன்றாக கை தட்டுங்கள்) ஆதலால் அதர் குமார்களும் கூட குறைந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு வர்க்கத்திற்கும், பிராமண வாழ்க்கையில் பாப்தாதாவிடம் மகத்துவம் உள்ளது.

நல்லது. சிறு குழந்தைகள் எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். இந்த குழந்தைகளைப் பார்க்கும்போது எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஏனெனில் இந்த சிறு பிராயத்திலேயே இவர்களுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் கிடைத்து விட்டது. ஒவ்வொரு சிறு குழந்தையும் நான், பிரம்மா குமார் என்று பெருமையாகச் சொல்கிறார்கள். மேலும் சிறு குழந்தைகள் நன்றாக அனுபவம் கூறுகின்றார்கள். நாங்கள் பகவானை சந்திக்கிறோம் என்று கூறுகின்றார்கள். ஆதலால் சிறு குழந்தைகளின் பேச்சுக்கள் எல்லோருக்கும் நன்றக இருக்கின்றது. ஆதலால் நீங்கள் சிறியவர்கள் அல்ல. சிறியவர்களாகிய நீங்களும் கூட, நிமித்தமாக மிக நல்லமுறையில் சேவை செய்கின்றீர்கள். ஆதலால் பாப்தாதா சிறு குழந்தைகளிடம் மிக, மிக, மிக, மிக அன்பு செலுத்துகின்றார். நல்லது. எல்லோரும் வந்து விட்டீர்கள் அல்லவா!

இன்னும் சேவாதாரி இருக்கின்றார்கள். இந்த சிஸ்டம் (ஏற்பாடு) மிக நல்ல விதமாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் சேவை செய்வதன் மூலம் சேவை கணக்கை சேமிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. சென்டரில் சேவை செய்கிறீர்கள். அது நடக்கிறது ஆனால் யக்ஞ சேவைக்கு விசேஷ மகத்துவம் உள்ளது. இப்போது இந்த மகத்துவம் பஞ்சாப், ஹிரியானா, இமாச்சலம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் ஆகிய மாநிலங்களுக்குக் கிடைத்திருக்கிறது. மிகப் பெரிய ஜோன் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அச்சல் பிரேம், ராஜ் ஆகியோர் இங்கு அமர்ந்திருக்கின்றனர். பஞ்சாப்பின் முக்கிய டீச்சர்கள் எழுந்திருங்கள். முதலாவது மற்றும் இரண்டாவது இல்லாமல் வேகம் இருக்காது நல்லது. பாப்தாதாவுக்கு பஞ்சாப்பைப் பார்த்து, பஞ்சாப் சிங்கத்தின் (சந்திரமணி தாதி) நினைவு வருகிறது. பஞ்சாபைப் பற்றியும் நினைவு வருகிறது. மிக அதிகமாக முயற்சி செய்ய வேண்டியதாயிருந்தது. ஐந்து ஜோன் சேர்ந்து பஞ்சாப் என்று சொல்கின்றார்கள். பஞ்சாப்பில் ஐந்து நதிகளும் கூட பிரசித்தமானவை. ஆகவே உங்களுக்கு மிகப் பெரிய குரூப் கிடைத்துள்ளது. மேலும் முதலாவது குரூப்பில் வந்திருப்பதால் முதல் நம்பர் கிடைத்து விட்டது அல்லவா? நல்லது. யாரெல்லாம் பஞ்சாப்பிலிருந்து வந்திருக்கிறீர்களோ, சேவாதாரிகள் எல்லோரும் எழுந்திருங்கள். அதிகமான சேவாதாரிகள் வந்திருக்கின்றனர். மிக நல்ல சேவை செய்தீர்கள். வாழ்த்துக்கள். யக்ஞ சேவைக்கு மகத்துவம் ஏன்? மற்றபடி சென்டரும் ஒரு யக்ஞம் தான் ஆனால் மதுபன் மகாயக்ஞம் என்று சொல்லப்படுகிறது. பொதுவாக எல்லாமே யக்ஞம் தான் ஆனால் மகாயக்ஞத்தில் மகான் சேவைக்கான பிரசாதம் கிடைக்கிறது. ஏனென்றால் மகா யக்ஞத்தில் எவ்வளவு மகான் ஆத்மாக்கள் வருகின்றார்கள்? ஆதலால் இத்தனை மகான் ஆத்மாக்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆதலால் தான் மகா யக்ஞ சேவைக்கு மகத்துவம் உள்ளது. பஞ்சாப் ஜோனிலிருந்து எல்லோரும் வந்து விட்டனர். இவ்வாறு சிறப்பை காட்டிவிட்டனர். எத்தகைய சிறப்பு என்று சொல்லுங்கள் பார்க்கலாம். என்ன சிறப்பு செய்தனர் என்பது நினைவுக்கு வருகிறதா? கூறுங்கள் தீவிரவாதிகள் ஒழிந்தார்கள். சிறுசிறு விஷயங்கள் நடப்பதை விட்டு விடுங்கள். இப்படி எங்கோ ஓரிரு இடத்தில் நடக்கிறது ஆனால் எவ்வளவு தீவிரவாதத்தின் கொடுமை நடந்ததோ, அதனை குறைத்து விட்டனர். இது கூட மிக சிறப்பானது தான். நீங்கள் மூலை

முடுக்குகளிலெல்லாம் தவம் செய்தீர்கள். இப்போது பயம் இல்லையல்லவா? இப்போது உலகெங்கிலும் தீவிரவாதம் இருக்கின்றது. வெளிநாட்டிலும் இருக்கின்றது. நல்லது. வெளிநாட்டினருக்கு வெளிநாட்டின் விசேஷம் உள்ளது.

பாப்தாதா என்ன கூறுகின்றாரோ அதை உடனே செய்து விடுகின்றனர். (ஃபாரின் என்றால் ஃபௌரன்) வெளிநாடு என்றால் உடனே என்பது. தந்தை சொன்னதும் டபுள் ஃபாரினர்ஸ் உடனே செய்கின்றனர். இது வெளிநாட்டின் அடையாளம். சரிதானே? நல்லது. இன்னும் யாராவது ருக்கின்றார்களா? எல்லோரைப் பற்றியும் தெரிந்து கொண்டீர்கள். நம்மோடு பாப்தாதா சந்திக்கவில்லையே என்று சிலர் நினைக்கிறார்கள். இப்போது எல்லோரையும் சந்தித்து விட்டேன் அல்லவா! எல்லோரையும் சந்தித்து விட்டேன். ஒரு இடத்தில் அமர்ந்தவாறே எல்லோரையும் சந்தித்து விட்டேன். குமாரிகள், டீச்சர்கள் எல்லோரும் சந்தித்தீர்கள் அல்லவா?

நல்லது. இப்போது ஒரு செகண்டு பாப்தாதா கொடுக்கின்றார். எல்லோரும் சரியாக நிமிர்ந்து அமருங்கள். இப்போது எல்லோருக்கும் பாப்தாதாவிடம் 100-சதவிகிதம் அன்பு இருக்கிறதல்லவா! அன்பு சதவிகிதமாக இருக்க முடியா தல்லவா? 100-சதவிகிதம் உள்ளது. அப்படியானால் 100-சதவிகிதம் அன்புக்கு கைமாறு செய்வதற்கு தயாராயிருக்கிறீர்களா? 100-சதவிகிதம் அன்பு இருக்கிறதல்லவா? யார் அன்பு குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். அன்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஓரிருவர் உள்ளனர் நல்லது. அன்பு இல்லையென்றால் பரவாயில்லை, அன்பு வந்து விடும். எங்கே போக முடியும்? அன்பு செலுத்தத்தான் வேண்டும்: நல்லது. இப்போது எல்லோரும் அலர்ட்டாக (நேராக நிமிர்ந்து) உட்கார்ந்து விட்டீர்கள் அல்லவா? இப்போது எல்லோருக்கும் அன்புக்கு கைமாறாக, ஒரு செகண்டு தந்தைக்கு முன்னால் அந்தர்முகியாகி தன்னுடைய மனதார, மனதில் சங்கல்பம் செய்ய வேண்டும். நான் எனக்காகவும், மற்றவருக்காகவும் பிரச்சினைக்குரியவனாக ஆக மாட்டேன். இப்படி அன்புக்குக் கைமாறாக திடசங்கல்பம் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? என்ன நடந்தாலும் சரி, ஒருவேளை ஏதாவது ஒன்று நடந்து விட்டாலும் கூட ஒரு

செகண்டில் தன்னை பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். இப்படி மனதில் திட சங்கல்பம் செய்யுங்கள். திட சங்கல்பம் செய்ய முடியும். இதில் பாப்தாதா உதவி செய்வார் ஆனால் உதவி கிடைப்பதற்கும் ஒரு விதி இருக்கிறது. திட சங்கல்பத்தின் ஸ்மிருதி பாப்தாதாவின் முன்னிலையில் திடசங்கல்பம் செய்திருக்கிறீர்கள். இந்த ஸ்மிருதியின் விதி உங்களுக்கு உதவியாயிருக்கும். ஆகவே நீங்கள் செய்ய முடியும். தலையை அசைத்து காட்டுங்கள். சங்கல்பம் மூலமாக என்ன செய்ய முடியாது? பயப்பட வேண்டாம். பாப்தாதாவிடமிருந்து அதிகமான உதவி அவசியம் கிடைக்கும். பாப்தாதா தன்னுடைய சுப சங்கல்பத்தை மட்டும் கூறினார். இனி செய்வது குழந்தைகளினுடைய கடமை. யார் எவ்வளவு செய்கிறார்களோ, அவ்வளவு அவர்களுடைய கணக்கில் சேமிப்பாகும். பாப்தாதா குழந்தைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றார்? குழந்தைகளுடைய கணக்கு கல்ப முழுவதிற்கும் இராஜ்யம் செய்வதற்கும், மற்றும் அரைக்கல்பம் பூஜைக்குரியவர்களாவதற்குமாக, அவ்வளவு சேமிப்பாக வேண்டும் என்பதாகும். பூஜ்யராவதற்கும், இராஜ்ய அதிகாரி ஆவதற்குமாக இரண்டு கணக்கும் சேமிப்பாக வேண்டும். ஒரு குழந்தையினுடைய சேமிப்பும் குறையக் கூடாது. எல்லோரும் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். சம்பன்னம், சம்பூரணமாக வேண்டும்.

நல்லது. இன்றைக்கு விஞ்ஞான சாதனங்கள் மூலமாக தூர தூரத்திலிருந்தும் கூட குழந்தைகள் கேட்டுக் கொண்டிருக் கின்றனர். பார்த்துக் கொண்டும் இருக்கின்றனர். (இன்று பாப்தாதாவினுடைய முரளி பாரதத்தில் டி.வியிலும் வெளி நாட்டில் இன்டர்நெட் மூலமாகவும் எல்லோரும் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டுமிருக்கிறார்கள்) அந்த குழந்தைகள் எல்லோரையும் கூட பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நல்லது. எல்லாக் குழந்தைகளுக்கும் பாப்தாதா, சந்தித்து மகிழ்ந்ததற்காக நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். சிலர் கடிதம் மூலமாகவும், சிலர் கார்டு மூலமாகவும், நேர்முகமாகவும் சந்தித்திருக்கிறார்கள். சிலர் தங்கள், தங்கள் ஸ்தானத்தில் இருந்தவாறே சந்திப்பை கொண்டாடி, மகிழ்ந்திருக்கிறார்கள் நாலாபக்கங்களிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையும், பாபாவுக்கு அதிக பிரியமானவர்களாக இருக்கின்றார்கள் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்.

குழந்தைகள் பாப் தாதாவைப் பற்றி என்ன கூறுகின்றார்கள்? தந்தையின் அன்பை கணக்கிட்டுச் சொல்ல முடியாது. வர்ணனை செய்ய முடியாது என்கின்றனர். பாப்தாதாவும் குழந்தைகளைப் பற்றி என்ன கூறுகின்றார்? செல்லமான, அதிகப்பிரியமான விசேஷ ஆத்மாக்களாகிய குழந்தைகளின் அன்பு வர்ணனையில் அடங்காது என்கின்றார். இவ்வாறு குழந்தைகளும் கூட முழு கல்பத்திலும் இப்படிப்பட்டவரை சந்திக்க முடியாது.

இவ்வாறு சர்வ தீவிர புருஷாரத்தி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தந்தையின் அன்புக்கு கைமாறு செய்யக்கூடிய தைரியசாலி குழந்தைகளுக்கு சதா தன்னுடைய சிறப்பின் மூலமாக, மற்றவரையும் விசேஷ ஆத்மாக்களாக ஆக்குகின்ற, புண்ணிய ஆத்மாக்களாகிய குழந்தைகளுக்கு, சதா பிரச்சினைகளுக்கு சமாதான சொரூபத்தில் முன்னேறி பறக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

விடைபெறுகின்ற நேரத்தில்: இன்று விசேஷமாக மதுபனில் செக்யூரிட்டி டியூட்டியில் இருக்கின்றார்களோ, அவர்கள் அனைவரும் பாப்தாதாவுக்கு எதிரில் தெரிகின்றார்கள். யக்ஞத்தை பாதுகாக்கக்கூடிய மிகப் பெரிய காரியத்தில் பாதுகாப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். தூரமாக இருந்தாலும் கூட, நினைவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் முக்கியமாக, மேலே யாரெல்லாம் சேவை நிமித்தம் அங்கிருக்கின்றார்களோ, ஞான சரோவர், பாண்டவ பவன், சாந்திவன் ஆகிய இடங்களில் பாதுகாப்பு டியூட்டியில் உள்ளவர்களுக்கு பாப்தாதா விசேஷமாக அன்பு நினைவுகளை அளிக்கின்றார். மியூஸியம், மானேசர் ஆகிய இடங்களில் யாரெல்லாம் டியூட்டியில் இருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் மிகுந்த நினைவுகள் முயற்சி நன்றாகச் செய்கிறார்கள்.

ரோஸி சகோதரி (சென்னை) அவர்கள் விசேஷ நினைவுகளை அனுப்பியிருக்கின்றார். மேலும் யாரெல்லாம் முக்கியமான நினைவுகளை அளித்திருக்கின்றார்களோ, அவர்கள் அனைவருக்கும் மிக மிக மிக மிக நினைவுகள். மற்ற படி மானேசரிலும் கூட மிக நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். டெல்லியில் உள்ளவர்கள்

தங்கள் சிறப்பை வெளிப்படுத்த இருக்கின்றனர். வெளிப்படுத்துவீர்கள் அல்லவா! சேவையில் தனிசிறப்பை வெளிப்படுத்துவார்கள். நல்ல முயற்சி. மனதார முயற்சி செய்கிறார்கள். நிமித்தமாக இருக்கும் இன்ஜினியர்கள், இப்போது தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தைரியத்தைப் பார்த்து, பாப்தாதா அர்ப்பணமாகின்றார். வெளியில் தெரிவதில்லை ஆனால் வெளிக் கொணருவார்கள். இது கூட தைரியத்தின் அடையாளம் தானே! ஆதலால் நீங்கள் எல்லோரும் பாப்தாதாவால் கொடுக்கப்பட்ட டெல்லிக்கு (கிஃப்ட்) வெகுமதிக்கு சகயோகம் செய்திருக்கின்றீர்கள். இதற்காக உங்கள் அனைவருக்கும் மிகுந்த நல் வாழ்த்துக்கள். உங்கள் எல்லோருக்குமாக டெல்லி டெல்லியில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல. உங்கள் எல்லோருக்குமான டெல்லி. இராஜ்யம் செய்ய வேண்டுமல்லவா? டெல்லியில் இராஜ்யம் செய்வீர்களா? வெளிநாட்டில் இராஜ்யம் செய்வீர்களா? ஃபாரினர்ஸ்!

சோனிபட்டிலும் காரியம் ஆரம்பமாக வேண்டும். எல்லாம் நடந்து விடும். வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. (ஹைதராபாத் நில சம்பந்தமாகவும் முடிவு ஏற்பட்டிருக்கிறது) கொஞ்சம், கொஞ்சம் நில சம்மந்தமாக சிறு பிரச்சினைகள் வருகின்றன. பிரச்சினைக்குள்ளாவதும் பிராமணர்களுக்கு ஒரு வரதானமே என்றாலும் வெற்றியும் கூடவே இருக்கின்றது. பிரச்சினை மற்றும் வெற்றிக்கான வரதானம் கூடவே தான் இருக்கின்றது. ஆதலால் தான் கொஞ்சம் இடையில் தாமதமாகிறது. நடப்பது என்னவோ நிச்சயம். முடிந்து விட்டது. யார், ஹைதரபாத்திற்கு நிமித்தமாக இருக்கின்றார்களோ, முதன் மந்திரி, மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நினைவுகளை அனுப்ப வேண்டும். டோலியும் அனுப்ப வேண்டும். தைரியம் நன்றாக இருக்கின்றது. இப்போது அனைவருக்கும் தைரியம் வந்து விட்டது. சிறுவராக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும், தைரியமாக முயற்சி செய்கிறார்கள். நல்ல விதமாக செய்கிறார்கள். எங்கெல்லாம் நடந்து கொண்டிருக்கிறதோ, பாப்தாதா, டிராமா, எல்லா பரிவாரத்தினுடைய ஆசீர்வாதம் இருக்கின்றது. ஆகவே தான் வெற்றியும் உள்ளது. (சாரநாத், ஆக்ரா, லண்டன் ஆகிய இடங்களில் பவனம் தயாராகிக் கொண்டிருக்கிறது) எங் கெல்லாம் தயாராகிக் கொண்டிருக்கிறதோ சேவை ஆரம்பத்திலேயே தயாராக இருக்கின்றது. உங்கள் எல்லோருடைய விரல் மூலமாக நாலா பக்கங்களிலும் காரியம்

நடந்து கொண்டிருக்கின்றது. வெற்றியும் கிடைக்கிறது. இனிமேலும் முன்னேற்றமும், வெற்றியும் உண்டாகும். நீங்கள் எல்லோரும் செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது அங்கே செய்விப்பவர் செய்து கொண்டிருக்கின்றாரா? நீங்கள் எல்லோரும் துணையிருப்பவர்கள் தானே! துணையாக இருக்கின்றீர்கள். எங்கே, என்னவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறதோ, அவையெல்லாம் நம்முடையது தான். டெல்லியில், ஹைதராபாத்தில் நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய பாபாவினுடையது. நம்முடையது, நம்முடையது என்பது எல்லோருக்கும் இருக்க வேண்டும். இதற்குத்தான் எல்லையற்ற குடும்பம் என்று சொல்லப்படுகிறது. பேகத் பாவனை, இந்த பாவனைக்கு பலன் உண்டு. (போரிவல்லியில் கூட நிலத்திற்கு கையொப்பம் ஆகியிருக்கிறது).

நல்லது தானே! எல்லா சமாச்சாரங்களையும் கேட்டு மகிழ்ச்சியாயிருக்கிறது அல்லவா! நல்லது. எல்லோரும் குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! பின்னால் அமர்ந்திருப்பவர்கள் நன்றாக இருக்கின்றீர்களா? பின்னால் இருப்பவர்கள் எல்லோரும் முன்னால் இருக்கிறார்கள் (டென்டில் கூட நிறைய பேர் இருக்கின்றார்கள்) டென்டில் உள்ளவர்களுக்கு டென்ட் கிடைத்து விட்டதல்லவா? மேலும் கீழே விரிப்பும் கிடைத்திருக்கிறதல்லவா? பக்தியில் தரையில் தூங்குகிறார்கள், உங்களுக்கு அப்படி மண் தரையில் படுக்க வேண்டிய நிலை இல்லையல்லவா? கம்பளி கிடைத்திருக்கிறதல்லவா? அவர்களோ குளிரில் தூங்குகிறார்கள் ஆனால் நீங்கள் மகிழ்ச்சியோடிருக்கின்றீர்கள். போதும். தந்தையின் மடிமீது தூங்குங்கள். டென்ட்டைப் பார்க்காதீர்கள். தந்தையின் மடியைப் பாருங்கள். பாப்தாதா முதன் முதலில் டென்ட் பக்கமாகத்தான் சுற்றி வருகின்றார். ஏனெனில் டென்ட்டில் இருப்பவர்கள் சகிப்புத்தன்மையுடன் இருக்கின்றார்கள் அல்லவா? சகிப்புத்தன்மைக்கு பலன் உண்டு. நல்லது. டென்ட்டில் உறங்குபவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதா டென்டில் உள்ளவர்களை தன்னுடைய வதனத்தில் அழைத்து மஸாஜ் செய்வார். சந்தோஷம் தானே! பாருங்கள் எல்லோருடைய பார்வையும் எங்கே? தாதியிடம் கேளுங்கள். எல்லோரைக் காட்டிலும் அதிகமாக யாரை நினைவு செய்தார்? டென்டில் இருப்பவர்களை நினைவு செய்தார் அல்லவா? (தாதி எல்லா

டென்ட்களையும் சென்று பார்த்தார்) ஆகவே தான் நீங்கள் பாக்கியவான்கள். நல்லது. எல்லோருக்கும், யாரெல்லாம் அன்பு நினைவுகளை அனுப்பியிருக்கின்றார்களோ, (உள்நாடு, வெளிநாடுகளில் இருப்பவர்களெல்லாம்) அவர்கள் அனைவரும், நம்மை பாப்தாதா விசேஷ ரூபத்தில் நினைவு செய்தார் என்று புரிந்து கொள்ளுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.12.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரே ஒருவர் என்ற விரதம் பூண்டு, பவித்திரத்தாவின் தாரணை மூலம் ஆன்மீகத்தன்மையுடன் மனதினால் சேவை செய்யுங்கள்!

இன்று ஆன்மீகத் தந்தை நாலா பக்கங்களிலுமுள்ள ஆன்மீக குழந்தைகளினுடைய ஆன்மீகத் தன்மையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையிடமும் ஆன்மீகத் தன்மையின் ஒளி எவ்வளவு இருக்கின்றது? ஆன்மீகத் தன்மை கண்கள் மூலமாக பிரத்யக்ஷம் ஆகின்றது. ஆன்மீகத் தன்மையின் சக்தியுடைய ஆத்மாக்கள் சதா கண்கள் மூலமாக சக்தியை அளிக்கின்றார்கள் ஆன்மீகப் புன்முறுவல் மற்றவருக்கு குஷியின் அனுபவத்தை உண்டாக்குகிறது. அவர்களுடைய நடத்தை முகம், பரிஸ்தா சமானமாக டபுள் லைட்டாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட ஆன்மீகத் தன்மைக்கு ஆதாரம் பவித்திரத்தா (தூய்மை) எவ்வளவுக்கெவ்வளவு மனம், சொல், செயலில் தூய்மை இருக்கின்றதோ, அவ்வளவு தான் ஆன்மீகத் தனமை வெளிப்படும். தூய்மை பிராமண வாழ்க்கையின் அலங்காரம், தூய்மை பிராமண வாழ்க்கையின் மரியாதை. ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தூய்மையின் ஆதாரத்தில் ஆன்மீகத் தன்மையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஆன்மீக ஆத்மா இந்த உலகில் இருந்தாலும் கூட, அலௌகீக பரிஸ்தாவாக காணப்படுவர்.

ஆதலால் உங்களைப் பாருங்கள். சோதித்துப் பாருங்கள். தன்னுடைய எண்ணம், பேச்சில் ஆன்மீகத் தன்மை உள்ளதா? ஆன்மீக எண்ணம் தன்னிலும் சக்தியை நிரப்புவதோடு, மற்றவர் களுக்கும் சக்தியளிக்கிறது. இதனை இன்னொரு விதமாகக் கூறுவதனால்,

ஆன்மீக எண்ணம், மன்சா (மனதினால்) சேவைக்கு நிமித்தமாக இருக்கிறது. ஆன்மீகப் பேச்சு, தனக்கும், மற்றவருக்கும் சுகத்தின் அனுபவத்தை அளிக்கிறது. சாந்தியின் அனுபவத்தை அளிக்கிறது. ஒரு ஆன்மீக வார்த்தை, மற்ற ஆத்மாக்களின் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆதாரம் ஆகி விடுகிறது. ஆன்மீக வார்த்தை பேசுபவர்கள் வரதானி ஆத்மா ஆகி விடுகிறார்கள். ஆன்மீக கர்மம், சகஜமாக, தனக்கும் கூட கர்ம யோகி ஸ்திதியை அனுபவம் செய்விக்கிறது. மேலும் மற்றவரையும் கூட, கர்மயோகி ஆக்குவதற்கு உதாரணமாகி விடுகிறார்கள் அவருடைய அருகா மையில் வருபவர்கள். சகஜயோகியாக, கர்மயோகி வாழ்க்கையின் அனுபவி ஆகி விடுகிறார்கள் ஆனால் ஏற்கனவே கூறியது போல ஆன்மீகத் தன்மைக்கான விதை பவித்திரத்தா (தூய்மை). கனவில் கூட பவித்திரத்தாவிற்கு பங்கம் விளையக் கூடாது. அப்போது தான் ஆன்மீகத் தன்மை வெளிப்படும். பவித்திரத்தா என்பது பிரம்மச்சர்யம் மட்டுமல்ல, ஒவ்வொரு சொல்லும் பிரம்மாச்சாரி (பிரம்மாவைப்போல பேச்சு) ஒவ்வொரு எண்ணமும் பிரம்மாச்சாரி (பிரம்மாவைப்போல எண்ணம்), ஒவ்வொரு கர்மமும் பிரம்மாச்சாரி (பிரம்மாவைப்போல கர்மம்) யாக இருக்க வேண்டும் லௌகீகத்தில், ஒரு குழந்தையின் முகத்தைப் பார்த்து, இந்தக் குழந்தை அதன் தந்தையைப் போல இருக்கிறது என்பார்கள் அல்லவா? அதைப்போல, பிரம்மாச்சாரி பிராமண ஆத்மாவின் முகத்தில் ஆன்மீகத் தன்மையில் பிரம்மாபாபாவைப் போல இருக்கின்ற அனுபவம் ஆக வேண்டும். இவர் பாபா சமானமாக இருக்கின்றார் என்ற அனுபவம் அவருடைய தொடர்பில் வருபவர்களுக்கு ஏற்படவேண்டும். சரி. 100-சதவிகிதம் இல்லையென்றாலும் இப்போதைய நேரத்தின் கணக்குப்படி எவ்வளவு சதவிகிதம் இருக்க வேண்டும்? எவ்வளவு தூரம் ஆகி யிருக்கின்றீர்கள்? 75-சதவிகிதமா? 80-சதவிகிதமா? 90-சதவிகிதமா? எத்தனை? இங்கே முன்னால் (எதிரில்) அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள்! பாருங்கள். உங்களுடைய நம்பர் முன்னால் அமருவதற்கு கிடைத்திருக்கிறது. ஆதலால் பிரம்மாச்சாரி ஆவதிலும் கூட நம்பர் முன்னே இருக்குமல்லவா? முன்னே தானே! இல்லையா?

பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையினுடைய பவித்திரத்தாவின் ஆதாரத்தில் ஆன்மீகத் தன்மையைப் பார்க்க விரும்புகின்றார்.

பாப்தாதாவிடம் எல்லோருடைய சார்ட்டும் இருக்கிறது. சொல்லப் போவதில்லை ஆனால் சார்ட் இருக்கிறது. என்னென்ன செய்கிறார்கள்? எப்படிச் செய்கிறார்கள்? எல்லாம் பாப்தாதாவிடம் சார்ட் இருக்கிறது பவித்திரத்தாவிலும் கூட, இப்போது சிற்சில குழந்தைகளிடனுடைய சதவிகிதம் குறைவாகவே இருக்கிறது. இந்த நேரத்தின் கணக்குப்படி, உலகிலுள்ள ஆத்மாக்கள், ஆத்மாக்களாகிய உங்களுடைய ஆன்மீகத் தன்மையின் தரம் எவ்வளவு என்பதைப் பார்க்க விரும்புகின்றார்கள். இதற்கு சுலபமான சாதனம் -ஒரே ஒரு வார்த்தையில் கவனம் தேவை. அடிக்கடி ஒரு வார்த்தையை மட்டும் தனக்குத் தானே கோடிட்டு கவனத்தில் வைக்க வேண்டும். எந்த ஒரு வார்த்தை ஏக் விரத்தா பவ! (ஒரே ஒருவர் என்ற விரதம் எடுத்துக் கொண்டவர்கள் ஆக வேண்டும் என்பது தான்) எங்கே ஒருவர் இருக்கின்றாரோ, அங்கே ஏகாக்கிரத்தா (ஒரு முகப்படுதல்) இயல்பாகவே வந்து விடும். அச்சல் (நிலையான) அடோல் (உறுதியான) ஸ்திதி தானாகவே வந்து விடும். "ஏக் விரத்தா" ஆவதால் ஏக்ரஸ் (ஒரே வித ரசனை) ஸ்திதி தானாகவே ஆகி விடும். ஆதலால் சோதித்துப் பாருங்கள் "ஏக் விரத்தா"வாக இருக்கிறோமா? முழு நாளில் மனம், புத்தி, "ஏக் விரத்தா" (ஒரே ஒருவர்) என்றிருக்கிறதா? கணக்கில் கூட முதன் முதலில் ஒன்று என்று தான் ஆரம்பமாகிறது ஒரு புள்ளி, ஒரு வார்த்தை (ஏக் விரத்தா) ஒன்று. என்று போட்டுக் கொண்டே இருங்கள். ஒரு புள்ளி வைத்துக் கொண்டேயிருந்தால், எவ்வளவு அதிகரித்துக் கொண்டேயிருக்கும்! ஆதலால் வேறெதுவும் நினைவில் வந்து விடக் கூடாது. ஒரு வார்த்தை (ஏக் விரத்தா) நினைவில் இருக்குமல்லவா? நேரமும், ஆத்மாக்களும், ஏக் விரத்தா ஆத்மாக்களாகிய உங்களை அழைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஆதலால் நேரத்தின் அறைகூவல் ஆத்மாக்களின் கூக்குரல் -தேவாத்மாக்களே! உங்கள் காதுகளில் விழவில்லையா? இயற்கையும் (பிரகிருதி) கூட ஹே! பிரகிருதிபதி ஆத்மாக்களே! பரிவர்த்தனை செய்யுங்கள் என்று அழைக்கிறது. பூமியில் இடையிடையே சிறு சிறு அளவில் அதிர்வுகள் உண்டாகின்றன. அப்பாவி ஆத்மாக்களுக்கு இந்த மாதிரி துக்கம், பயம், உண்டாகின்ற அதிர்வுகளைக் கொடுக்காதீர்கள். முக்தியளிக்கக் கூடிய முக்தி தாத்தா (தாத்தா-வள்ளல்) ஆத்மாக்கள், இந்த ஆத்மாக்களுக்கு எப்போது முக்தி அளிக்கப் போகிறீர்கள்? என்ன, மனதில் இரக்கம் வரவில்லையா? சமாச்சாரம் கேட்டதும் சும்மா இருந்து விடுகிறீர்கள்.

நடந்தது. முடிந்தது, கேட்டோம் என்றிருக்கிறீர்கள். ஆதலால் பாப்தாதா இப்போது ஒவ்வொரு குழந்தையினுடைய கருணை சொரூபத்தைப் பார்க்க விரும்புகின்றார். இப்போது உங்களுடைய சொந்த விஷயங்களை (எல்லைக்குட்பட்ட) விட்டு விடுங்கள். கருணையுள்ளவர் ஆகுங்கள். மனசா சேவையில் ஈடுபடுங்கள். சக்தி கொடுங்கள். சாந்தி கொடுங்கள். உதவி செய்யுங்கள். நீங்கள் கருணையுள்ள வராகி, மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தீர்களானால், எல்லைக்குட்பட்ட ஆகர்ஷணங்களிலிருந்து எல்லைக்குபட்ட விஷயங்களிலிருந்து தானாகவே தூரமாகி விடுவீர்கள் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்தும் விடுபட்டு விடுவீர்கள். பேச்சு சேவையில் அதிக நேரம் செலவழித்தாகி விட்டது. நேரத்தை பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டீர்கள். செய்தி கொடுத்தீர்கள். ஆத்மாக்களை சம்மந்தம், தொடர்பில் கொண்டு வந்தீர்கள். என்னவெல்லாம் டிராமாபடி செய்தீர்களோ, அதெல்லாம் நன்றாகவே நடந்தது ஆனால் இப்போது பேச்சுடன், மனசா சேவை செய்வதற்கான அவசியம் உள்ளது. இந்த மனசா சேவை ஒவ்வொருவரும் புதிதாக வந்திருப்பவர்களாயினும், பழையவர்களாயினும், மகாரதி, குதிரைசவாரி, காலாட்படை ஆகிய அனைவரும் செய்ய முடியும். இதை பெரியவர்கள் செய்வார்கள், நாம் சிறியவர்கள் தானே என்றோ, நமக்கு ஆரோக்கியமில்லை நாம் ஒன்றும் அவ்வளவு சாதனை செய்பவர்கள் அல்ல என்றெல்லாம் நினைக்க வேண்டாம். மனசா சேவை செய்வதற்கு ஆதாரம் எதுவும் வேண்டாம். இதை சிறு சிறு குழந்தைகள் கூட செய்ய முடியும். செய்ய முடியுமா? குழந்தைகளே! (ஆம்) மனசா சேவை செய்ய முடியும். ஆதலால் இப்போது பேச்சு மற்றும் மனசா சேவையில் பேலன்ஸ் (சரிசமநிலை) வையுங்கள். மனசா சேவை மூலம், செய்பவர்களுக்கும் மிகுந்த பயன் உள்ளது. என்? எந்த ஆத்மாவுக்கு மனசா சேவை அதாவது சங்கல்பம் மூலமாக சாந்தி கொடுக்கின்றீர்களோ, சக்தி கொடுக்கின்றீர்களோ, அந்த ஆத்மா உங்களுக்கு ஆசீர்வாதம் கொடுப்பார். அது உங்களுடைய கணக்கில், சுய புருஷாரத்தத்தோடு, ஆசீர்வாதக் கணக்கும் சேமிப்பாகி விடும். இதனால் உங்களுடைய சேமிப்புக் கணக்கு இரண்டு மடங்காக உயர்ந்து விடும். ஆதலால் புதிதாக வந்தவர்களாயினும், பழையவர்களாயினும் சரி. ஏனெனில் இம்முறை புதிதாக நிறைய பேர் வந்திருக்கிறார்கள் அல்லவா? புதிதாக வந்திருப்பவர்களில் முதன்

முறைாக இங்கு (பாபா சந்திப்பு) வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். முதன் முறையாக வந்திருக்கின்ற குழந்தைகளிடம் பாப்தாதா கேட்கின்றார். நீங்கள் மனசா சேவை செய்ய முடியுமா? (பாப்தாதா பண்டவர்களிடம், மாதாக்களிடம் மற்றும் எல்லோரிடமும், மனசா சேவை நீங்கள் செய்ய முடியும? என்று கேட்டார்) இவர்கள் மிக நன்றாக கை உயர்த்தினார்கள். பாப்தாதா டி.வி. மூலமாகப் பார்த்து கேட்டுக் கொண்டிருக்கின்றார். நேர்முகமாகவும் குழந்தைகள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். தினமும் முழு நாளில் எத்தனை மணி நேரம் மனசா சேவை யதார்த்த ரீதியில் செய்கிறார்கள்? இந்த பொறுப்பை எல்லாக் குழந்தைகளுக்கும் பாப்தாதா கொடுக்கின்றார். நான் செய்து விட்டேன் என்று கம்மா சொல்லி விடக் கூடாது. யதார்த்த ரூபத்தில் எத்தனை மணி நேரம் மனசா சேவை செய்தீர்கள்? இது பற்றி ஒவ்வொருவரும் சார்ட் வைக்க வேண்டும். பாப்தாதா திடீரென சார்ட் கேட்பார். தேதி குறிப்பிட மாட்டார். திடீரென கேட்பார். பொறுப்பு எனும் கிரீடத்தை அணிந்தீர்களா? இல்லை, ஆடிக் கொண்டிருந்ததா? பொறுப்பு எனும் கிரீடம் அணிந்திருக்க வேண்டுமல்லவா? டீச்சர்ஸ் பொறுப்பு எனும் கிரீடம் அணிந்திருக்கிறார்கள் அல்லவா? இப்போது இதனையும் (மனசா சேவை) அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சரி தானே? டபுள் ஃபாரினர்ஸ் கையை உயர்த்துங்கள்! இந்த பொறுப்பு எனும் கிரீடம் நன்றாகயிருக்கிறதா? இப்போது கை உயர்த்துங்கள்! டீச்சர்ஸ் கூட கை உயர்த்துங்கள். உங்களைப் பார்த்து, அவர்களுக்கும் பிரேரணை கிடைக்கும். சரி. சார்ட் வைப்பீர்களா? சரி. பாப்தாதா ஒரு நாள் திடீரென கேட்பார். தங்கள், தங்களுடைய சார்ட் எழுதி அனுப்புங்கள். பிறகு பார்க்கலாம். ஏனெனில் இப்போது இதற்கு அவசியமாயிருக்கிறது. உங்களுடைய குடும்பத்தின் துக்கம், பிரச்சினைகளை பார்க்க முடிகிறதா? பார்க்க முடியுமா? துக்கமுள்ள ஆத்மாக்களுக்கு அஞ்சலி கொடுங்கள். ஒரு துளிக்கு தாகமாக இருக்கிறோம் என்று பாடுகிறீர்களல்லவா? இந்த சமயத்தில் சுகம், சாந்தியின் ஒரு துளி கிடைக்காதா? என்று ஆத்மாக்கள் தாகமாகயிருக்கிறார்கள். சுகம், சாந்தி எனும் அமிருதம் ஒரு துளி கிடைத்தாலும், குஷியடைந்து விடுவார்கள். சமயம் உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது என்று பாப்தாதா அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருக்கின்றார் பிரம்மாபாபா உங்களுடைய வீட்டின் (சொர்க்க வாசல்) கதவைத் திறப்பதற்காக காத்திருக்கின்றார். பிரகிருதி (இயற்கை) தீவிரவேகத்தில் தூய்மை

செய்வதற்காகக் காத்திருக்கின்றது. ஆதலால் ஹே! பரிஸ்தாக்களே! இப்போது உங்களுடைய டபுள் லைட் மூலம் காத்திருப்பதை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். எவர்ரெடி என்ற வார்த்தையை எல்லோரும் உபயோகிக்கிறீர்கள் ஆனால் சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆவதில் எவர்ரெடி ஆகி விட்டீர்களா? சரீரத்தை விடுவதற்கு மட்டும் எவர்ரெடி ஆக வேண்டாம் பாப்சமான் ஆகி, செல்வதற்கு எவர்ரெடி ஆக வேண்டும்.

இந்த மதுபனில் எல்லோரும் மென்மேலும் முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார்கள். நன்றாக இருக்கிறது. சேவையும் செய்கிறார்கள். மதுபன் வாசிகள் எவர்ரெடி தானே! சிரிக்கிறார் கள். சரி. முதல் வரிசையில் அமர்ந்திருக்கும் மகாரதிகள் எவர்ரெடி யாக இருக்கிறீர்களா? பாபா சமானம் ஆவதில் எவர்ரெடியா? போவதாக இருந்தால் அட்வான்ஸ் பார்ட்டியில் செல்வீர்கள். அட்வான்ஸ் பார்ட்டியில் விரும்பாமலேயே எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இப்போது இதில் பிஸியாகி விடுவீர்கள். இல்லையா? பேச்சு மற்றும் மனசா சேவை ஆகிய இரண்டிலும் பேலன்ஸ் இருந்தால், ஆசீர்வாதம் (பிளஸிங்) அதிகம் கிடைக்கும். டபுள் கணக்கு சேமிப்பாகி விடும். புருஷாரத்தம் கூட, ஆசீர்வாதமும் கூட, சங்கல்பம் மூலம், பேச்சு மூலம், கர்மம் மூலம், சம்மந்தம், தொடர்பு மூலம் ஆசீர்வாதம் கொடுங்கள். ஆசீர்வாதம் பெறுங்கள். ஒரே பேச்சு தான், ஆசீர் வாதம் கொடுக்க வேண்டும். யாராவது சாபம் கொடுத்தாலும் கூட, ஆசீர்வாதம் கொடுங்கள். ஏனெனில் நீங்கள் ஆசீர்வாதங்களின் கடலாக இருப்பவரின் குழந்தைகள். யாராவது கோபப்பட்டாலும், நீங்கள் கோபப்படாதீர்கள். நீங்கள் சமாதானமாக இருங்கள். அப்படி இருக்க முடியுமா? முடியுமா? இரண்டாவது லைனில் இருப்பவர்கள் கூறுங்கள், முடியுமா? இனி இன்னும் அதிகமாக கோபப்படுவார்கள். பாருங்கள். பரீக்ஷை வருமல்லவா? மாயா கேட்டுக் கொண்டிருக்கிறதல்லவா? ஆதலால் இந்த விரதம் எடுத்துக் கொள்ளுங்கள் திட சங்கல்பம் செய்யுங்கள் "நான் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும். ஆசீர்வாதம் பெற வேண்டும்" அவ்வளவு தான். இப்படி இருக்க முடியுமா? மாயா கோபப்படுமானால், படட்டுமே? நீங்கள் சமாதானம் செய்யக் கூடியவர்கள் தானே! ஆதலால் ஒரே ஒரு வேலை மட்டுமே செய்யுங்கள். அவ்வளவு தான். கோபத்திற்குள்ளாவதும்

கூடாது. கோபப்படவும் கூடாது மற்றவர் கோபப்பட்டாலும், நீங்கள் கோப வசப்படக்கூடாது. நாம் கோபித்துக் கொள்ளவும் கூடாது. கோபத்திற்குள்ளாவதும் கூடாது. ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ளட்டும். மற்றவரைப் பார்க்கக் கூடாது. அவர்கள் செய்கிறார்கள், இவர் செய்கிறார் என்றாலும், நாம் சாட்சி யாயிருந்து பார்க்க வேண்டும். சமாதானமாக இருப்பதை மட்டுமே பார்ப்போமா என்ன? கோபத்தையும் கூட இடையிடையே பார்க்க வேண்டுமல்லவா? ஆனால் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே சமாதானமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆமாம் மாதாக்களே! முடியுமா? பாண்டவர்களே, முடியுமா? பாப்தாதா படத்தைப் பார்த்துக் கொள்வார். பாப்தாதாவிடம் மிகப் பெரிய டி.வி. இருக்கிறது. மிகப் பெரியது. ஒவ்வொரு வரையும் பார்க்க முடியும். யார், எப்போது என்ன செய்து கொணடிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் சொல்வதில்லை. உங்களுக்கு சொல்ல மாட்டார். மற்றபடி குணம் எப்படி என்று நிறைய பார்க்கின்றார். மறைவாக என்ன செய்கிறார்களோ, அதையும் பார்க்கின்றார். குழந்தைகளிடம் தந்திரம் நிறைய உள்ளது. பாப்தாதா இதைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், நீங்கள் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்து விடுவீர்கள். ஆதலால் சொல்வதில்லை. உங்களை ஏன் யோசிக்க வைக்க வேண்டும்? ஆனால் கெட்டிக்காரத்தானமாக செய்கிறார் கள். மேலும் எல்லோரிலும் கெட்டிக்காரர்களைப் பார்க்க வேண்டுமானால், பிராமணர்களிடம் தான் பார்க்க வேண்டும். சரி. இப்போது எதில் கெட்டிக்காரர்களாகப் போகிறீர்கள்? மனசா சேவையில் நம்பர் முன்னே இருக்கட்டும்! பின் தங்கி விடக் கூடாது. இதில் காரணம் எதுவும் சொல்லக் கூடாது. நேரமில்லை, வாய்ப்பு இல்லை, உடம்பு சரியில்லை, என்னை யாரும் கேட்பதில்லை, இதெல்லாம் ஒன்றுமே இல்லை. எல்லோராலும் செய்ய முடியும். குழந்தைகள் ஓடி விளையாடுகிறார்கள் அல்லவா? இதுபோல மனசா சேவையில் ஓட வேண்டும். நல்லது.

கர்நாடகத்தின் சேவை பொறுப்பு: கர்நாகடத்திலிருந்து சேவாதாரிகளாக யார் வந்திருக்கிறார்களோ, எழுந்திருங்கள். இவ்வளவு பேர் சேவைக்காக வந்திருக்கிறார்களா? பார்ட்டியில் வந்தவர்களல்ல. சேவாதாரி சரி இதுவும் கூட சகஜமாக சிரேஷ்ட புண்ணியம்

சேர்ப்பதற்கு ஒரு கோல்டன் சான்ஸ் கிடைக்கிறது. பக்தியில் கூறுகிறார்கள் ஒரு பிராமணனுக்கு சேவை செய்தாலும், பெரிய புண்ணியம் என்று ஆனால் இங்கே எத்தனை உண்மையான பிராமணர்களுக்கு சேவை செய்கிறீர்கள்? ஆதலால் சேவைக்கு நல்ல சான்ஸ் கிடைத்திருக்கிறதல்லவா? நன்றாயிருந்ததா? அல்லது களைப்படைந்து விட்டீர்களா? களைப் படையவில்லை தானே! மஜாவாக இருக்கிறது. உண்மையான மனதுடன், புண்ணியம் என்று நினைத்து சேவை செய்தீர்களானால், அதற்கு பிரத்யக்ஷபலன் உண்டு. களைப்பு ஏற்படாது. குஷியாக இருக்கும். இந்த பிரத்யக்ஷ பலன் புண்ணியம் சேர்க்கிறோம் என்ற அனுபவத்தைத் தரும். ஒருக்கால் ஏதாவது காரணத்தால் சிறிது களைப்பு உண்டானாலும், களைப்பாகத் தோன்றினாலும், உண்மையான மனதோடு சேவை செய்யவில்லை என்று பொருள். சேவை என்றால், பிரத்யக்ஷ பலன் குஷி. சேவை செய்கிறோம் என்பதல்ல, பலனை அனுபவிக்கிறோம் என்பதாகும். ஆதலால் கர்நாடகத்தில் எல்லா சேவாதாரிகளும் தங்களுடைய நல்ல சேவையில் பார்ட் செய்திருக்கிறார்கள் மேலும் சேவைக்கான பலனையும் அனுபவித்திருக்கிறார்கள்.

நல்லது. எல்லா டீச்சர்களும் நன்றாக இருக்கின்றார்களா? டீச்சர்களுக்குத் தான் எத்தனை முறை சீசனில் சான்ஸ் கிடைக்கிறது. இந்த மாதிரி சான்ஸ் கிடைப்பதும் பாக்கியத்தின் அடையாளம். இப்போது டீச்சர்களுக்கு மனசா சேவையில் வேகம் காட்ட வேண்டும். அதற்காக மனசா சேவை செய்கிறேன் என்று முழு நாளும் உட்கார்ந்து விடக்கூடாது. கோர்ஸ் எடுப்பவர்கள் வந்தால், நான் மனசா சேவை செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லி இப்போதில்லை என்று சொல்லி அனுப்பி விடக்கூடாது. யாருக்காவது, கர்மயோகத்திற்கான சமயம் வந்தால், மனசா சேவை செய்கிறேன் என்று, அந்த காரியம் செய்வதை மறுத்து விடக்கூடாது. பேலன்ஸ் வேண்டும். ஒரு சிலருக்கு, ரெம்பவும் நஷா வந்து விடுகிறது. இப்படி ஒருபோதும் நஷாவில் வந்து விடக்கூடாது பேலன்ஸ் மூலமாகவே பிளசிங் கிடைக்கும். (ஆசீர்வாதம்) பேலன்ஸ் இல்லையேல் பிளசிங்கும் இல்லை. நல்லது.

தில்லியிலிருந்து சேவாதாரிகள் வந்திருக்கிறார்கள் யார், யார் வந்திருக்கிறீர்கள். எழுந்திருங்கள். இன்ஜினியர்கள் வந்திருக்கிறார்கள்.

# 2001 அவ்யக்த முரளி

திறப்பு விழா முடிந்து விட்டதல்லவா? நன்றாகச் செய்தீர்கள். எல்லோரும் சுகமா? களைப்படைந்து விடவில்லை தானே! இல்லை. இன்னும் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யட்டுமா? எவர்ரெடியாக இருக்கிறீர்களா? இன்னும் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆர்டர் தரலாமா? நல்லது. இவர்கள் எவர்ரெடியாக இருக்கிறார்கள். விஷ்வகர்மாவைப்போல, நீங்கள் என்ன ஆர்டர்கொடுக்கிறீர்களோ, அதைச் செய்து முடிப்போம். அப்படித்தானே! பிராமண பரிவாரத்தில் சங்கமயுகத்தில் விஷ்வகர்மா பார்ட் செய்பவர்கள். துவாபரயுகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. சங்கமயுகத்தைச் சேர்ந்தவர்கள். மிகவும் நன்று எல்லோரும் குஷியாக இருக்கிறார்கள். முகூர்த்தத்தில் எல்லோரும் சந்தோஷமாக வந்தார்கள். ஆதலால் வெற்றி கிடைத்தது. இங்குமங்கும் கொஞ்சம் ஏதாவது இருக்கத்தான் செய்யும் ஆனால் மெஜார்ட்டி, எல்லோரும் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள். ஆதலால் உங்கள் எல்லோருக்கும் கள் எல் அனைவரிடமிருந்தும் ஆசீர்வாதம் கிடைத்தது உங்கள் கணக்கில் ஆசீர்வாதம் சேமிப்பாகி விட்டது. சரி தானே! ஒவ்வொருவரும் விசேஷ ஆத்மாக்கள் எந்த ஒரு டியூட்டியாயிருந்தாலும், செய்தார்கள். விசேஷ ஆத்மாக்கள் ஆதலால் உங்கள் எல்லோருக்கும் விசேஷ அழைப்பு வந்தது. மிக நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதா மற்றும் பரிவார் மகிழ்ச்சி அடைந்தார்கள். சரிதானே!

இப்போது எல்லோரும் ஒரு வினாடி மனசா சேவையின் அனுபவம் செய்யுங்கள். ஆத்மாக்களுக்கு சாந்தி மற்றும் சக்தியின் அஞ்சலி கொடுங்கள் நல்லது.

நாலா பக்கங்களிலும் சர்வ சிரேஷ்ட ஆன்மீகத் தன்மையை அனுபவம் செய்விக்கக்கூடிய ஆன்மீக ஆத்மாக்களுக்கு சர்வ சங்கல்பம் மற்றும் சொப்பனத்தில் கூட பவித்திரதாவின் பாடம் படிக்கும் பிரம்மாச்சாரி குழந்தைகளுக்கு, சர்வ திட சங்கல்பதாரி, மனசா சேவாதாரி, தீவிர புருஷாரத்தி ஆத்மாக்களுக்கு சதா ஆசிர்வாதம் வழங்கக்கூடிய, மற்றும் பெறக்கூடிய புண்ணிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் திலாராம் தந்தையின் உள்ளும் மற்றும் உயிருக்குயிரான, அதிகப்பிரியமுள்ள அன்பு நிறைந்த நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**தாதிஜி, தாதி ஜானகிஜியுடன் நேர்முக சந்திப்பு:** பாப்தாதா திரிமூர்த்தியின் காட்சியைக் காண்பித்தார். நீங்கள் எல்லோரும் பார்த்தீர்களா? ஏனென்றால், பாபாசமானமாக, பாபாவின் ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் துணையாக இருக் கின்றீர்கள் அல்லவா? ஆகவே தான் இந்தக் காட்சியைக் காண்பித்தேன். பாப்தாதா உங்கள் இருவருக்கும் விசேஷ சக்திகளை உரிமையாக்கி விட்டார். மனோ சக்தியையும் கொடுத்தார். மேலும் எல்லா சக்திகளையும் உரிமையாக்கி விட்டார். (உயில் எழுதிக் கொடுத்து விட்டார்) ஆகவே இந்த சக்திகள் தனது காரியத்தைச் செய்கின்றன. செய்விப்பவர் செய்து கொண்டிருக்கின்றார். நீங்கள் நிமித்தமாகி செய்து கொண்டிருக்கிறீர்கள். மஜாவாக (மகிழ்ச்சியில்) இருக்கிறதல்லவா? கரன் கராவன் ஹார் பாபா செய்து வித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் கவலையில்லாமல் செய்து கொண்டிருக்கின்றீர்கள். கவலை இல்லையல்லவா? பே:ஃபிகர் பாதுஷா (கவலையற்ற ராஜா) மாஸ்டர் டிகிரி பாஸாகத்தானே வேண்டும்! ஏற்கனவே நடந்தது தான். கொஞ்சம் திரும்பவும். (ரிபிட்) செய்ய வேண்டும். திரும்பவும் செய்யும் போது, கஷ்டமாகத் தெரியாது. இல்லையேல், மாஸ்டர் டிகிரி யாரால் பாஸ் செய்ய முடியும். உங்களுடன் இருப்பவர்களாகத்தான் இருப்பார்கள். துணையாக இருப்பவர்களும் வேண்டுமல்லவா? ஆனால் ஆகத்தான் வேண்டும். பாஸாக ஏற்கனவே நடந்தது தான். பாஸாகியிருக்கிறீர்கள் தானே! எத்தனை முறை பாஸாகியிருக்கிறீர்கள். (அநேகமுறை) அநேக முறை பாஸாகியிருக்கிறீர்கள். இது நடந்து முடிந்து விட்டது போலத்தான், நல்லது.

சரீரத்தைப் பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது கொஞ்சம் சரியில்லாமல் போகிறது, இதிலேயும் கொஞ்சம் கவனம் வைக்கத்தான் வேண்டும். ஏனெனில் சேவை அதிகம் செய்ய வேண்டுமல்லவா? இதில் சரீரமும் அவசியம். ஆதலால் டபுள் நாலஜ்புல் (இரண்டையும் பற்றி அறிந்தவராயிருத்தல்) நன்று.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 31.12.2001 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த புத்தாண்டில் வெற்றியடைவீராக என்ற வரதானத்தின் மூலம் தந்தை மற்றும் தன்னுடைய பிரத்யக்ஷதாவை சமீபத்தில் கொண்டு வாருங்கள்!

இன்று புதிய யுகத்தைப் படைப்பவர் தனது மாஸ்டர் புது யுகத்தை படைக்கும் குழந்தைகளுடன் புது வருடத்தைக் கொண்டாடுவதற்காக வந்துள்ளார். புது வருடத்தை கொண்டாடுவது இதையோ உலகில் அனைவருமே கொண்டாடுகின்றனர் ஆனால் நீங்கள் அனைவரும் புதிய யுகத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தைகளின் மனதிலும் புதிய யுகத்தின் உள்ளது. இப்போது புதிய யுகம் வந்தே வந்து விட்டது என தெரிந்து கொண்டுள்ளீர்கள். உலகத்தினரின் புது வருட கொண்டாட்டம் ஒரு நாளைக்கானது மற்றும் உங்களுக்கோ இந்த முழு சங்கம யுகமே புது யுகத்தைக் கொண்டாடுவதற்குதான். புது வருடத்தில் குஷியை கொண்டாடுகிறார்கள். ஒருவர் மற்றவருக்கு பரிசு அளிக்கிறார்கள். அந்த பரிசும் கூட என்ன சிறிது காலத்திற்கானது. புதிய யுகத்தை படைக்கும் தந்தை அனைத்து குழந்தைகளுக்காகவும் என்ன பரிசு கொண்டு வந்துள்ளார்? பொன்னான பரிசு, இந்த தங்கப்பரிசு என்பது தங்க யுகத்தில் எல்லாமே தானாகவே தங்கம் ஆகி விடுகிறது புதியதாகி விடுகிறது. கொஞ்ச நேரத்திற்குப் பின் புதிய வருடம் ஆரம்பமாகி விடும் ஆனால் அனைத்துமே புதியதாகி விடாது. உங்களுடைய புதிய யுகத்தில் இயற்கையும் கூட புதியதாகி விடும். ஆத்மாவும் கூட புத்தாடையை (சரீரம்) அணிந்து கொள்ளும். ஒவ்வொரு பொருளும் புதியது, அதாவது சதோபிரதானமாக பொன் யுகமாக இருக்கும், எனில்

# 2001 அவ்யக்த முரளி

புதிய வருடத்தைக் கொண்டாடும் போது உங்கள் மனம் புத்தியில் புது யுகம் தான் நினைவிற்கு வந்து கொண்டிருக்கிறது. புது யுகத்தின் நினைவுதானே அல்லது இன்றைய நாளில் புதிய வருடத்தின் நினைவு உள்ளதா?

பாப்தாதா முதலில் புது யுகத்திற்கான வாழ்த்துக்களை அளிக்கின்றார், கூடவே புது வருடத்திற்கான வாழ்த்துகளையும் அளிக்கின்றார், ஏனெனில் நீங்கள் அனைவரும் புதிய வருடத்தைக் கொண்டாட வந்துள்ளீர்கள் தானே. கொண்டாடுங்கள், நன்றாகக் கொண்டாடுங்கள். அழியாத பரிசு பாப்தாதா மூலம் என்ன கிடைத்ததோ, அதனுடைய அழியாத வாழ்த்துக்களைக் கொண்டாடுங்கள். சதா ஒருவர் மற்றவருக்கு சுப பாவனையின் வாழ்த்து அளியுங்கள், இதுதான் உண்மையான வாழ்த்தாகும். வாழ்த்துக் கூறும் போது தானும் குஷி அடைகிறீர்கள் மற்றும் மற்றவரும் குஷி அடைகின்றார் எனில் உண்மையான மனதுடன் வாழ்த்துங்கள் -ஒருவர் மற்றவர் மீது உளப்பூர்வமாக சுப பாவனை சுப விருப்பங்களின் வாழ்த்து! சுப பாவனை அத்தகைய ஒரு உயர்ந்த வாழ்த்து, அது எந்த ஒரு ஆத்மாவின் எப்படிப்பட்ட பாவனையாக இருந்தாலும் -நல்லதோ கெட்டதோ -ஆனால் உங்களுடைய சுப பாவனையால் அவரது உணர்வுகளை மாற்ற முடியும், சுபாவத்தையும் மாற்ற முடியும். அத்தகைய சுபாவம் என்ற சொல்லின் அர்த்தமே ஸ்வ (சு) என்றால் சுபமான உணர்வு. ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இந்த அழியாத வாழ்த்தையே கொடுத்துக் கொண்டே இருங்கள். யாராவது உங்களுக்கு எது வேண்டுமானாலும் தரட்டும் ஆனால் நீங்கள் அனைவருக்கும் சுப பாவனையைக் கொடுங்கள். அவிநாசி ஆத்மா தனது அவிநாசி ஆத்மீக ஸ்திதியில் நிலைத்திருக்கும் போது, எந்த ஒரு ஆத்மாவும் மாற்றம் அடைந்தேத் தீரும். எனில் இந்தப் புதிய வருடத்தில் என்ன சிறப்பை செய்வீர்கள் -சுயத்திலும், அனைத்திலும் மற்றும் சேவையிலும்? எப்போது பெயரே புதிய வருடம் எனும் போது ஏதாவது புதுமையைச் செய்வீர்கள் தானே; எனில் என்ன புதுமை செய்வீர்கள்? ஒவ்வொருவரும் தனது புதுமையின் திட்டம் தீட்டி உள்ளீர்களா அல்லது வெறுமனே புது வருடத்தைக் கொண்டாடுவீர்களா? சந்திப்பை கொண்டாடினோம், புது வருடத்தைக் கொண்டாடினோம், புதுமைக்கான திட்டம் என்ன செய்துள்ளோம்?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த வருடத்திற்காக விசேஷமாக இந்த சமிக்ஞை செய்கிறார் -சமயத்திற்குத் தகுந்தாற்போல் இப்போது எல்லா குழந்தைகளும், இங்கு எதிரில் அமர்ந்திருந்தாலும் சரி, உள்நாடு வெளிநாடுகளில் விஞ்ஞான சாதனங்கள் மூலம் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தாலும் சரி, பாப்தாதாவும் கூட அனைவரையும் பார்த்துக் கொண்டு உள்ளார். எல்லோரும் மிகவும் ஓய்வாக, மிகுந்த குஷியுடன் பார்த்துக் கொண்டுள்ளனர் எனில் இனிமையான குழந்தைகளுக்கு பாப்தாதா இந்த செய்கிறார் -இப்போது நீங்கள் உங்களது இந்த பிராமண வாழ்க்கையில் அமிர்த வேளை முதல் இரவு வரை சேமிப்பின் கணக்கை அதிகரியுங்கள், இருப்பின் கணக்கை அதிகரியுங்கள்! ஒவ்வொருவரும் தனது காரியங்களுக்கு ஏற்றவாறு திட்டம் உருவாக்குங்கள். பிராமண வாழ்க்கையில் என்ன பொக்கிஷம் கிடைத்துள்ளதோ, அந்த ஒவ்வொரு பொக்கிஷத்தின் சேமிப்பின் இருப்பை அல்லது சேமிப்பை அதிகரியுங்கள் ஏனெனில் பாப்தாதா இன்று வருட இறுதி வரை நாலா புறமும் உள்ள குழந்தைகளின் முடிவைப் பார்த்தார். என்ன பார்த்தார்? தெரிந்து இருப்பீர்கள் -டீச்சர்களுக்கும் தெரியும், இரட்டை வெளிநாட்டினருக்கும் தெரியும், மகாரதிகளுக்கும் தெரியும்; சேமிப்பின் கணக்கு எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு... ... என்ன சொல்வது? நீங்களே கூறுங்கள் ஏனெனில் பாப்தாதாவிற்குத் தெரியும். எல்லா பொக்கிஷங்களையும் சேமிப்பதற்கான நேரமோ இந்த சங்கம யுகம் தான். இந்த சிறிய யுகத்தில் எவ்வளவு சேமிப்பாகிறதோ அதற்கேற்றவாறு முழு கல்பமும் பலன் அடைந்து கொண்டே இருப்பீர்கள். உங்களது ஸ்லோகன் உள்ளதுதானே, என்ன ஸ்லோகன்? இப்போது இல்லையேல்... பின்னால் வருவது என்ன? இப்போது இல்லையேல் எப்போதும் இல்லை! இந்த ஸ்லோகன் புத்தியில் நன்றாக நினைவுள்ளது ஆனால் இதயத்தில், நினைவில் மறந்து விடுகிறது, எனில் நினைவும் இருக்கிறது. அனைத்திலும் பெரியதிலும் பெரிய பொக்கிஷம் இந்த பிராமண வாழ்க்கையின் மேன்மைக்கான ஆதாரம் -சங்கல்பத்தின் கஜானா, நேரத்தின் கஜானா, சக்திகளின் கஜானா, ஞானத்தின் கஜானா, மற்ற ஸ்தூல செல்வத்தின் கஜானாவோ பொதுவானது. எந்த அளவு நீங்கள் ஒவ்வொரு பிராமணரும் சிரேஷ்ட சங்கல்பத்தின் கஜானா மூலம் உங்களை அல்லது உங்கள் சேவையை உயர்த்திக் கொள்ள

முடியும் என பாப்தாதா பார்த்தார். நீங்கள் இப்போது இதில் மேலும் அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டும்.

பிராமணர்கள் உங்களது ஒரு சிரேஷ்ட சங்கல்பத்தில், சுப சங்கல்பத்தில் அவ்வளவு சக்தி உள்ளது அதனால் ஆத்மாக்களுக்கு அதிகம் உதவி செய்ய முடியும். சங்கல்ப சக்தியின் மகத்துவத்தை இப்போது விரும்பிய அளவு அதிகரிக்க முடியும். எப்போது விஞ்ஞான சாதனம் ராக்கெட் தூர அமர்ந்தபடியே எங்கு வேண்டுமோ எப்போது வேண்டுமோ அந்த இடத்தை அடைய வேண்டுமோ ஒரு நொடியில் சென்றடைய முடிகிறது எனில் உங்களது சுபமான உயர்ந்த எண்ணத்தின் முன் இந்த ராக்கெட் எம்மாத்திரம்! சுத்திகரிக்கப்பட்ட விதி மூலம் காரியத்தில் ஈடுபடுத்திப் பாருங்கள். உங்களுடைய விதியின் வெற்றி மிகவும் உயர்ந்தது ஆனால் இப்போது உள்நோக்குமுகத்தின் பட்டியில் அமருங்கள். இந்த புது வருடத்தில் தனக்காக எல்லா கஜானாக்களின் சேமிப்பின் திட்டம் போடுங்கள். சேமிப்புக் கணக்கை அதிகரியுங்கள். முழு நாளும் உள் நோக்குமுகத்தின் பட்டிக்காக தன்னைத் தானே பொருத்திக் கொள்ளுங்கள். உங்களுக்காக நீங்கள் தான் செய்ய வேண்டுமே தவிர மற்றவரால் அல்ல.

பாப்தாதா பிரத்யக்ஷதா வருடத்தின் முன்பாகவே இந்த வருடத்தை 'வெற்றி அடையும் வருடம்' என்று கூறுகிறார். வெற்றிக்கான ஆதாரம் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயனுள்ளதாக்குவது. பயனுள்ளதாக்குங்கள் வெற்றி அடையுங்கள். பின்பு வெற்றி தானாகவே பிரத்யக்ஷத்தை வெளிப்படுத்தும். வார்த்தையின் சேவை மிக நன்றாக செய்தீர்கள் ஆனால் இப்போது வெற்றியின் வரதானம் மூலம் தந்தையை, தங்களை வெளிப்பாட்டின் அருகே கொண்டு வாருங்கள். ஒவ்வொரு பிராமணரின் வாழ்விலும் எல்லா கஜானாக்களும் நிரம்பிய ஆத்மாக்களாக அனுபவம் ஆகட்டும். இந்நாட்களில் ஆத்மாக்கள் உங்களுடைய அனுபவமூர்த்தி மூலம் அனுபவம் பெற விரும்புகின்றனர். குறைவாகவே கேட்க விரும்புகின்றனர், அனுபவம் அதிகம் அடைய விரும்புகின்றனர். அனுபவத்தின் ஆதாரம் -பொக்கிஷங்களின் சேமிப்பு கணக்கு! இப்போது முழு நாளும் இடை இடையே இந்த தனது 'சார்ட்'ஐ சோதனை செய்யுங்கள் -எல்லா

பொக்கிஷங்களையும் எவ்வளவு சேமித்து உள்ளேன்? சேமிப்புக் கணக்கைப் பாருங்கள், கணக்கு வழக்கை பாருங்கள்.

ஒரு நிமிடத்தில் எத்தனை எண்ணங்கள் எழுகின்றன? எண்ணங்களின் வேகம் அதிகமாக உள்ளதல்லவா? எத்தனை பயனடைந்தது, எத்தனை வீணானது? எத்தனை சக்திசாலியானது, எத்தனை சாதாரணமானது? சோதனை செய்ய இயந்திரம் உங்களிடம் உள்ளதா? இல்லையா? படமும் சோதிக்கும் இயந்திரம் உள்ளது தானே? டீச்சர்களிடம்? உங்களுடைய சென்டர்களில் எப்படி கம்ப்யூட்டர் இருக்கிறதோ, ஈமெயில் இருக்கிறதோ அதே போல் இந்த சோதிக்கும் இயந்திரம் இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினரிடம் உள்ளதா? வேலை செய்கிறதா அல்லது பழுதடைந்து விட்டதா? பாண்டவர்களிடம் சோதிக்கும் இயந்திரம் உள்ளதா? அனைவரிடமும் உள்ளது. யாரிடம் இல்லையோ அவர்கள் விண்ணப்பிக்கவும். அப்படி ஏதாவது புதிய அலுவலகம் திறக்கிறார்கள் என்றால் முதலில் சிந்திக்கிறார்கள், அலுவலகம் ஆரம்பிப்பதற்கு முன்பே கம்ப்யூட்டர் தேவை, ஈமெயில் தேவை, டைப்ரைட்டர் தேவை, ஜெராக்ஸ் மிஷின் தேவை என, தேவை அல்லவா? எனில் பிராமண வாழ்வில் உங்களுடைய இதயத்தின் அலுவலகத்தில் இந்த எல்லா இயந்திரங்களும் இருக்கிறதா? இல்லையா?

பாப்தாதா முன்பும் கூறியிருந்தார், பாப்தாதாவிடம் இயற்கையும் கூட சொல்கிறது நான் எவரெடி என; நேரமும் பிராமணர்களை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருக்கிறது பிராமணர்கள் தயாராகி விட்டனரா என்று! பிராமணர்கள் அடிக்கடி சுற்றிக் கொண்டே இருக்கிறீர்கள், எனில் பாப்தாதா கேட்கிறார் கையையோ மிக நன்றாக தூக்குகிறீர்கள், பாப்தாதாவும் குஷி அடைந்து விடுகிறார். இப்போது அந்த மாதிரி எவரெடி ஆகுங்கள் -ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு சுவாசமும் ஆஹா! ஆஹா! (wah,wah) என ஆகட்டும் ஏன் (why) அல்ல, ஆஹா! ஆஹா! சில சமயம் ஆஹா ஆஹா என ஆகிறது, சில சமயம் ஆஹாவிற்குப் பதில் ஏன் என ஆகி விடுகிறது; சில சமயம் புள்ளி வைக்கிறீர்கள், சில சமயம் கேள்விக்குறி மற்றும் ஆச்சரியக்குறி இடுகிறீர்கள். இப்போது அனைவரது மனமும் கூறட்டும் ஆஹா! மேலும் யாருடைய சம்பந்தம் தொடர்பில் வந்தாலும் -பிராமணர்கள் ஆகட்டும்

சேவை செய்பவர்கள் ஆகட்டும் -ஆஹா! ஆஹா! என்ற ஓசை வெளி வர வேண்டும். நல்லது.

இந்த சீசனில் இறுதிச்சுற்றுக்கு இன்னும் எத்தனை மாதங்கள் உள்ளது. (மூன்று. மூன்று மாதத்திற்குப் பின் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் கணக்கையும் சோதனை செய்வார், சரியா? மூன்று மாதத்தில் சோதனை செய்வதற்குத் தயாராகி விடுவோம் என நினைப்பவர்கள் ஒரு கையை உயர்த்துங்கள். தயாராகி விடுவீர்களா? எத்தனை சதவிகிதத்தில் தயாராகி விடுவீர்கள்? ஊக்கம் நன்றாக உள்ளது, தைரியம் மற்றும் உழைப்பிற்கான வாழ்த்துக்கள். யார் கை தூக்கவில்லையோ, யோசித்துக் கொண்டிருந்தீர்களா என்ன? 3-மாதத்தில் கணக்கு சோதிக்கப்படும். தாங்களே தங்களது கணக்கை சோதியுங்கள், பின்பு பாப்தாதா சோதனை செய்வார். பாப்தாதாவிற்கோ சோதனை செய்வதற்கு அதிக நேரம் ஆகாது. இங்கு கணக்கிற்காக எவ்வளவு மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, அப்படித்தானே? களைத்து விடுகிறார்கள். பாப்தாதாவிற்குத் தெரிய வரும். மதுபன் வாசிகள் கணக்கு வைப்பதில் புத்திசாலிகள் தானே? எல்லோரும் ஆஹா ஆஹா என்பீர்கள், பரவாயில்லை.

பாப்தாதா டீச்சர்களைப் பார்த்து மிக குஷி அடைகின்றார். (எல்லோரும் கை தட்டுகின்றனர்). கையை மிக நன்றாக தட்டுகிறீர்கள். எப்படி நீங்கள் அனைவரும் டீச்சர்கள் தானே அல்லது இந்த டீச்சர்கள் மட்டும்தான் டீச்சர்களா? எப்போது யாருக்காவது ஏழு நாள் பாடம் எடுக்கிறீர்கள் அல்லது செய்தி அளிக்கிறீர்கள் என்றால் அப்போது என்னவாக ஆகிறீர்கள்? டீச்சர்கள் ஆகிறீர்கள்தானே! பாப்தாதா இந்த வருடத்தில் ஒரு புதுமையைக் காண விரும்புகிறார், சொல்லட்டுமா? செய்வீர்களா? பாண்டவர்கள் செய்வீர்களா? உறுதியாக? உறுதியாகச் செய்வீர்கள்தானே? என்ன ஆனாலும் சரி செய்தே ஆக வேண்டும், தயாரா? பாண்டவர்கள் எல்லோரும் தயாரா? தயாரா பாப்தாதா கேட்பார். மாதாக்கள் செய்வீர்களா? (எல்லோரும் ஹான் ஜி என்றனர்). நல்லது. பாப்தாதா குழந்தைகளின் தைரியத்திற்கு வாழ்த்துக்கள் தருகிறார். இப்போது ஒரு விஷயம், இரு கைகளைத் தட்டாமல் ஒரு கையைத் தட்டுங்கள்.

## 2001 அவ்யக்த முரளி

இன்று கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் (முப்பாட்டனார்) பிரம்மாதந்தைக்கு ஒரு சுப ஆசை உள்ளது; பிரம்மாதந்தை கூறினார் என்னுடைய மிகப் பெருமை வாய்ந்த பேரக் குழந்தைகளுக்கு ஒரு விஷயத்தை கூறுகின்றேன், அது என்ன? ஹரி என்னவெனில் சதா ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் சதா, ஒன்று -ஆன்மீகப் புன்முறுவல் இருக்கட்டும் கேட்டீர்களா. நல்ல விதமாக காது கொடுத்துக் கேளுங்கள் மேலும் இரண்டாவது வாயில் (வார்த்தையில்) சதா இனிமைத்தன்மை இருக்கட்டும். ஒரு வார்த்தை கூட இனிமையற்றதாக இருக்கக் கூடாது; முகத்திலும் ஆன்மீகத் தன்மை இருக்கட்டும், வாயிலும் இனிமைத்தன்மை இருக்கட்டும் மற்றும் மனம் புத்தியில் சதா சுப பாவனை, கருணை உள்ளம், வள்ளலின் பாவனை இருக்கட்டும். ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்ற வேண்டும் எனில் இதைச் செய்ய முடியுமா? டீச்சர்கள் இதைச் செய்ய முடியுமா? இளைஞர்கள் இதைச் செய்ய முடியுமா? (ஞானசாரவை ஊரில் உள்நாட்டு வெளிநாட்டு இளைஞர்களுக்கான பட்டி நடந்து கொண்டிருக்கிறது). பாப்தாதாவிடம் இளைஞர் குழுவினரின் முடிவு நல்லதாக வந்துள்ளது, கோடி மடங்கு வாழ்த்துக்கள், ரிசல்ட் நன்றாக உள்ளது, அனுபவம் நன்றாக செய்துள்ளனர். பாப்தாதாவும் குஷி அடைகிறார். பாப்தாதாவும் அனுபவத்தை கேட்டார், பிறந் சொல்லிக் கேட்கவில்லை ஆனால் பாப்தாதாவே உங்களுடைய அனுபவங்களை நேரடியாகக் கேட்டார் ஆனால் இப்போது இந்த அனுபவங்களை அமர பவ! என்ற வரதானத்தின் மூலம் அழியாமல் வைத்திருக்க வேண்டும். என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் ஆனால் உங்களது ஆன்மிக அனுபவங்களை சதா முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும், குறைக்கக்கூடாது. மூன்று மாதத்திற்குப் பின் மதுபன் வாருங்கள், வராமல் இருங்கள்; மூன்று மாதத்திற்குப் பின் வெளிநாட்டினர் வர மாட்டார்கள் ஆனால் தனது கணக்கை வைக்க வேண்டும் மற்றும் பாப்தாதாவிடம் அனுப்ப வேண்டும். பாப்தாதா சரி செய்து விடுவார் அல்லது முடித்ததை சதவிகிதத்தில் தாருங்கள். சரியா? ஆம், ஒரு கை ஓசை எழுப்புங்கள். நல்லது.

இன்று வாழ்த்துக்களுக்கான நாள் எனில் இன்னும் குஷியான விஷயத்தை பாப்தாதா கேட்டார், பார்க்கவும் செய்தார். சின்ன சின்ன குழந்தைகள் கிரீடம் அணிந்து அமர்ந்திருக்கின்றனர். உங்களுக்கும்

கிடைக்கும் ஆனால் இவர்களுக்கு இப்போதே கிடைத்து விட்டது. எழுந்து நில்லுங்கள், பாருங்கள் கிரீடதாரி குழுவைப் பாருங்கள். குழந்தைகள் சதா உள்ளத்தில் உண்மையானவர்கள். உண்மையான இதயம் உள்ளவர்கள் தானே. நன்றாக இருக்கிறது. குழந்தைகளின் முடிவையும் பாப்தாதா நன்றாகப் பார்த்தார். வாழ்த்துக்கள் நல்லது.

இரட்டை வெளிநாட்டினர்: உங்களது மடல்கள், கடிதங்களையும் பார்த்தார். ஊக்கத்தின் கடிதங்கள் ஆனால் ஒரு விஷயத்தை பாப்தாதா பார்த்தார், அவற்றில் சிலர் மிக நன்றாக ஊக்கம் உற்சாகத்துடன் மாற்றத்தையும் எழுதியிருந்தனர், ஊக்கத்தையும் எழுதி இருந்தனர் ஆனால் சிலர் கொஞ்சம் தனது அலட்சியத்தையும் காண்பித்திருந்தனர். ஒருபோதும் அலட்சியம் அடையக்கூடாது, கவனம்! ஒன்று பாப்தாதாவிற்கு அலட்சியம் நன்றாக இருப்பதில்லை மற்றும் இரண்டாவது மனம் உடைந்து போவதும் நன்றாக இருப்பதில்லை. என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், பெரிய மனது இருக்கட்டும். மனமுடைவது சின்ன மனசு ஆகி விடுகிறது. குஷியான மனது விசாலமானது. எனவே மனம் உடைந்து போகக்கூடாது, அலட்சியம் ஆகக் கூடாது. ஊக்கம் உற்சாகத்தில் சதா பறந்து கொண்டே இருக்க வேண்டும். பாப்தாதாவிற்கு இரட்டை வெளிநாட்டினர் மீது ஆயிரம் கோடி மடங்கு நம்பிக்கை உள்ளது. இரட்டை வெளிநாட்டினர் அப்படி ஜொலிப்பைக் காட்டுவார்கள், இதனால் இந்தியாவில் உள்ள ஆத்மாக்கள் வியப்படைந்து விடுவர். வர வேண்டும், அந்த நாளும் வர வேண்டும், சீக்கிரம் வர வேண்டும். வர வேண்டும்தானே? அந்த நாளும் வரப் போகிறது அல்லவா? அந்த நாள் வருமா? (சீக்கிரம் சீக்கிரமாக வரும்) ஹான் ஜீ என்றாவது கூறுங்கள். முன்கூட்டியே வாழ்த்துக்களின் தட்டை நிரப்பித் தருகிறார். அவ்வளவு தைரியத்தை இரட்டை வெளிநாட்டினரிடம் பாப்தாதா பார்க்கின்றார், அப்படித்தானே? வெளிநாட்டில் என்ன செயல், என்ன சொல், என்ன உள்ளுணர்வு, என்ன விதி நாம் செய்கிறோமோ நம்மைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். அதிக நம்பிக்கை உள்ளது, நன்றாக உள்ளது, இளைஞர்களும் நன்றாக உள்ளார்கள், இல்லறத்தினரும் அதிகம் உள்ளனர், குமாரிகளும் அதிகம் உள்ளனர், அதிசயமோ, அதிசயம் தான் சரி தானே? இந்தச் சிந்தி குடும்பத்தினர் கூறுங்கள் என்ன அதிசயம் செய்யப் போகிறீர்கள்? நிமித்தமாக மட்டும் சிந்தி ஆனால் பிராமணர்கள், என்ன செய்யப்

போகிறீர்கள்? கூறுங்கள். (பாபாவின் பெயரை புகழ் பெறச் செய்வோம்). எப்போது செய்வீர்கள்? இந்த வருடத்தில். உங்கள் வாயில் குலாப் ஜாமுன்! தைரியசாலிகள் (உங்களுடைய வரதானம் உடன் இருக்கிறது). வரதாதாவே உடனே இருக்கிறார் எனில் வரதானம் என்ன பெரிய விஷயம். நல்லது.

யாரெல்லாம் இந்த கல்பத்தில் முதல் முறையாக வந்துள்ளீர்களா அவர்கள் எழுந்திருங்கள். முதன்முறையாக வந்துள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா கூறுகின்றார் -பின்னால் வந்துள்ளீர்கள் ஆனால் முன்னால் செல்ல வேண்டும்; எல்லோரும் உங்களைப் பார்த்து குஷி அடையுமாறு அந்த அளவு முன்னே செல்ல வேண்டும் மற்றும் அனைவரது வாயிலும் இதுதான் வெளி வர வேண்டும் -அதிசயம்! அதிசயம்! அதிசயம்! இந்த மாதிரி தைரியம் இருக்கிறதா? முதன்முறையாக வந்திருப்பவர்களிடம் தைரியம் உள்ளதல்லவா. புது வருடத்தைக் கொண்டாட வந்துள்ளீர்கள் எனில் புது வருடத்தில் ஏதாவது அதிசயம் செய்வீர்கள் தானே. இருப்பினும் பாப்தாதாவிற்கு எல்லாக் குழந்தைகள் மீதும் அதிகப் பிரியம் உண்டு. இருப்பினும் அதி புத்திசாலித்தனமான காரியத்தை செய்து உள்ளீர்கள் மிகவும் தாமதம் (too late) ஆவதற்கு முன்பாகவே வந்து விட்டீர்கள். இப்போது இருப்பினும் இந்த ஹாலில் உட்கார இடம் கிடைத்து விட்டது அல்லவா; அமர்வதற்கு பலகையோ பாயோ கிடைத்ததுதானே. மற்றும் எப்போது டூ லேட் போர்டு போடப்படுமோ அப்போது வரிசையில் நிற்க வேண்டி வரும். எனவே இருப்பினும் சரியான நேரத்தில் பாப்தாதாவைத் தெரிந்து கொண்டு விட்டீர்கள். இது புத்தியின் வேலை அல்லவா, நல்லது.

பழைய பாண்டவர்கள் எழுந்திருங்கள். பாண்டவர்களின் மகிமையும் ஒன்றும் குறைந்ததல்ல. பாப்தாதாவின் பட்டமே பாண்டவ பதி, எனில் பாண்டவர்களின் மகிமைதானே. பாண்டவபதி மற்றும் வெற்றி பெற்ற பாண்டவர்கள் என பாடப்பட்டுள்ளது. சக்திகளை வரதானியாக பாடப்பட்டுள்ளது ஆனால் வெற்றி பாண்டவர்களுக்கு என மகிமை செய்யப்பட்டுள்ளது என்றால் பாண்டவர்களின் நெற்றியிலும் எந்த திலகம் இடப்பட்டுள்ளது? வெற்றியின் திலகம்! நீங்கள் உங்கள் நெற்றியில் வெற்றியின் திலகத்தைப் பார்க்கிறீர்களா அல்லது மறந்து விடுகிறீர்களா? சதா உங்கள் நெற்றியில் வெற்றித் திலகம்

ஜொலிப்பதைப் பாருங்கள். வெற்றி பாண்டவர்களின் பிறப்புரிமை! அதிகாரிகள்தானே? எனில் பாண்டவர்களுக்கு வெற்றி ரத்தினத்தின் ரூபத்தில் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார். மிகவும் நன்றாக உள்ளது, நிறைய பேர் இருக்கிறீர்கள், பாண்டவர்கள் குறைந்தவர்கள் இல்லை!

நல்லது, பழைய மாதாக்கள் யார் முன்பிருந்தே வந்து கொண்டிருக்கிறீர்களோ அவர்கள் எழுந்திருங்கள். மாதாக்களின் விசேஷம் என்ன? மாதாக்களின் பாதங்களில் இந்த எல்லா பெரிய பெரிய பதவியில் இருப்போர் விழுந்து வணங்குவார்கள். மாதா குரு என என்ன பாடப்பட்டுள்ளதோ அதனுடைய உண்மையான பாகத்தை மாதாக்கள் நீங்கள் நடிப்பீர்கள். எப்படி இப்போது ஏதாவது பெரிய நாள் வருகிறது எனில் பாரத மாதா கீ ஜெய்! என்று பாடுகின்றனர் தானே. போகப் போக மாட்டார்கள் உங்களுக்கு ஜெய ஜெய (வெற்றி வெற்றி) என பாடுவார்கள். இந்த அளவு உயர்ந்த பதவியை பாப்தாதா மாதாக்களுக்குக் கொடுத்துள்ளார் எனில் மாதாக்கள் வெற்றி முழக்கத்தின் ஒலியைக் கேட்பீர்கள். மாதா, குரு என்ற பாட்டின் மகிமையை பிரத்யக்ஷ ரூபத்தில் காண்பீர்கள், அத்தகைய மாதாக்கள்தானே. தூங்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்களை எழுப்பி விட்டீர்கள். மாதாக்களுக்கு மிக நல்ல பாகம் உள்ளது. யார் உங்களை நிந்தனை செய்தனரோ அவர்கள் உங்களது புகழ் பாடுவார்கள் ஏனெனில் தந்தையுடையவர் ஆகி விட்டீர்கள் தானே. உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானின் துணைவன் ஆகி விட்டீர்கள், இந்த ஆன்மீக போதை உள்ளதா? எனில் அப்படிப்பட்டவர்களுக்கு பாப்தாதாவும் நமஸ்தே கூறுகிறார். நல்லது.

குமாரிகளுடன்: குமாரிகள் கை அசையுங்கள், குமாரிகள் அதிகம் உள்ளனர். இப்போது நீங்கள் சாதாரண குமாரிகள் இல்லை, சுகுமாரி ஆகி விட்டீர்கள், சிரேஷ்ட குமாரிகள் ஆகி விட்டீர்கள். குமாரிகளுக்காக பாப்தாதாவிற்கு மனதில் ஒரு ஆர்வம் உள்ளது, கூறட்டுமா. குமாரிகள் கேட்பீர்களா? குமாரிகளுக்கான மகிமை உள்ளது -21-தலைமுறைகளை கரையேற்றக் கூடியவர்கள் என! எனில் பாப்தாதா கூறுகிறார், இந்த வருடம் ஒவ்வொரு குமாரியும் ஒரு வாரிசை உருவாக்க வேண்டும், இது முடியுமா? தைரியமிருக்கா? எத்தனை குமாரிகள் இருக்கிறீர்கள்? (சுமார் 1,000). எனில் இந்த வருஷத்தில் 1000-வாரிசுகள் தயாராகி விடும்.

(ஹான் ஜீ). முன்கூட்டியே வாழ்த்துக்கள். இப்போது வாரிசுகளின் மாலையை உருவாக்குவோம். கதம்ப மாலையோ வந்து கொண்டுதான் உள்ளது. இப்போது வாரிசுகளின் மாலையை உருவாக்குவோம், சரிதானே? முதலில் இந்த பயிற்சியை தாதிகளிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். வாரிசு என்று யாரைக் கூறுகிறோம் என்பதை? வாரிசுதாரர்களின் தகுதி என்ன? தெரியுமா? எனில் இந்த வருஷம் ஒவ்வொருவரும் ஒரு வாரிசை உருவாக்க வேண்டும், பின்பு பாப்தாதா வாரிசுகளின் மாலையை உருவாக்குவார். இந்த வருஷம் ஏதாவது புதுமை செய்வீர்கள்தானே? எனில் வாரிசை உருவாக்குங்கள். டில்லியும் செய்தார்கள் என்றால அனைவரும் செய்வார்கள். செய்தாக வேண்டும்தானே? வேறு என்ன செய்ய வேண்டும்? யார் உங்களை நிந்தனை செய்தார்களோ அவர்களை உங்களது மகிமை பாடச் செய்ய வேண்டும் அல்லவா. இப்போது பார்ப்போம் யாரெல்லாம் வாரிசு தயார் செய்கிறார்களோ அவர்கள் மதுபனிற்கு செய்தி அனுப்புங்கள் -தாதி வாரிசு வந்து விட்டார் என! குமாரிகள், சரிதானே? ஹான் ஜீ என்றாவது கூறுங்கள்!

மதுபன் வாசிகளுடன்: மதுபன் வாசிகளின் சேவையின் ஜொலிப்பு அனைவரையும் மதுபனுக்கு வர இழுக்கிறது. யாரிடம் கேட்டாலும் இது தான் எல்லோர் வாயிலிருந்தும் வருகிறது -மதுபன் மதுபன் தான் என! சேவையில் நம்பர்-1 அப்படித்தானே? நம்பர்-1'னா அல்லது நம்பர்வாரா? நம்பர்-1. பாப்தாதா மதுபன் வாசிகளை நம்பர்-1 திருஷ்டியில் தான் பார்க்கிறார். நம்பர்வார் அல்ல, நம்பர்-1. நம்பர்-1 தானே! தாதியிடம் எந்த ஒரு புகாரும் இல்லை. எல்லோரும் முழுமை அடைந்து கொண்டிருக்கிறீர்கள் ஆதலால் புகார்கள் இல்லை. நன்றாக உள்ளது. இருப்பினும் களைப்படையவில்லை தானே. மதுபனின் சேவாதாரிகளை அனைவரும் கேட்கிறார்கள். மஹா மண்டலேஸ்வரர் கூட இவ்வாறு கூறிச் சென்றார், மதுபன் சேவாதாரிகளை எங்களிடமும் அனுப்புங்கள், எனில் நம்பர்-1 ஆகி விட்டீர்கள் அல்லவா. நல்லது. உறுதியாகவும் இருக்கிறீர்கள், நல்லவர்களாகவும் இருக்கிறீர்கள், அப்படித்தானே. அப்படியில்லை பாப்தாதா ஏதோ அப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பது. பாப்தாதாவிற்கோ மிகவும் நன்றாக உள்ளது. மீதம் அவ்வப்போது அதிக வேலையாகி விடுகிறது; பாப்தாதாவும் பார்க்கிறார் அதிக சுமையும் ஆகி விடுகிறது, இருப்பினும்

அமரர்கள். அமர பவ என்ற வரதானம் கிடைத்திருக்கிறது, சரிதானே. அமரர் தானே? நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

நல்லது, டீச்சர்கள் எழுந்திருங்கள். சதா டீச்சர்களை இந்தப் பார்வையில் தான் பார்க்கிறார்கள் -ஒவ்வொரு டீச்சரின் லட்சணங்களில் பாப்தாதாவின் லட்சணங்கள் தெரிய வேண்டும்! முகத்தில் பிரம்மாதந்தையின் லட்சணங்கள் மற்றும் நெற்றியில் ஜோதி பிந்துவின் லட்சணம். எந்த ஒரு டீச்சரை பார்த்தாலும் அனைவரது வாயிலிருந்தும் இதுதான் வெளிப்பட வேண்டும் -இவரோ பாப் சமான் ஆனவர், இவரோ பிரம்மாபாபாவைப் போலிருக்கிறார், இவரோ சிவபாபாவைப் போலிருக்கிறார் என்பது. இருக்கிறீர்கள் மற்றும் ஆகத்தான் வேண்டும் எனில் டீச்சர்கள் தான் ஆதாரமூர்த்திகள். பிரம்மாதந்தையின் ஸ்லோகன் ஆக இருந்தது -நான் என்ன செய்கிறேனோ என்னைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள். பாப்தாதா பிரம்மாதந்தையின் ஆசனத்தை டீச்சர்கள் அனைவரும் அமர்வதற்காக தந்து விட்டார். முரளி கூறுவதற்கு நிமித்தமான டீச்சர்களுக்கு தந்தையின் ஆசனம் கிடைத்துள்ளது. டிராமா டீச்சர்கள் உங்களுக்கு மிக மிக உயர்ந்த பதவியை அளித்து உள்ளது. பாப்தாதாவும் எல்லா டீச்சர்களையும் இதே விசேஷ மகத்துவமத்தில்தான் பார்க்கிறார் -மகான்கள், மகத்துவம் வாய்த்தவர்கள் என! அப்படித்தானே? எப்போதாவது மாணவர்களிடமிருந்து சான்றிதழ் வாங்கலாமா? பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருக்கிறார். (பாபா டீச்சரை பிடித்துக் கொண்டு விட்டார்) இது அன்பினால் பிடித்துள்ளார், அப்போது தானே டீச்சர்கள் ஆனீர்கள். இப்போது தாதி காதை பிடிப்பார், தந்தையோ அன்பினால் பிடிப்பார். இருப்பினும் தைரியம் வைத்து நிமித்தம் ஆகி விட்டீர்கள்தானே. (தாதி கூறுகிறார் டீச்சர்கள் மிகவும் நல்லவர்கள்). மிகவும் நல்லவர்களா, வாழ்த்துக்கள்! நல்லவர்கள்தான், ஒருவேளை டீச்சர்கள் ஆகவில்லை என்றால் இத்தனை சென்டர்களை எப்படி திறந்தீர்கள்? உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். பாப்தாதாவும் கூட மிக மிக உயர்ந்த பார்வையுடன் பார்க்கிறார். டீச்சர்களும் நிறைய பேர் வந்துள்ளனர். நல்லது, தைரியம் மற்றும் உழைப்பிற்கு வாழ்த்துக்கள்.

மீதம் ஹாஸ்பிடல் காரர்கள் உள்ளனர்: ஆஸ்பத்திரிகாரர்கள் தங்களது புது வருடத்தின் ஊக்கம் உற்சாகத்தை நன்றாக எழுதி உள்ளீர்கள்

மற்றும் பாப்தாதாவிற்கு சதா நிச்சயம் உள்ளது மேலும் கவலையற்றும் இருக்கிறீர்கள்; எனில் ஆஸ்பத்திரி அனேக ஆத்மாக்களை பிராமண வாழ்க்கைக்கு கொண்டு வர முடியும். பிராமணர்களுக்கும் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் பிராமணர்களாகவும் ஆக்குகிறீர்கள். பெரிய பெரிய வி.ஐ.பி.க்கள் ஆஸ்பத்திரியின் பெயரைக் கேட்டு பிரபாவம் அடைந்து, இப்போது உங்களிடம் வருவார்கள். சார்ட் மிக நன்றாக எழுதி இருக்கிறீர்கள் மேலும் உறுதிமொழியும் நன்றாக செய்து உள்ளீர்கள். பாப்தாதாவிற்கு குஷி. அனைவரும் மிகுந்த ரசனையுடன் செய்துள்ளீர்கள். நல்லது. உங்கள் அனைவரது உறுதிமொழிக் கடிதத்தைப் படித்து விட்டு பாப்தாதா மகிழ்ச்சி அடைந்தார், ஆதலால் வாழ்த்துக்கள்!

இப்போது யாரெல்லாம் விஞ்ஞான சாதனம் மூலமாக பார்த்துக் கொண்டும், மகிழ்ச்சியடைந்து கொண்டுமிருக்கின்றார்களோ, அவர்கள் பாப்தாதா நம்மைப் பற்றிச் சொல்லவில்லை என்று நினைக்கிறார்கள். பாப்தாதா கூறுகின்றார், யார் எங்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் எழுந்திருங்கள் குஷியாகி விட்டார்கள். கேட்டு புன் முறுவல் செய்கிறார்கள். மகிழ்ச்சியடைகிறார்கள். பாப்தாதாவுக்கு எல்லா குழந்தைகளினுடைய ஆர்வம், உற்சாகம், அன்பு மிகவும் சிரேஷ்டமாக இருக்கின்றது. மனதார அன்பிருந்தால், நேரப்படி எப்படியோ வந்து சேர்ந்து விடுகிறார்கள். பார்த்தீர்களா? மிக உற்சாகத்தோடு கேட்கவும் செய்கிறார்கள். பார்க்கவும் செய்கிறார்கள், சிலர் பார்க்கிறார்கள். சிலர் பார்க்காவிட்டாலும், கேட்பவர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள். ஆதலால் பாப்தாதா புது யுகத்தின், புது வருடத்தின் ஒவ்வொரு குழந்தையையும் பெயருடன், விசேஷத்துடன் வாழ்த்துக்களை அளிக்கின்றார். அவர்களும் கூட கையை உயர்த்துகிறார்கள். அசைக்கிறார்கள். நல்லது.

எல்லா குழந்தைகளினுடைய கடிதங்கள். புத்தாண்டு வாழ்த்து மடல்கள், ஏராளமாக வந்திருக்கின்றன. பாப்தாதா கூறுகின்றார். குழந்தைகளே! உங்களுடைய கடிதங்கள் வருவதற்கு முன்பாகவே, உங்களுடைய ஹார்ட் (இதயம்) வந்து சேர்ந்து விட்டது. பாப்தாதா எல்லோருடைய உள்ளங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்.

செலவாகிறது என்றாலும், பிறகு இந்த வாழ்த்து மடல்கள் எல்லாம் ஞாபகார்த்தம் என்ற ரூபத்தில் இருக்கும். பாப்தாதா இதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றார். செலவைப் பார்ப்பதில்லை. பாப்தாதா குழந்தைகளினுடைய உள்ளத்திலிருந்து என்ன குரல் ஒலிக்கின்றது என்பதைப் பார்க்கின்றார். உள்ளத்தின் அன்பு கை மூலமாக கடிதத்தில் வரையப்படுகிறது. ஆதலால் கார்டு, மிகவும் நன்றாக ஒன்றைக் காட்டிலும், ஒன்று மிக நன்றாக தயாரிக்கப்பட்டுள்ளது. கார்டுகள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. எல்லோரும் பார்க்கலாம். நல்லது.

ஜூரிஸ்ட் மீட்டிங்கில் வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். ஜூரிஸ்டுகளுக்காக பாப்தாதாவிடம் ஒரு பாயிண்ட் இருப்பது தெரியுமா? என்ன பாயின்ட் பாக்கி உள்ளது. (கீதையின் பகவான்) இது பற்றி எப்போது பிளான் செய்யப்போகிறீர்கள்? புத்தகம் எழுதினீர்கள். நன்றாக இருக்கிறது ஆனால் ஒரு குரூப் தயார் செய்ய வேண்டும். இவர்கள் கூறுவது தான் சரி என்று நிரூபணம் ஆகவேண்டும். அதாவது ஒரு சிறு குரூப் தயார் செய்யலாமே. இந்த வருடமே தயாராக வேண்டும். ஏனென்றால், யார் இதைச் செய்யவில்லையோ, அவர்கள் செய்து காட்ட வேண்டும். இப்போது கூட, யாராவது, கீதையின் பகவான் யார் என்று நீங்கள் சொல்வது சரி என்று கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கட்டும். இப்படி எழுதிக் கொடுப்பவர். இதில் பிரசித்தமானவராக இருக்க வேண்டும். இந்த விஷயம் மிகவும் முக்கியமானது, இது அவசியம் எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்ற அதாரிட்டியுடன் சொல்லக்கூடிய, பிரசித்தமான ஒரு குரூப் தயாராக வேண்டும். செய்ய முடியும். இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. தார்மீக ஸ்தாபனங்கள் உள்ளன, தார்மீகத்தைச் சார்ந்த, நீதிபதிகள், வழக்கறிஞர்கள், இப்படிப்பட்ட தர்ம க்ஷேத்திரத்தை சார்ந்தவர்களின் விசேஷ நிமித்தமாக உள்ள ஒரு குரூப் தயார் செய்யுங்கள். இங்கே நிறைய மகாத்மாக்கள் வந்து போயிருக்கின்றார்கள் அல்லவா? நிறைய பேர் இருக்கின்றார்கள். நன்றாக உள்ளது. நன்றாக உள்ளது என்று சொல்லிச் சென்றார்கள் அல்லவா? இப்போது இவர்களிடமிருந்து இந்த வார்த்தையை எழுதி வாங்குங்கள். இரண்டு வர்க்கமும் சேர்ந்து இதைச் செய்யுங்கள். நடந்து விடும். இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. பொதுவாக எல்லா வர்க்கத்தினரும், ஒருவருக்கொருவர் சகயோகிகள் தானே, யாருடைய

சகயோகம் வேண்டுமோ அது கிடைக்கும் ஆனால் கொஞ்சம் செய்து காண்பிக்க வேண்டும் இதன் மூலமாகவே பிரத்யக்ஷம் ஏற்படும். ஜனங்களுக்கு புது விஷயம் வேண்டும். சரிதானே! செய்து காண்பிப்பீர்கள், நடக்கத்தான் போகிறது. எது கல்பத்திற்கு முன்பு நடந்ததோ அது ரிபீட் (மீண்டும்) ஆகத்தான் போகிறது. வரட்டும், வாழ்த்துக்கள். நல்லது. எப்போது வெவ்வேறு வர்க்கம் ஏற்படுத்தினீர்களோ அதன் மூலம் விருத்தியானதல்லவா? மேலும் ஒவ்வொரு வருக்கும் நாம் ஏதாவது செய்து காட்ட வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது ஆனால் வாரிசுகள் தயாராகவில்லை. ஒவ்வொரு வர்க்கத்தினரும் வாரிசு தயார் செய்ய வேண்டும். இப்போது கலந்து வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்போது கடைசியாக, வாரிசு மாலை தயார் செய்யுங்கள். எப்படி ஆதியில் கொஞ்சம் நிமித்த வாரிசுகள் ஆனார்களோ, அதேபோல கடைசியிலும் கூட வாரிசு குவாலிட்டி நிமித்தமாவார்கள். நல்லது.

மகாராஷ்டிர சேவாதாரிகள்: பொதுவாக எல்லோருக்கும் வாழ்த்துக்கள் கிடைத்து விட்டது. எனினும் யாரெல்லாம் சேவை மூலமாக மிகப் பெரிய புண்ணியத்தை சேமித்தார்களோ, அவர்களுக்கு சேவைக்காக, புண்ணியத்தின் வாழ்த்துக்கள். இந்த புண்ணியம் ஒன்றும் குறைந்தது அல்ல. இதுவும் கூட வாழ்க்கையில், சகஜமாக சேமிக்கக்கூடிய கணக்கை அதிகமாக்கி விடுகிறது. ஏனென்றால் பிராமணர்களின் மகிழ்ச்சி, திருப்தி புண்ணியக்கணக்கை அதிகரிக்கிறது. ஆதலால் இந்த வாய்ப்பு மிகவும் நல்லது. ஒவ்வொரு ஜோனைச் சேர்ந்தவர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இது நல்லது. நன்றாக இருக்கிறதல்லவா? புண்ணியமும் சேமிப்பாகிறது. நெருக்கமான சம்மந்தத்திலும் வர முடிகிறது. ஆதலால் மகாராஷ்டிரத்தின் சேவைக்கு வாழ்த்துக்கள். நல்லது.

உலகின் நாலா பக்கங்களிலுமுள்ள சர்வ வெற்றி மூர்த்தி குழந்தைகளுக்கு, தீவிர புருஷாரத்தி குழந்தைகளுக்கு, சதா தங்களுடைய கணக்கை சோதித்து, பார்க்கும் சோதனையாளர்களுக்கு, மற்றும் வருங்காலத்தை உருவாக்குபவர்களுக்கு இப்படிப்பட்ட சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னுடைய ஒவ்வொரு அடியிலும் பாபாவை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய கிரேட், கிரேட், கிரேண்ட் ஃபாதர்

உடைய, சர்வ கிரேண்ட்சன்ஸ்'களுக்கு (பேரன்கள்) தந்தை மற்றும் தாதாவின் மிக, மிக, மிக, மிக அன்பு நினைவுகள், வாழ்த்துக்கள், மற்றும் நமஸ்தே.

(டெல்லி மற்றும் சோனிபட், பவன் நிர்மாணம் பற்றி பாப்தாதாவின் சூசக அறிவிப்பு): எல்லா பிராமண பரிவாரத்தினருடைய சமாச்சாரம், கடிதங்கள் மூலமாக தெரிந்து கொண்டேயிருக்கின்றீர்கள். தற்சமயம் உங்கள் எல்லோருடைய சங்கல்பத்திலும், சகயோகத்திலும், என்ன நினைவு இருக்கிறது? நம்முடைய இராஜதானியில், அதாவது உங்களுடைய இராஜதானி எது? மதுபன் வீடு. இராஜ்யம் எங்கே செய்ய வேண்டும்? டெல்லியில் செய்ய வேண்டும். மதுபனில் அல்ல. மதுபனில் கிருஷ்ணருடைய மஹால் நிர்மாணிக்கப்படுமா? அல்லது டெல்லியில் நிர்மாணிக்கப்படுமா? மதுபனில் நிர்மாணிக்கப்படமாட்டாது. அப்படியானால், இராஜதானி நினைவுக்கு வருகிறதல்லவா? எல்லோருக்கும் இராஜதானி நினைவு இருக்கிறதா? ஆதலால் எல்லோருடைய சகயோகத்தின் மூலம் இப்போது இராஜதானியில் விசேஷ ஸ்தானம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் எல்லோரும் விதை போட்டிருக்கிறீர்கள். எல்லோருமே போட்டிருக்கிறீர்களா? ஏனென்றால், விதை போட்டால் தானே, பழம் சாப்பிட முடியும். விதை போடா விட்டால், பழம் எப்படி சாப்பிட முடியும்? ஆதலால் எல்லோரும் விதை போட்டிருக்கிறீர்கள். இன்னும் போட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஏனென்றால், இந்த விதை மூலமாக, அநேக விதமான பிரத்யக்ஷ பலன் கிடைக்கும். ஆதலால் நீங்கள் எல்லோரும், உங்கள் ஒவ்வொருவருடைய தரப்பில், இந்த வெற்றி ஆண்டில் எல்லாவற்றையும் பயனுள்ளதாக்கத்தான் வேண்டும். எல்லா பொக்கிஷங்களையும் பயனுள்ள தாக்க வேண்டும் அத்துடன் விதையும் போட வேண்டும். போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். போட்டுக் கொண்டேயிருப்பார்கள். சரி தானே! போட்டுக் கொண்டேயிருப்பீர்கள் அல்லவா! யாராவது எல்லாம் முடிந்து விட்டது என்று நினைப்பவர்கள் இருந்தால் கை உயர்த்துங்கள் எதுவரை சேவை இருக்கிறதோ, அதுவரை சேவையில் விதை போட்டுக் கொண்டே இருங்கள். பிறகு பலனும் எல்லோரும் சாப்பிட வேண்டும். எப்போது பிரத்யக்ஷத்தாவின் பலன் வருமோ, அப்போது எல்லோரும் சாப்பிடலாம். டெல்லி வாசிகள் மட்டுமல்ல. எல்லோரும்

சாப்பிடுவார்கள். பாப்தாதாவிடம் அன்பு இருக்கிறதல்லவா? அப்படியானால் சேவையிலும் அன்பு இருக்கும். மேலும் சேவையில் பலனும் அன்பு நிறைந்தது தான். சரி, யார், யாரெல்லாம் வந்திருக்கிறார்கள்? மானேசர் பூமியில் சேவாதாரி யார், யார் வந்திருக்கிறார்கள், எழுந்திருங்கள். நல்லது. சேவை நன்றாக நடந்து கொண்டிருக்கிறதல்லவா? இன்னும் நன்றாக நடக்கும். நன்றாக நடக்கிறது. நன்றாக நடந்து கொண்டே இருக்கும். பாபாவின் சேவாஸ்தானத்திற்கு, பாபாவின் வரதானம் கிடைத்திருக்கிறது. நடக்கத்தான் போகிறது. எல்லோருடைய சகயோகத்தின் மூலம் சேவை வெற்றி பெறும். சரிதானே! நல்லது. எப்படி ஆர்வம், உற்சாகத்துடன், பேகத் விருத்தியுடன் ஸ்தானம் தயாராகிக் கொண்டிருக்கிறதோ, அதேபோல பேகத் விருத்தி, திருஷ்டி மற்றும் சேவை மூலமாக, வெற்றியும் பேகத் ஆகவே இருக்கும். எல்லாம் பேகத் ஆகி விடும். நீங்களும் பேகத்தில் இருக்கிறீர்கள் அல்லவா? இது டெல்லியைச் சார்ந்தது என்று நினைக்கக் கூடாது இது நம்முடையது. ஏனென்றால், பிரத்யக்ஷதா விதை உங்கள் எல்லோருடையது. நிமித்தமாக டெல்லி உள்ளது ஆனால் பலன் நீங்கள் எல்லோரும் சாப்பிட வேண்டும். சேர்ந்து சாப்பிடுவீர்கள். ஆதலால் தான் பாப்தாதாவுக்கும் கூட குஷியாக இருக்கிறது. பேகத் ஆர்வம், உற்சாகத் துடன், பேகத் சேவை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நல்லது. சோனிபட்டும் தயாராக வேண்டும். அதுவும் டெல்லி தானே! அங்கு வேறு யாரிருந்தாலும் டெல்லி தானே! (லண்டனில் கூட டைமண்ட் ஹவுஸ் கட்டப்பட்டு வருகிறது)) பாருங்கள். வெளிநாடு சதா குதித்து எழுந்து கொண்டே இருக்கிறது. வெளிநாடு ஜம்ப் செய்யக் கூடாது என்று நினைக்கவே கூடாது. இங்கே டைமண்ட் ஹவுஸ் கட்டப்பட்டதால், அங்கேயும் கூட அவசியம் இருக்கத்தான் வேண்டும். (மினி ஹவுஸ்) தயாராகிக் கொண்டிருக்கிறது. சிறியதிலிருந்து பெரிய லைட் ஹவுஸ், கிடைத்து விடும்.

ரோஸி சகோதரி மிகுந்த உள்ளன்போடு நினைவுகளை அளித்திருக்கின்றார். பாப்தாதாவும் அதேபோன்று உள்ளன்போடு நினைவு செய்கிறார். பாப்தாதா குழந்தைகளைச் சந்தித்து மகிழும்போது புத்தாண்டு வாழ்த்து கூறினார். நாலா பக்கங்களிலுமுள்ள, வெற்றி நட்சத்திரங்களுக்கு, பழைய ஆண்டுக்கு விடை கொடுப்பது, மற்றும்

புத்தாண்டை வாழ்த்துவது என்ற இந்த இரண்டுக்குமிடையேயான சங்கம நேரத்தில் விடை கொடுத்து, வாழ்த்துக்களையும் அளித்தார். ஆதலால் சதா வெற்றியுடன் இருக்கிறீர்கள். அவ்வாறே வெற்றியுடன் இருப்பீர்கள். ஒரு போதும் தோல்வி என்ற பேச்சுக்கே இடமிருக்காது பாப்தாதாவின் அதிகப் பிரியமுள்ள அதிக அன்புள்ள, அதிக இனிமையுள்ள, கண்ணின் மணி நீங்கள் எல்லோரும் நம்பர்-1 ஆகத் தான் வேண்டும். இந்த திட சங்கல்பத்தோடு ஒவ்வொரு அடியையும் பாபா சமானமாக எடுத்து வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். நூறு மடங்கு, கோடான கோடி மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

**31-டிசம்பர், இரவு 12-மணிக்குப் பிறகு, (ஜனவரி-1, 2002) தாதிஜி அனைவருக்கும் குட்மார்னிங் கூறினார்.** இன்று புத்தாண்டு மற்றும் பழைய ஆண்டின் சங்கமத்தில் பாபா என்ன உறுதிமொழி எடுக்கச் சொன்னாரோ, அதன்படி நடப்போம். மேலும் எல்லோரிடமும் மிக மிக அன்போடு, ஹேப்பி நியு இயர், ஹேப்பி நியூ இயர், குட்மார்னிங்.

பாப்தாதா விடைபெறும்போது: பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் குட்மார்னிங், டைமண்ட் மார்னிங் கூறினார்! பாப்தாதாவின் மிக மிக விலை மதிக்க முடியாத வைரங்களுக்கு, டைமண்ட் மார்னிங். டைமண்ட் மார்னிங்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂